# எலிகள் கேட்டுச் சொன்ன திருக்குறள்க் கதைகள்




## என்னுரை

திருக்குறளைப் பற்றி முப்பதிற்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதி வெளியிட்டுள்ளேன். திருக்குறள்க் கதைகள், உரை, யாழ்ப்பாணத்துரை, இலக்கியநயம் போன்றவற்றை எழுதிய பின்பு, திருக்குறளை மிகவும் குறைந்த நேரத்தில் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக மிகமிகச் சிறிய கதைகளாக எழுதியுள்ளேன். உச்சில் குளத்து வரம்புகளில் வாழ்ந்த எலிகள் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் அருகிலுள்ள பாடசாலையில் மக்களோடு சேர்ந்து இடம்பெயர்ந்து வருகின்றன. அங்கு நடைபெறும் சம்பவங்களைப் பார்த்தும், அங்கு பேசப்படும் பேச்சுக்களைக் கேட்டும் தமக்குள் தாமே கதைக்கின்றன. இக்கதையில் எலிகள் கல்வி, சமூகம், பொதுத் தொண்டு, சமயம், வேதஉபநிடதங்கள் பற்றியெல்லாம் பேசுகின்றன. நான் பதினைந்து வருடங்கள் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினேன். அப்போது பாடசாலையின் தேவைகள் முழுவதையும் செய்து முடித்தேன். அப்போதிருந்தே பாடசாலைக் காணியில் சில பிரச்சினைகள் இருந்தன. நாவலர் பருத்தித்துறை வீதியால் சென்று வரும் போது வீதியோரமாக சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாது விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டு, மனம் வருந்தி ஒரு பாடசாலையை தாபித்தார். நாவலருக்குக் கோப்பாயில் காணிகள் இருக்கவில்லை. அப்போது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களில் பலர் சிதம்பரம் கோவிலுக்கு தமது காணிகளை நன்கொடையாக எழுதினர். அவற்றை நாவலர் பராமரித்து வரிகளைப் பெற்று கோவிலுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அப்படியான ஒரு காணியில் தான் நாவலர் இரண்டு சுண்ணாம்புக்கல்

மண்டபங்களை அமைத்துப் பாடசாலையை ஆரம்பித்தார். காலப்போக்கில் மாணவர்களின் தொகை குறைவடைந்ததால் பாடசாலையை மூடவேண்டிய நிலை உருவானது. அவ்வமையம் நாவலர் காலமாக நாவலர் பராமரித்த காணிகளை மக்கள் கைப்பற்றிக் கொண்டனர். இன்று அதனால் பெரும் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. பாடசாலைக் காணியின் உண்மை நிலையை அறிய வேண்டுமானால் யாழ்ப்பாணத்திலுள்ள சைவபரிபாலன சபையூடாக தமிழ்நாட்டிலுள்ள சிதம்பரக் கோவிலுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இதை இன்றைய பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் செய்தல் வேண்டும். நான் பாடசாலையில் கடமையாற்றும் போது பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் எவரும் பாடசாலை மீது அக்கறை கொள்ளவில்லை. அதனால் விளையாட்டு மைதானம் வாங்கிய போதும், நீர்த்தாங்கி அமைத்த போதும் பெரும் சிரமப்பட்டேன். அந்த நிலையில்லாது இன்றைய பெற்றோர் முன்னின்று அதிபருக்கு உதவுதல் வேண்டும்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு பஞ்சதந்திரக் கதைகளில் மிருகங்கள் கதைத்துள்ளன. இப்போதும் மிருகங்கள் கதைப்பதாகப் பல படங்கள் உருவாகியுள்ளன. அந்த வகையில் இக்கதைகளை ஏற்று விமர்சியுங்கள். இக்கதைகளுக்கான அட்டைப் படத்தை வடிவமைத்து, கதையைக் கணனி மயப்படுத்தித்தந்த ப.யாழினிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

கே.வி.குணசேகரம்

# எலிகள் கேட்டுச் சொன்ன திருக்குறள் கதைகள்

வைத்திலிங்கம் மத்திய மகாவித்தியாலயம். அவ்வூரில் மிகவும் பெரிய தரமான பாடசாலை. கந்தர் வைத்திலிங்கம் என்பவர் அவ்வூரில் பாடசாலை இல்லாததால் பிள்ளைகள் நெடுந்தூரத்திற்குச் சென்று கல்வி பயில முடியாது கஷ்டப்பட்டதால் அவ்வூரில் ஒரு சிறிய ஓலைக் கொட்டில் அமைத்து அவ்வூரில்வாழ்ந்த கற்றவர்களைக் கொண்டு அவ்வூர்ப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தார். அது பின் அரசால் சுவீகரிக்கப்பட்டுப் பெரும் பாடசாலையாக வளர்ந்தது. அதனால் அயல் ஊர்களில் இருந்தும் ஏராளமான மாணவர்கள் வந்து கல்வி கற்றனர்.

மாணவர்களுக்குத் தினமும் மதிய உணவு வழங்குவதால் அங்கு பல நாய்களும், காகங்களும், எலிகளும் நிரந்தரமாகத் தங்கிவிட்டன.

## கடவுள் வாழ்த்து - 1

1. **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

   **பகவன் முதற்றே உலகு.**

கடந்த பத்துத் தினங்களாகப் பெரு மழை பெய்தமையால் பாடசாலை காலவரையறையின்றி மூடப்பட்டது. ஊர்முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளித்தது. பெருமழைக்கிடையே மின்னலும் இடியும் இடித்து அக்கிராமத்தை அச்சுறுத்தியது.

பாடசாலையில் எலிகளைத் தவிர வேறு யாரும் இல்லை. தந்தை எலியான குமரனும், தாய் எலியான லட்சுமியும், அதன் பிள்ளைகளும் குளிரால் நடுநடுங்கின. அடிக்கடி அங்கு வந்து செல்லும் அதிபரும், ஆசிரியர்களும் அக்கிராம மக்கள் வெள்ளத்தாலும், உணவின்றியும் கஷ்டப்படுவதாகவும் பல தொற்று நோய்கள் மக்களுக்குத் தொற்றியதால் அவர்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் கதைத்தது எலிகளுக்குக் கேட்டது.

‘‘பிள்ளைகளே நாம் மாணவர்களுக்காகச் சேமித்து வைக்கப்பட்ட உணவு வகைகளை உண்கிறோம். நாம் வயல் வெளிகளில் அல்லது வீடுகளில் வசித்திருந்தால் இறந்திருப்போம்’’ என்றது குமரன் எலி.

‘‘பத்து நாட்களாக நாம் சூரியனைக் காணவில்லை. ஆதனால் குளிர்வாட்டுகிறது’’ என்றது லட்சுமிஎலி.

‘‘சூரியன் உதிக்காவிட்டால் எதுவும் நடக்காது என்றும் தாவரங்கள் சூரியனின் உதவியால் தான் உணவுகளைத் தயாரித்துத் தாமும் உண்டு மக்களுக்கும் கொடுக்கின்றன என்றும் விஞ்ஞான ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது கேட்டேன். உலகிற்கு ஏற்படும் ஆக்கமும், அழிவுகளும் சூரியனால் தான் ஏற்படுகின்றதென்றும் ஆசிரியர் கூறினார். எழுத்துக்களுக்கு அகரம் முதலாக இருப்பது போல உலகிற்கு முதலாக இருப்பவன் சூரியன் என்றும் கூறினார். சூரியன் உதித்தால் நான்கு நாட்களில் கிராமம் பழைய நிலைக்குத் திரும்பிவிடும்’’ என்றது குமரன் எலி.

2. **கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**

   **நற்றாள் தொழாஅர் எனின்.**

அன்று அவ்வூர்த் தமிழ்ச் சங்கத்தின் கூட்டம் அப்பாடசாலையில் நடைபெற்றது. அந்தப் பிரதேசத்திலுள்ள அறிஞர்கள் எல்லோரும் அதில் கலந்து கொண்டனர். அன்று அறிஞர் ஒருவர் எழுதிய நூலைப் பற்றிய விமர்சனம் நடைபெற்றது. அங்கு பேசிய பலர் நூலை முழுமையாக வாசிக்கவில்லை என்று அவர்களின் பேச்சில் இருந்து தெரிந்தது. அதனால்

அவர்களுக்குள் பெரும் விவாதம் ஏற்பட்டது. அதனால் அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேச ஆரம்பித்தனர். அவைத் தலைவரின் பேச்சையும் அவர்கள் மதிக்கவில்லை.

குமரன் எலி தனது மனைவியையும், பிள்ளைகளையும் அழைத்துச் சொன்னது, ''பகுத்தறிவுள்ள மனிதர்களின் செயலைப் பாருங்கள். தாம் பேசவேண்டியவற்றை மறந்து குதர்க்கமாகப் சண்டைபிடிக்கின்றனர். எல்லோரும் பல பட்டங்களைப் பெற்றவர்கள். கற்றவர்கள் மற்றவர்களை மதிக்க வேண்டும். அப்படி மதிக்காவிட்டால் அவர்கள் கற்ற கல்வியால் என்ன பயன் ஏற்படப்போகிறது.''

''மனிதர்கள் தாமும் செய்யமாட்டார்கள், செய்பவனில் குறை காண்பார்கள். இது அவர்களது பிறவிக்குணம். முன்பு சிவபெருமான் தருமிக்கு எழுதிக்கொடுத்த செய்யுளிலேயே குற்றம் கண்டு பிடித்தவர்களல்லவா? இப்போது பிரச்சினைப்படுவார்கள். பின் எதுவும் நடக்காது நீங்கள் பேசாமல் இருங்கள்'' என்றது லட்சுமி எலி.

**3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**

**நிலமிசை நீடுவாழ் வார்.**

அன்று பாடசாலையின் நிறுவுனரான கந்தர் வைத்திலிங்கத்தின் குருபூசை பொது மண்டபத்தில் நடைபெற்றது. விழாக்கள் நடைபெற்றால் அங்கு நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்து ரசிப்பதற்காகக் குமரனும், லட்சுமியும், பிள்ளைகளும் அங்கு சென்று விடுவார்கள். அன்று நமசிவாயகம் சுவாமியார் உரையாற்றினார்.

''எனது அருமைப் பிள்ளைகளே, இறைவன் மலர்களின் மீது அமர்ந்திருக்கின்றான். ஒவ்வொருவரது மலர் போன்ற இதயத்தில் இறைவன் வீற்றிருக்கிறான். அதனால் தான் நாம் இறைவனை மலர்களால் அர்ச்சிக்கிறோம். அமரர் வைத்திலிங்கம் நூறு வயது கடந்தும் வாழ்ந்தவர். அவர் தனது வாழ்வின் இரகசியங்களை மக்களுக்கு அடிக்கடி கூறுவார். நான் மலர் மீது அமர்ந்திருக்கும் இறைவனை மலர்களால் அர்ச்சிப்பதால் தான் நூறு வயது கடந்தும் திடகாத்திரமாக வாழ்கிறேன்'' என்று கூறுவார். நெடுநாட்களுக்கு நீங்கள் வாழவேண்டுமானால் மலர்களின் மேல் அமர்ந்திருக்கும் இறைவனை வணங்குங்கள்''என்றார்.

''உண்மை தான். கதிரவேலு ஆசிரியர் தினமும் காலையும், மாலையும் பாடசாலையில் உள்ள பிள்ளையாரை வணங்குவார். அவர் ஓய்வெடுத்த பின்பும் பாடசாலைக்கு வந்து கற்பிக்கிறார். கடவுளில் நம்பிக்கையில்லாத அகிலேஸ்வரன் ஆசிரியர் மாணவர்களுக்கும் கடவுளை நம்பக்கூடாது என்று கூறுவார். அதனால் அதிபரின் தண்டனைக்கும் உள்ளானவர். அவர் துவிச்சக்கரவண்டியில் பாடசாலைக்கு வரும் போது எதிரே வந்த வாகனத்தைக் கடக்கும் போது தடுமாறி விழுந்ததால் மரணமானார். கடவுளை வணங்கியிருந்தால் பலவீனம் ஏற்பட்டிராது'' என்றது குமரன் எலி.

**4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**

**யாண்டும் இடும்பை இல.**

''அன்பார்ந்த பிள்ளைகளே, விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை உறுதியாய் நினைப்பவர்களுக்கு வாழ்க்கையில் எந்தத் துன்பமும் உண்டாகாது. அமரர் வைத்திலிங்கம் அவர்கள் கடவுளின் மீது அளவில்லாத நம்பிக்கை உடையவர். அவர் தான் செய்யும் செயல்கள் அனைத்தையும் கடவுளிடம் ஒப்படைத்து விட்டுச் சொல்வார். ''எனது கடமை முடிந்து விட்டது. இனி அவன் செயல். அவன் செயலை முடித்து வைப்பான்''என்பார். செயல்கள் யாவும் நல்ல படி முடிவடையும்.

''உண்மை தான் லட்சுமி. கதிரவேலு ஆசிரியரும் அப்படித் தான் சொல்வார். எந்த விடயத்திலும் பாகுபாடு காட்டமாட்டார். அவர் உயர்தரத்தில் கற்கும் வறிய மாணவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வார். அதனால் தானோ என்னவோ அவரின் இரண்டு பிள்ளைகள் வைத்தியர்கள். இரண்டு பிள்ளைகள் பொறியியலாளர்கள். எந்தவிதமான குறைகளும் இல்லாமல் மிகவும் சந்தோசமாக வாழ்கிறார் அவர்'' என்றது குமரன் எலி.

‘‘உண்மை தான் தன்னுடைய பிள்ளைகளை மட்டும் கவனத்தில் எடுக்கும் உருத்திரகுமார் ஆசிரியரின் மூன்று பிள்ளைகளும் ஏ எல்லில் சித்தியடையவில்லை. விருப்பு வெறுப்பில்லாத இறைவனை வணங்குவோரும் விருப்பு வெறுப்பில்லாமல் வாழ்ந்தால் தான் பெருவாழ்வு வாழலாம்’’ என்றது லட்சுமி எலி.

**5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**

**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

‘‘அன்பான மாணவர்களே, கடவுளின் மகிமையை உணர்ந்து அவரது திருவடிகளைப் போற்றுபவர்களுக்கு பிறவிக்குக் காரணமான இருவினைகளும் தொடரமாட்டாது’’ என்று பெரியவர்கள் கூறுவார்கள். நல்வினையை அனுபவிக்கும் போது சில சமயம் எம்மை அறியாமல் அவை தீவினைகளாகவும் மாறும். அதை உணர்ந்த அமரர் வைத்திலிங்கம் நல்வினைகளையும்,தீவினையாகவே கருதுவார். ஒருமுறை அதிஷ்ட இலாபச் சீட்டின் மூலம் அவருக்குப் பல இலட்சம் ரூபா கிடைத்தது. அதை அவர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தமது பிள்ளைகளுக்குக் கொடுக்காது இப்பாடசாலைக்கு ஒரு கட்டிடம் கட்டினார். ஏன் அதை அப்படிச் செய்தீர்கள் என்று சிலர் கேட்ட போது சொன்னார், ‘‘இது கடவுள் தந்த பணம். நான் எனது பிள்ளைகளுக்குக் கொடுக்க அவர்கள் அதைத் தவறான வழியில் செலவு செய்தால் அதனால் வரும் பாவம் என்னையும் தொடரும். அதனால் தான் நான் கொடுக்கவில்லை’’ என்றார். அதே சமயம் அவரது பிள்ளைகள் இருவருக்கு நல்ல வேலை கிடைத்தது. இறைவன் ஒவ்வொருவரும் செய்யும் செயல்களை உற்று நோக்குவதால் அவரவருக்கான பயனைக் கொடுப்பார்’’ என்றார் சுவாமியார்.

‘‘உண்மை தான். உருத்திரகுமார் ஆசிரியர் கோவில் தலைவராக இருக்கிறார். அவர் சரியாகக் கணக்குக் காட்டுவதில்லை என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். சென்றவாரம் பெய்த பெருமழையின் போது மின்னல் தாக்கியதால் அவரது பெறுமதிமிக்க வீடு முற்றாக அழிந்து விட்டது. எல்லோரும் கடவுளை வணங்க வேண்டும். பிறவிக்குக் காரணமான இருவினைகளும் தம்மைத் தொடராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்’’ என்றது குமரன் எலி.

**6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**

**நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

‘‘பிள்ளைகளே, ஐம்பொறியான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றால் வரும் உணர்வுகளை அடக்கிய கடவுளை பேரன்புடனும், மனச்சுத்தத்துடனும் வணங்குவோர் வாழ்நாள் முழுவதும் இன்பமாக வாழ்வார்கள்’’ என்றார் நமசிவாயகம் சுவாமிகள்.

‘‘சுவாமியாரின் பேச்சை நாம் எத்தனை முறை கேட்டுள்ளோம். அவர் கூறுவது அனைத்தும் உண்மை. கதிரேசன் பெரும் வசதி படைத்தவரல்ல. அவர் ஒழுக்கமானவர். பிறரின் பொருட்களில் ஆசைப்படாதவர். பெண்களைத் தாயாக நினைப்பவர். தன்னால் இயன்ற உதவிகளைப் பாடசாலைக்கும் மக்களுக்கும் செய்பவர். கடவுளை பேரன்புடன் வணங்குபவர். அவர் ஒரு போதும் துன்பப்பட்டதை நாம் கண்டதில்லை என்று இப்பாடசாலையின் அதிபர் அடிக்கடி கூறுவார். இங்கு கற்பிக்கும் இராமநாதன் ஆசிரியரின் மனைவியும் ஆசிரியை. பெரும் பணக்காரன். பாடசாலைக்கோ கோவிலுக்கோ எதுவும் கொடுப்பதில்லை. ஆனால் விதண்டா வாதமிடுவார். யாருடனும் ஒத்துப் போகமாட்டார். சென்றவாரம் அவர் தெருவில் செல்லும் போது இனந் தெரியாத சிலர் அவரைக் கடுமையாகத் தாக்கியதால் இரண்டு வாரங்கள் பாடசாலைக்கு வரவில்லை. கடவுளைப் பேரன்புடன் வணங்குபவன் உயிர்களுக்குத் துன்பம் செய்யமாட்டான்’’என்றது குமரன் எலி.

‘‘தினமும் காலையில் பெரியவர் ஒருவர் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் நற்சிந்தனைகளைச் சொல்கிறார். சொல்கின்றவரே பின்பற்றுகிறாரோ தெரியாது. அவர்கள் சொல்வது போல வாழ்ந்தால் உலகத்தவருக்குத் துன்பமே வராது’’ என்றது லட்சுமி எலி.

7. **தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**

**மனக்கவலை மாற்றல் அரிது.**

‘‘பிள்ளைகளே, தனக்கு ஒப்புவமை இல்லாத கடவுளின் திருவடிகளைச் சரணடைந்து இடையறாது தொழுபவர்களுக்கு எந்தத் துன்பங்களும் வராது. அதனால் அவர்கள் கவலைகள் இன்றி வாழ்நாள் முழுவதும் இன்பமாக வாழ்வார்.கள்’’ என்றார் நமசிவாயகம் சுவாமிகள்.

‘‘கதிரேசனைப் போல ஒரு நல்ல மனிதரைக் காணமுடியாது. அவர் தான் வணங்கும் கடவுளை முழுமையாக நம்பி மனச் சுத்தத்துடன் வணங்குவதால் அவருக்கு வரும் துன்பங்களைக் கடவுள் தானே ஏற்றுக்கொள்கிறார். அதனால் அவர் மகிழ்வுடன் வாழ்கிறார். சில வருடங்களுக்கு முன்பு அவர் மிகுந்த கஷ்டத்தில் வாழ்ந்ததால் அவர் தனது தோட்ட நிலத்தை சின்னத்துரையிடம் அடைமானம் வைத்தார். சின்னத்துரை மிகவும் நல்லவர். கதிரேசனின் நண்பர். அவர் அந்த நிலத்தின் உறுதியை வழக்கறிஞரைக் கொண்டு எழுதிக் கொடுத்து விட்டுத்தான் பணம் வாங்கினார். அதை வாங்க மறுத்தார் சின்னத்துரை. இருப்பினும் வற்புறுத்திக் கொடுத்தார் கதிரேசன். இரண்டு வருடங்கள் கழிந்தன. திடீரென்று சின்னத்துரை இறந்துவிட்டார். அவரது மகன் இராகுலன் தீயவன். அவன் கதிரேசுவின் நிலத்தை அபகரிப்பதற்காக உறுதியைத் தேடினான். கிடைக்கவில்லை. சின்னத்துரை அதை வாங்கிப் பதிவுக்கு அனுப்பவில்லை. கதிரேசுவின் மருமகனான அருணாசலம் மாமன் வாங்கிய பணத்தைச் சின்னத்துரைக்குக் கொடுத்து விட்டு உறுதியை வாங்கிக் கிழித்து விட்டான். கதிரேசன் பணம் தந்தால் தன்னிடம் தருமாறு கூறிச் சென்றான்.

இது தெரியாத இராகுலன் வீடு முழுவதும் தேடிய போது சின்னத்துரை எழுதிய கையேடு ஒன்றிருந்தது. அதில் கதிரேசன் பணம் கொடுத்து விட்டதாக எழுதப்பட்டிருந்தது. இதை அறிந்த கதிரேசன் மிக்க வருத்தமடைந்து தான் கொடுக்க வேண்டிய பணத்தை இராகுலனுக்குக் கொடுத்தார்’’ என்று அதிபர் ஆசிரியர்களுக்குக் கூறும் போது கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘கடவுளை வணங்குவோருக்கு மனக்கவலைகள் எதுவும் வராது’’என்று சுவாமியார் கூறுவதை நீங்கள் கேட்கவில்லையா..?’’என்று கேட்டது லட்சுமி எலி.

8. **அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்**

**பிறவாழி நீதந்தல் அரிது.**

‘‘இறைவனது திருவடிகளை பேரன்புடன் வணங்காதவர்களால் பொருட்கள், இன்பம் ஆகியவற்றில் இருந்து வரும் துன்பங்களை நீக்க முடியாது. ஆதலால் பிள்ளைகளே,‘‘கடவுளைப் பேரன்புடன் வணங்குங்கள். ஆதனால் துன்பங்கள் எவையும் உங்களை வந்தடைந்து வருந்தாது’’ என்றார் நமசிவாயகம் சுவாமிகள்.

‘‘உண்மை தான். இராமநாதனும் மனைவியும் ஆசிரியர்கள். ஏராளமான சொத்துக்கள் இருக்கிறது. அவரது தகப்பனாரும் இராமநாதனைப் போலவே தீயவர். அவரது மகள் காயத்திரி தகப்பனின் சகோதரியின் மகனான ஆரூரனைக் காதலித்து அவனுடன் சென்று விட்டாள். இராமநாதனின் தந்தை அருமைநாதன் தனது சகோதரியுடன் காணிச் சண்டையில் ஈடுபட்டமையால் அவர்களை வெறுத்து ஒதுக்கியவர். அதனால் காயத்திரியையும் வெறுத்து விட்டார். இப்போது காயத்திரியின் குடும்பம் மிகவும் கஷ்டப்படுகிறது. அருமைநாதன் இறந்துவிட்டார். அதனால் காயத்திரிக்குச் சேரவேண்டிய சொத்துக்களைக் கொடுக்காது காவல் நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இராமநாதன் சென்று கொண்டிருக்கிறார். பாடசாலையில் அவர் கற்பிக்காததால் அதிபரும் பெற்றோரும் அவரை இடமாற்றம் செய்யும் படி போராட்டம் நடத்துகின்றனர். பணம், பொருள் இருந்தும் நிம்மதி இல்லாமல் இராமநாதனும் குடும்பத்தவர்களும் துன்பப்படுகிறார்கள்’’ என்றது குமரன் எலி.

“இராமநாதன் கோவிலுக்குக் கூடச் செல்வதில்லை. கடவுளை அன்புடன் வணங்குபவர்களுக்குத் துன்பங்கள் வராது என்று சுவாமியார் பாடசாலையில் பலமுறை கூறியும் அவர் கேட்காததால் தான் துன்பப்படுகிறார்” என்றது லட்சுமி எலி.

**9. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**

**தாளை வணங்காத் தலை.**

“பிள்ளைகளே, கேட்காத செவி, பார்வையில்லாத கண்களைப் போல கடவுளை வணங்காதவனின் தலையும் பயனற்றதாகும். ஆதனால் நேரங்கிடைக்கும் போதெல்லாம் கடவுளை வணங்குங்கள்” என்றார் சுவாமியார்.

“இராமநாதன் யார் சொன்னாலும் கேட்கமாட்டான். அதனால் யாரும் அவனுக்கு எதுவும் சொல்வதில்லை. காயத்திரியின் குடும்பம் படும் துன்பங்களைக் கண்டும் அவன் இரங்குவதில்லை. கருணை இல்லாத கண்கள் குருட்டுக் கண்கள். சென்றவாரம் காயத்திரியின் மகனுக்குக் காய்ச்சல் நோய் வந்தது. மருந்து வாங்க அவர்களிடம் பணம் இல்லை. அதை அறிந்த கதிரேசன் மருத்துவச் செலவுக்கான முழுப்பணத்தையும் கொடுத்ததோடு செலவுக்கும் பணம் கொடுத்தார்” என்றது குமரன் எலி.

“தலையினுள்ளே தான் மூளை இருக்கு. மனமும் அங்கேதான் இருக்கு. கடவுளை வணங்காதவரின் மனமும் மூளையும் செயலற்றே இருக்கும். செவிடான காது போலவும், குருடான கண்களைப் போலவும் மூளையும் செயலற்று இருப்பதால் அதற்குச் சிந்திக்கும் திறன் இராது. சிந்திக்காத மூளை எதையும் செய்ய நினைக்காது. செவிடனாகவும், குருடனாகவும் மனநலம் குன்றியவனாகவும் இருக்கும் இராமநாதனால் அவனது மனைவி, மக்களுக்கே பெரும் துன்பங்கள் உண்டாகின்றன. மற்றவர்களுக்கு எப்படி இருக்கும்?” என்று கேட்டது லட்சுமி எலி.

**10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**

**இறைவன் அடிசேரா தார்.**

“அன்பான பிள்ளைகளே, இறைவனை அன்போடு துதித்து அவனது திருவடிகளை அடைந்தவர்களே பிறவி என்றும் பெருங்கடலைக் கடப்பார்கள். மற்றவர்கள் பிறந்து இறந்து பின் பிறந்து இறந்து துன்பப்படுவார்கள். ஆகையால் இறைவனை நாள்தோறும் தொழுங்கள்” என்றார் சுவாமியார்.

“படித்தவர்களுக்குக் கூட இது விளங்குவதில்லை. இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் இதை நம்புவதில்லை. கோவிலுக்குச் சென்று வணங்குதல், கட்டடங்களுக்கு நிதியுதவி செய்தல், பூசைகள், திருவிழாக்கள் போன்றன செய்தால் போதுமென்று நினைக்கிறார்களே தவிர மன அடக்கத்துடன் கடவுளை வணங்க வேண்டுமென்று நினைப்பதில்லை. பணத்தால் எல்லாவற்றையும் செய்து முடிக்கலாமென்று நினைக்கின்றனர். இராமநாதனுக்கு முப்பது வயது கடந்த மகள் ஒருத்தி இருக்கிறாள். யாரும் அவளை விரும்பித் திருமணம் செய்ய முன்வருகிறார்களில்லை. கதிரேசனின் பேர்த்தியான அகல்யாவுக்கு பதினேழு வயது. எத்தனை பேர் போட்டிபோடுகிறார்கள். அவர்கள் பெரும் வசதியானவர்கள் இல்லை. அகல்யாவுக்குக் கீழை நான்கு பொம்பிளைப் பிள்ளைகள் இருக்கு…” என்று குமரன் கூறும் போது லட்சுமி குறுக்கிட்டுச் சொன்னது,“கதிரேசன் தருமவான். அவரது பிள்ளைகளும் தருமவான்கள். அதனால் இறைவனே அவர்களுக்கு நல்வாழ்வைக் கொடுப்பார். அவர்கள் கடவுளை நம்பிக்கையுடன் தொழுவதால் துன்பங்கள் வருவதில்லை. இராமநாதன் கடவுளை நம்பாததால் பல துன்பங்கள் வருகின்றன. அத்துன்பங்கள் அவர்களின் பிறப்போடு தொடர்புடையவை. அவை நீங்காது பிறவிகள்தோறும் தொடர்ந்து சென்று துன்பப்படுத்தும்” என்றது லட்சுமி எலி.

“அன்பான பிள்ளைகளே, இன்று அமரர் வைத்திலிங்கத்தின் குருபூசையில் கலந்து கொண்டமையால் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவரது வாழ்வு பற்றியும், சேவைகள் பற்றியும் உங்களுக்குத் தெரியும். அவற்றைப் பின்பற்றி வாழுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

## வான் சிறப்பு- 2

### 11. வானின்று உலகம் வழங்கி வருதலால்

**தானமிழ்தம் என்று உணரற் பாற்று**

“இன்று வானம் கறுத்திருக்கிறது. மின்னல் மின்னுகிறது. இடிஇடிக்கிறது. எனக்கென்றால் மூன்று மாதங்களுக்கு முன்பு பெய்த கோர மழையால் தான் வயற்கரைக் கிராமம் அழிந்தது. பயிர்கள் முற்றாக அழிந்தன. கால்நடைகளும் அழிந்தன. மக்கள் இடம்பெயர்ந்து வந்து இந்தப் பாடசாலையில் தங்கியிருந்தனர். நாமும் வயலூரிலிருந்து இடம்பெயர்ந்து வந்து, இங்கேயே தங்கிவிட்டோம். எமக்கு முன்பை விட உணவு வகைகள் நிரம்பக் கிடைக்கின்றன. மனிதர்கள் தான் பாவம். இடம்பெயர்ந்து மூன்று மாத காலம் இந்தப் பள்ளிக்கூடத்தில் தங்கியிருந்து கஷ்டப்பட்டனர். மீண்டும் மழை பெய்தால் அவர்கள் எப்படித் தாங்குவார்கள். கடவுளுக்கு இதெல்லாம் தெரியாதா..? இவ்வூர் மக்கள் கடவுளுக்கு என்ன குறைவிட்டனர்” என்றது லட்சுமி எலி.

“நீ நினைத்தவற்றையெல்லாம் கதைக்காதே. இடம்பெயர்ந்து மக்கள் இங்கு தங்கிய போது தனிகாசலம் என்ற பெரியவர் என்ன சொன்னவர்,“உலகில் அநியாயங்கள் மிகுந்தால் இப்படியான துன்பங்கள் யாவும் வரும். நாம் வெள்ளமோடும் வாய்க்கால்களைத் திருத்தவில்லை, குளங்களை ஆழமாக்கவில்லை. பனை, தென்னங்காணிகளில் முன்னோர் வரம்புகள் கட்டி மழை நீரைத்தேக்கி வைப்பார்கள். இப்போ யாரும் வரம்புகளைக் கட்டுவதில்லை. சென்ற வருடம் எல்லோருக்கும் நெல் அமோக விளைச்சல். கமத்தாலை ஊரில் எத்தனை பேர் கோடீஸ்வரர் ஆகியுள்ளனர். மழை பெய்யாவிட்டால் இவ்வூரில் வேளாண்மை செய்ய முடியாது. இது வானம் பார்த்த பூமி. ஆறுகள்இல்லை. மழை நீரைக் குளத்தில் தேக்கி வைத்து விவசாயம் செய்கிறோம். கிணற்றின் மூலமும் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுகிறோம். மழை பெய்யாவிட்டால் கிணறுகள் வற்றிவிடும். பின் உணவுக்காக மக்கள் அலைய வேண்டிய நிலயுண்டாகும். பல வருடங்களை விட இம்முறை மழை கூடப் பெய்ததால் குளங்கள் நிரம்பிவிட்டன. இந்த வருடம் பூராகவும் பயிர் செய்யலாம். இழந்தவற்றை ஈடு செய்யலாம்” என்றவர். அவர் தருமவான் என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அதைக் கேட்ட நீ இப்படிப் பேசலாமா?”என்று கேட்டது குமரன் எலி.

“உண்மை தான். மழை பெய்யாவிட்டால் பயிர்கள் விளையாது. அதனால் எமக்கும் உணவு கிடைக்காமல் போய்விடும். தனிகாசலம் ஐயா சொன்னது போல மழை நீர் அமிர்தம் தான்” என்றது லட்சுமி எலி.

### 12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

**துப்பாய தூஉம் மழை.**

தணிகாசலத்தின் நண்பர் சிவராசா சொன்னதை நீ கேட்டனி தானே. அவர் சொன்னது இப்போதும் எனது காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. “தணியண்ணை, போனவருசம் நான் அமோக விளைச்சலைப் பெற்றேன். அதனால் பல வருடகாலமாகத் திருமணமாகாதிருந்த எனது மூத்த மகளுக்குத் திருமணம் செய்து வைத்தேன். பட்ட கடன்களை அடைத்தேன். மக்களுக்கெல்லாம் உண்ண உணவை உற்பத்தி செய்து கொடுப்பதோடு தானும் உணவாகி மக்களை வளப்படுத்தும் மழை இம்முறை அளவுக்கதிகமாகப் பெய்து மக்களை வருத்திவிட்டது. இவற்றை மக்கள் உணர வேண்டும். அதை விட்டு விட்டு மழையை ஏசுவதால் பயன் எதுவும் ஏற்படாது. சென்ற வருடம் பலர் கோவில் நிர்வாகத்துடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டு வருடக்கணக்காகச் செய்யும் பொங்கல் பூசைகளைச் செய்யவில்லை. இது மகா தவறு. நிர்வாகம் வேறு. பரம்பரையாக வழிமுறை தவறாது செய்த பூசைகளைச் செய்யச் சொல்லி நானும் ஊர்ப்பிரமுகர்கள் சிலரும் சொன்னபோது எம்மோடு சண்டைக்குப் பலர் வந்தனர். அதனால் தான் இந்தப் பேரழிவு” என்றவர்” அது உண்மை என்றது குமரன் எலி.

‘‘இந்த மனிதர்கள் ஏன் படிக்கிறார்கள். படித்தும் புத்தி வரவில்லையே. முன்பை விடக் கேவலமாக அல்லவா இருக்கிறார்கள். நான் தான் ஆராயாமல் கதைத்து விட்டேன்’’ என்றது லட்சுமி எலி.

**13. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**

**உள்நின்று உடற்றும் பசி**

‘‘சிவராசா மிகவும் நல்ல மனிதன். ஏழையாக இருந்தாலும் வறியவர்களுக்கு மனம் கோணாமல் உதவுபவர். இங்கு இடம்பெயர்ந்து வந்து தங்கிய மக்களுள்ப் பெரும்பான்மையானவர்கள் மழையைத் திட்டு திட்டென்று திட்டினார்கள். இதில் மோசமாகத் திட்டியது உதயகுமாரன் ஆசிரியர் தான். பலர் அவரோடு சேர்ந்து திட்டினார்கள். ஆதைப் பெறுக்க முடியாத சிவராசா சொன்னார்,‘‘வாத்தியார் நீங்கள் பட்டதாரி ஆசிரியர். இரண்டாவது பட்டத்தையும் மிகவும் கஷ்டப்பட்டுப் படித்துப் பெற்றுள்ளீர்கள். இருந்தும் பாமர மக்களுடன் சேர்ந்து வருண பகவானைத் திட்டுகிறீர்கள். இதனால் ஏதாவது பயன் கிடைக்குமா? தணிகாசலமும் கதிரேசனும் தினமும் கோவிலுக்குப் போய் கடவுளே பெரும் மழையை நிறுத்தி மக்களுக்கு வாழ்வு கொடு என்று கெஞ்சுகிறார்கள். மழை விட்டதும் பெரும்பான்மையான மக்கள் கடவுளின் அருளால் தான் மழைவிட்டது என்று கூறினர். இம்முறை மழை அதிகமாகப் பெய்து விட்டது. அதுவும் நன்மைக்குத்தான். குளங்கள் நிரம்பி விட்டன. இவ் வருடம் மூன்று முறை நெல் விதைக்கலாம் என்று விவசாய அமைச்சுக் கூறியுள்ளது. வழமையாக இரண்டு முறை தானே விதைப்போம். மூன்றாவது முறை விதைத்தால் இம்முறை உண்டான அழிவை ஈடு செய்யலாம். ஒரு வருடம் மழை பெய்யாவிட்டால் இக்கிராமத்தில் உள்ள அனைத்து உயிர்களும் பசியால் வாடிச் செத்துவிடும். இது தெரியாதா உங்களுக்கு’’ என்று கேட்டவர் என்றது குமரன் எலி.

‘‘உதயகுமாரன் பேரளவில் தான் ஆசிரியர். அவருக்குக் கற்பிக்கவும் தெரியாது. உலக நடப்பும் தெரியாது’’ என்றது லட்சுமி எலி.

**14. ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**

**வாரி வளங்குன்றிக் கால்.**

‘‘சிவராசா ஆசிரியர் கமக்காரன். அதனால் கமக்காரர்களின் பிரச்சினைகள் முழுவதும் தெரிந்தவர். இயற்கையைப் பற்றிய அறிவும் அவருக்கு உண்டு. மனச்சாட்சி உண்டு. இதெல்லாம் இல்லாத உதயகுமாரன் ஆசிரியர் சிவராசாவுக்கு அடித்துவிட்டார்’’ என்று குமரன் எலி கூறும் போது லட்சுமி எலி குறுக்கிட்டுச் சொன்னது,‘‘முதலையும் மூர்க்கனும் தான் பிடித்ததை விடாது என்று தனிகாசலம் அடிக்கடி சொல்வார். சிவராசா ஏன் பகுத்தறிவில்லாதவனுடன் கதைத்தது’’ என்று கேட்டது லட்சுமி எலி.

‘‘உதயகுமாரனின் மடத்தனமான பேச்சால் ஆத்திரமுற்ற சிவராசா ஆராயாமல் கதைத்துவிட்டார். பிறகு தனிகாசலம் அண்ணை சிவராசாவைப் பேசினவர். ஒரு முறை சொன்னால் கேட்டு விளங்கிக் கொள்பவனுக்குத் தான் புத்திமதி சொல்லல் வேண்டும். ஆயிரம் முறை சொன்னாலும் அவனுக்கு ஏறாது. படித்தவன் தீயவர்களுடன் சேர்ந்து குடிப்பதும், கதைப்பதும் கேவலமானது. அப்படியானவனுடன் பேசாதே. மழை பெய்யாவிட்டால் உழவர்கள் ஏர் கொண்டு உழமாட்டார். வயல் நிலம் காய்ந்து வெடித்து விடும். உயிர்கள் பசியால் வாடும் என்று கூடத் தெரியாதவனுடன் பேசாதே’’ என்றவர். அதன் பின் சிவராசா அவருடன் கதைப்பதில்லை’’ என்றது குமரன் எலி.

‘‘இவையெல்லாம் வருமானத்துக்காகத் தானே படித்தவை. அதோடை பள்ளிக்கூடத்திலை படிப்பிக்கினையே. எப்ப பள்ளிக்கூடம் விடும் என்று காத்திருந்து விட்டுப் பள்ளிக்கூடம் விட்டதும் பல வேலைகளுக்குச் சென்றுவிடுவார்கள். அவ்வேலைகள் முடிய இரவு பத்துப்பதினொரு மணியாகும். மறுநாள் பள்ளிக்கூடத்திலை நித்திரை கொள்ளுவினை’’ என்றது லட்சுமி எலி.

**15. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**

**எடுப்பதூஉம் எல்லாம் மழை.**

‘‘வானிலை அவதான நிலையம் இன்று தொடக்கம் ஒரு வாரத்திற்குப் பெரு மழை பொழியும் என்றும் மக்களை அவதானமாக இருக்கும்படியும் கூறியுள்ளதாக ஆசிரியர்கள் கதைக்கிறார்கள். அப்போ முன்பு போல மழை அடித்துப் பெய்யப் போகிறதோ’’ என்று கேட்டது லட்சுமி எலி.

‘‘எல்லோரும் சோதிடர்கள் மாதிரி எதிர்வு கூறுவதில் வீரர்கள். வானிலை அவதான நிலையம் சொல்லியே சுனாமி வந்தது. கற்றவர்கள் ஆராய்ச்சி செய்து பலவற்றைக் கூறுகிறார்கள். அவையெல்லாம் நடப்பதில்லை. இயற்கை இறைவனின் கட்டுப்பாட்டில் உள்ளது. சூழ்நிலைக்கேற்ப அது மாறும். எல்லோரும் கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்குங்கள் என்று கதிரேசன் கூறியதை நம்பி மக்களில் அனேகர் கோவிலுக்குச் சென்று வணங்குகிறார்கள். மழை பெய்தும் அழிக்கும் பெய்யாதும் அழிக்கும். சென்ற வருடம் நெல் அறுவடை செய்யும் போது பெரு மழை பெய்ததால் அறுவடை செய்ய முடியவில்லை. முற்றிய தானியங்கள் முளைத்துவிட்டன. ஐந்து வருடங்களுக்கு முன்பு விதைத்த பின் மழை பெய்யவில்லையாம். அதனால் பயிர்கள் எல்லாம் அழிந்து விட்டது என்று கதிரேசன் நமசிவாயகம் சுவாமியாருக்குச் சொல்லிக் கவலைப்பட்டவர். எதுவும் யாரின் கையிலுமில்லை. எல்லாம் இறைவன் செயல்’’ என்று கதிரேசன் மக்களுக்குச் சொல்லிக் கடவுளை முழுமனதோடு வணங்கச் சொன்னவர். அது தான் உண்மை’’ என்றது குமரன் எலி.

**16. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**

**பசும்புல் தலைகாண் பரிது.**

“மழை பெரிதாகப் பெய்யும் என்று சொல்லிப் பாடசாலையை மக்கள் தங்குவதற்கு ஏற்றபடி மாற்றியமைக்கிறார்கள். கட்டாயம் மழை பெய்யுமா?” என்று கேட்டது லட்சுமி எலி.

“மழை பெய்தால் சில நாட்களுக்குத் தான் கஷ்டம். ஆனால் பெய்யாமல் விட்டால் பல வருடங்களுக்குத் துன்பம். பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு வருடமாக மழை பெய்யவில்லையாம். அதனால் பெரும் கஷ்டமும், பஞ்சமும், நோய்களும் ஏற்பட்டதென்று கதிரேசன் நேற்றுக் கூறும் போது நீ கேட்கவில்லையா, “ஒரு வருட காலமாக மழை பெய்யவில்லை. அதனால் புல் பூண்டுகள் கூடக் கருகி விட்டன. மக்கள் தமது கால் நடைகளுடன் அயல் கிராமங்களுக்குச் சென்று பெருந்துன்பப்பட்டனர். அலையூர் வளமான கிராமம். எமது மக்கள் அங்கு சென்றமையால் தமது ஊரின் கலாச்சாரம் கெட்டுவிட்டதாக அவ்வூரவர் கூறித்தமது கிணறுகளில் நீர் எடுக்கக் கூட விடவில்லை. அரசாங்கம் எமது மக்களுக்காகப் பல குழாய்க்கிணறுகளை அமைத்துக் கொடுத்தது. தொழிலின்மையால் மக்கள் களவெடுத்தனர். சண்டை பிடித்தனர். அந்தக் கொடுமைகளை வாயால் கூறமுடியாது. அதை விட மழை பெய்வது மேல். அழிவுகள் ஏற்பட்டாலும் ஓரிரு வாரங்களில் மக்கள் தமது தொழிலைச் செய்யத் தொடங்கி விடுவர்” என்றவர். மழை பெய்து அழிப்பதை விடப் பெய்யாது அழிப்பது தான் துன்பமானது” என்றது குமரன் எலி.

**17. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**

**தான்நல்கா தாகி விடின்.**

“பாருங்கோ வாத்திமாற்ரை வேலையை. பிள்ளைகளுக்குப் படிப்பிக்கிறத்தை விட்டு விட்டு மழை வருமோ வராதோ என்று கூட்டம் போட்டுக் கதைக்கினை. மழை வந்தால் பெய்யட்டன். இவையாலை தடுக்க முடியுமே? அதிபர் ஏதோ அலுவலாக வெளியே போய்விட்டார். அவர் வெளீலை போனால் படிப்பிக்காயினை கூடிக் கதைப்பினை. உபஅதிபருக்கு அதிபர் தரம் இல்லையாம். கல்விப்பணிப்பாளற்ற கையாளாம். அதனால் தான் வயதிற்கு மூத்த அனுபவமான ஆசிரியர்கள் இருக்க இவருக்குப் பதவி கொடுத்தவையாம். அதனாலை மற்ற ஆசிரியர்கள் மதிக்கிறேல்லை. அவர் அலுவலகத்திலை யாரோடாவது கதைத்துக் கொண்டிருப்பார். மழை பெய்யுதென்று பெரிதாகக் குறை சொல்லீனை. “மழை பெய்யாவிட்டால் கடலும் வற்றி விடும்” என்று முந்தி தனிகாசலம் சொன்னவர். மழை பெய்யட்டன். இவை ஏன் கூட்டம் போடீனை” என்று கேட்டது லட்சுமி எலி.

“பிள்ளைகள் வகுப்புக்குள் ஓடித் திரிகிறார்கள். வகுப்பறைச் சுவரில் ஏறி விளையாடுதுகள். போன கிழமை ஒரு பிள்ளை சுவரில் ஏறி விழுந்து மண்டை உடைந்தது. தகப்பன் வந்து பேசிவிட்டுச் சென்றவர். அப்படி இருந்தும் திருந்துகிறார்கள் இல்லை” என்றது குமரன் எலி.

“உவையை யாராலும் திருத்த முடியாது. பழக்கப்பட்டினை” என்றது லட்சுமி எலி.

**18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்கு**

**மேல் வானோர்க்கும் ஈண்டு**

“மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. அதனால் பாடசாலையை நேரத்துடன் மூடிவிட்டார்கள். பெற்றோர் வந்து பிள்ளைகளை அழைத்துச் செல்கிறார்கள். பாடசாலை வெறிச்சோடி விட்டது. நாங்கள் இடம் பெயர்ந்து வந்து மூன்று மாதங்களாகி விட்டன. நாம் இனி இங்கிருப்பது சரியில்லை” என்றது குமரன் எலி.

“திரும்பவும் வயலுக்குப் போவதா?” என்று கேட்டது லட்சுமி எலி.

“இல்லை நாங்கள் கோவிலுக்கப் போவம். அங்கு மடம் உள்ளது. அதனால் உணவு கிடைக்கும். ஊர்ச்சனம் முழுவதும் இங்கு வந்தால் கரைச்சல்”

“பாடசாலை மூடியாயிற்று. அதிபரும் தணிகாசலமும் வரீனை. என்னத்துக்கோ தெரியாது” என்றது லட்சுமி எலி.

“அவையோடை பெற்றாரும் வரீனை” என்ற குமரன் எலி அவர்களைப் பார்த்தது,“சென்ற முறை பாடசாலைத் தளபாடங்கள் பலவற்றை உடைத்து சமையலுக்கு எரித்து விட்டார்கள். அதோடு பெரும் பிரச்சினை. இம் முறை பாடசாலைக்கு வரவேண்டாம் என்று சொல்லி விட்டேன்” என்றார் அதிபர்.

“மழை பெரிதாக வராது. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு ஒரு முறை தான் வெள்ளம் போடும். மழை மழையென்று புலம்புகிறார்கள். பத்து வருடங்களுக்கு முன் மழை பெய்யாததால் கோவில்களில் பூசைகள் நடைபெறவில்லை. புற்கள், பூக்கள், இளநீர், பால், தயிர் எவையும் இல்லை. கோவில்கள் பூட்டிக் கிடந்தது. அதையெல்லாம் மறந்து வீண் கதைகள் கதைக்கிறார்கள்” என்றார் தனிக்காசலம்.

அவர்கள் கதைப்பதைக் கேட்டுக்கொண்டிருந்த எலிகள் ஆச்சரியப்பட்டன.

**19. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**

**வானம் வழங்காது எனின்.**

“சுவாமியார் வாறார்” என்றது லட்சுமி எலி.

“அவர் தன்னைச் சுவாமியார் என்று அழைக்கக் கூடாது என்று பல முறை சொல்லியும் மக்கள் கேட்பதாக இல்லை,“நான் சாதாரண மனிதன். கடவுளை வணங்குகிறேன். ஆலோசனைகள் பத்திமதிகள் கூறுகிறேன். சோதிடம் படித்ததால் சோதிடமும் கூறுகிறேன்

அவ்வளவு தான்'' என்று கூறியும் யாரும் கேட்பதாகவில்லை. அவர் மழை பெரிதாகப் பெய்யாது மக்கள் அச்சப்படத்தேவையில்லை. கடவுளை மனச்சுத்தத்துடன் வணங்குங்கள் என்றவராம். மனிதர்கள் தேவைக்கேற்பத்தான் கடவுளையும் வணங்குகிறார்கள். தாம் நினைத்தவை நடந்தால் தான் பொங்கல் பூசை செய்வார்கள். பொங்கல் பூசைகளைச் செய்து விட்டு கேட்கமாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. பத்து வருடங்களுக்கு முன்பு நாகராசா என்றொரு தனவந்தர் இருந்தவராம். அப்போது மழை பெய்யாததால் பஞ்சம் நிலவியதாம். அவர் எல்லோருக்கும் கொடுத்துக் கொடுத்து வறியவராகிவிட்டாராம். சில வருடங்கள் செல்ல மழை பெய்து மக்கள் நன்றாக வாழ்ந்த போது நாகராசா வயோதிபம் காரணமாக உழைக்க முடியாமல் கஷ்டப்பட்டவராம். அப்போது யாரும் அவருக்கு உதவி செய்யவில்லை என்று தணிகாசலம் கூறியதைக் கேட்டனான். மழையில்லாவிட்டால் புல் பூண்டுகள் மரம் செடிகள் காய்க்காது. அதனால் பிறருக்கச் செய்யும் தானமும், தமக்காகச் செய்யும் தவத்தையும் கூடச் செய்ய முடியாதென்றவர். எல்லாவற்றிற்கும் காரணம் மழை தான்'' என்றது குமரன் எலி.

**20. நீரின்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**
**வானின்று அமையாது ஒழுக்கு.**

''மனிதர்கள் மிகவும் பொல்லாதவர்கள். பஞ்ச காலத்தில் ஒரு நாள் நாகராசாவின் வீட்டுக்குத் தனது ஐந்து வயதுப் பிள்ளையுடன் வந்த ஒரு பெண், அந்தப் பிள்ளைக்கு இரண்டு நாட்களாக உணவு கொடுக்கவில்லை. தயவு செய்து ஏதாவது உணவு தாருங்கள்'' என்று அழுதாளாம். அப்போது நாகராசாவின் வீட்டில் உணவு எதுவும் இல்லை. பெண்ணையும் பிள்ளையையும் பார்க்கச் சகிக்காத நாகராசா தனது சகோதரனது வீட்டுக்குச் சென்று அடுப்படிக்குள் நுழைந்து சமைத்து வைக்கப்பட்டிருந்த உணவில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு வரும் போது அவரது சகோதரன் கண்டு விட்டான். அவன் அடிக்காத குறையாக அவரைத் தரக்குறைவாகப் பேசினான். அதை அவர் பொருட்படுத்தவில்லை. ''பெருமைக்காகவும் புகழுக்காகவும் கொடுத்தால் இந்த நிலை தான் வரும். இப்போ திருடி உண்கிறாயா?'' எனக் கேட்டாராம். நாகராசா எதுவும் பேசாது உணவைக் கொண்டு சென்று அப்பெண்ணிடம் கொடுத்தாராம்'' என்றது குமரன் எலி.

''இந்தக் கதையை உங்களுக்கு யார் சொன்னது?'' என்று கேட்டது லட்சுமி எலி.

''பள்ளிக்கூடத்திலை தான் கதைச்சவை. ஆசிரியர்களின் ஓய்வு அறைப் பக்கம் போனால் எல்லாக் கதைகளையும் கேட்கலாம். புருசன் பொஞ்சாதிக்கிடையில் நடைபெறும் சண்டைகள் பற்றியும் கதைப்பார்கள். நீரில்லாமல் எந்த உயிரும் வாழமுடியாது. நீரில்லாவிட்டால் ஒழுக்கமும் பேணப்படாது. பாவம் நாகராசா. பிற்காலத்தில் பிச்சையெடுத்துத்தான் வாழ்ந்தவராம்'' என்றது குமரன் எலி.

## நீந்தார் பெருமை- 03

### 21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து

#### வேண்டும் பனுவல் துணிவு

பாடசாலையில் வசிக்கப் பிடிக்காத குமரனும், லட்சுமியும் தமது உறவினர்களை அழைத்துக் கொண்டு கோவிலுக்கு வந்தன. கோவிலின் முன்பாக நிற்கும் வேப்பமர நிழலில் நமசிவாயகம் எந்நேரமும் இருப்பார். உணவுக்காக யாராவது அழைத்தால் அவர்களின் வீடுகளுக்குச் செல்வார். இல்லாவிட்டால் யாராவது பொங்கினால் வாங்கி உண்பார். அதுவும் இல்லாவிட்டால் மரநிழலில் சமைப்பார்.

வைத்திலிங்கம் மத்திய மகா வித்தியாலய நிறுவுனர். கந்தர் வைத்திலிங்கத்தின் மைத்துனர் தான் நமசிவாயகம். பாடசாலை கட்டும் போது நமசிவாயகத்தின் தந்தை பணமும்,பனை மரங்களும் கொடுத்திருந்தார். அதைப் பற்றியும் நமசிவாயகத்தின் துறவு வாழ்க்கை பற்றியும் பாடசாலை வருடா வருடம் வெளியிடும் புத்தகத்தில் எழுதுவார்கள். இவ்வருடம் கதிரவேலு எழுதியிருந்தார். அது சிலருக்குப் பிடிக்கவில்லை. கோவில் மடத்தில் கூடியிருந்து அதைப் பற்றியும் கதைத்துக் கொண்டிருந்தனர்.

''லட்சுமி அங்கை பார் பத்துப் பேர் கூடியிருந்து நமசிவாயகம் ஐயாவைப் பற்றிக் கதைக்கிறார்கள். நமசிவாயகத்தின் தகப்பன் தருமரத்தினம் தானாம் மடத்தைக் கட்டிக் கொடுத்தது. இப்போது உடைந்து விட்டது. யாரும் திருத்த முன்வராததால் நமசிவாயகம் தனது காணியை விற்றுத் தானாம் திருத்தியவர். திருத்த முன் வந்து தங்காத பலர் திருத்திய பின் வந்து தங்கியிருந்து குறைகளைப் பற்றியே கதைக்கிறார்கள்.'' என்றது குமரன் எலி.

''மனிதர்கள் இலேசில் எதையும் செய்யமாட்டார்கள். செய்பவனிலும் குறை காண்பார்கள். இது அவர்களின் இயல்பு'' என்றது லட்சுமி எலி.

''சிறந்த ஒழுக்கமுடையவராகவும், பற்றுக்கள் இன்றியும் வாழ்பவர்களின் பெருமையை நூல்கள் விதந்து கூறும். அந்தவகையில் தருமரத்தினத்தைப் பற்றியும், நமசிவாயகத்தைப் பற்றியும் எழுதியுள்ளேன். நமசிவாயகம் தவவாழ்வு வாழ்ந்த போதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாத மகான். அவருடன் கடவுள் கூட இருப்பதால் அவரது வாய்ச் சொற்கள் எதிர்காலத்தைச் சொல்கின்றன என்று கதிரவேலு ஆசிரியர் எழுதியது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.'' என்றது குமரன் எலி.

''உண்மையைத் தானே அவர் எழுதியுள்ளார். இங்குள்ள பெரும்பாலான மக்கள் நமசிவாயகத்தைப் போற்றித் தானே வணங்குகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

''உண்மை வஞ்சகர்களுக்குக் கசக்கும். நாளைக்குத் தேவையேற்பட்டால் விழுந்து கும்பிடுவார்கள்.'' என்றது லட்சுமி எலி.

**22. துறந்தார் பெருமை துணைகூறின் வையலத்து**

**இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று**

‘‘இந்த உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை எத்தனையோ கோடி மக்கள் பிறந்து இறந்திருக்கிறார்கள். அவர்களில் நல்லவற்றைச் செய்த சிலர் இன்றும் பேரோடும் புகழோடும் வாழ்கிறார்கள். எமது பாடசாலையையும் இக் கோவிலையும் கட்டிய வைத்திலிங்கம் குடும்பமும், நமசிவாயகம் குடும்பமும் எமது கிராமத்தில் நிலை பெற்று வாழும். ஒழுக்கமாகவும் பற்றில்லாமலும் வாழ்பவர்களால் தான் அரிய செயல்களைச் செய்ய முடியும். உலகம் தோன்றிய நாள்த் தொடக்கம் இன்று வரை பிறந்து இறந்தவர்களின் தொகையைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாதது போல பற்றுக்களைத் துறந்து மக்களுக்காக வாழ்ந்தவர்களின் பெருமைகளையும் அளவிட்டுக் கூறமுடியாது. பாடசாலையின் கூரைக்கு மேல் சென்ற மாதம் பெய்த மழையால் வேப்பமரம் பாறி விழுந்து கட்டிடம் பெரும் சேதத்திற்குள்ளானது. அதைத் திருத்திக் கொடுக்க யாரும் முன்வரவில்லை. அது அரசாங்கப் பாடசாலை. அரசே திருத்தும் என்று கூறிவிட்டனர் முன்பு செல்லடித்த போது உடைந்த கட்டிடம் இன்றும் திருத்தப்படாதுள்ளது. அதைப் பார்த்து வேதனைப்பட்ட நமசிவாயகம் தனது இன்னொரு காணியை விற்றுத் திருத்துகிறார். இதை எழுதியது பிழையா என்று கதிரவேலு ஆசிரியர் உருத்திரகுமார் ஆசிரியரைக் கேட்டவராம். அப்படிக் கேட்டும் உவைக்கு உறைக்கவில்லை’’ என்றது குமரன் எலி.

‘‘வெட்கம், ரோசம், மானம் இல்லாதவர்கள் எதற்கும் கேள்வி கேட்பார்கள். பதில் சொன்னால் நழுவி விடுவார்கள். இது அவர்களின் சுபாவம்’’ என்றது லட்சுமி எலி.

**23. இருமை வகைதெரிந்து ஈண்டும் அறம் பூண்டார்**

**பெருமை பிறங்கிற்று உலகு**

‘‘பிறப்பில் ஏற்படும் துன்பங்களையும், பிறவாமையால் உண்டாகும் இன்பங்களையும் தெளிவாகத் தெரிந்து துறவு பூண்டவர்களின் பெருமை உயர்வானது. சிறப்பானது. இவற்றை நினைத்துத் துறவறத்தை மேற்கொண்டோர் எந்தப் பற்றுக்கும் ஆட்படமாட்டார்கள். அதனால் தான் நமசிவாயகம் தன்னைச் சுவாமியார் என்று அழைக்கக் கூடாதென்றவர். கண்காணாமல் பேசுவது வேறு. அவர் இருக்குமிடத்தில் குத்தலாகப் பேசுவது வேறு. ஆனால் நமசிவாயகம் எதையும் காது கொடுத்துக் கேட்பதில்லை. யாராவது துன்பப்பட்டவர்கள் அவரை அணுகிக் கேட்டால் மட்டும் சொல்வார். திருநீறு கொடுக்கமாட்டார். கோவில் கிணற்றில் முகம், கை, கால்களைக் கழுவி நீறணிந்து வருமாறு கூறுவார். பாவங்களை எடுத்துரைப்பார். வேதஉபநிடதக் கருத்துக்களைக் கூறுவார். பணம் பெறமாட்டார். ஊருக்கு எவ்வளவோ நன்மைகள் செய்தும் அதைப் பெரிதாக எண்ணமாட்டார். நேற்றுக் கதிரவேலு ஆசிரியரைக் கண்டு,‘‘இப்படி இனிமேல் எழுதக் கூடாது’’ என்றவராம். அதையும் உருத்திரகுமாரன் கேலியாகப் பேசியதாகக் கேள்விப்பட்டேன்’’ என்று கதிரேசன் அதிபருக்குக் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘எழுதினாலும் குற்றம் காண்கிறார்கள், எழுத வேண்டாம் என்று சொன்னாலும் குற்றங் காண்கிறார்கள். இவர்களெல்லாரும் சிவனில் குற்றங்கண்டு பிடித்த நக்கீரர் பரம்பரை’’ என்றது லட்சுமி எலி.

‘‘சீச்சீ…. இப்படியெல்லாம் ஏன் கேவலமான புத்தி மனிதருக்கு?’’ என்று கேட்டது குமரன் எலி.

**24. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**

**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து**

‘‘ஊரில் தனது பெரிய தந்தையாகிய நமசிவாயகத்தைப் பற்றிக் கேவலமாகக் கதைத்த உருத்திரகுமரன் ஆசிரியரோடு சண்டைக்குப் போனான் ஆரூரன். அதையறிந்த நமசிவாயகம் ஆரூரனை அழைத்துப் பேசினார். அப்போது நான் நமசிவாயகம் ஐயா இருக்கும் வேப்பமரக்கிளையில் இருந்தேன்’’ என்றது குமரன் எலி.

‘‘சரி அவர் என்ன சொன்னவர்?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

‘‘உருத்திரகுமாரனுக்கு அடிக்காமல் ஏன் விட்டாய்? என்று கேட்கப்போகிறார் என்று நினைத்தேன். ஆனால் அவர் பேசியது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது; ‘‘மகனே, வலிமை என்ற அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய மதயானையை அடக்கியவன் கடவுளைப் போன்றவன். மனம் அலைபாயும், ஆசைப்படும், அவாப்படும், உண்மை நிலையை அறியாது உணர்ச்சிவசப்படும். இதனால் தீமைகள் தான் உண்டாகும். தீமைகள் பகையை உண்டாக்கும். பகை கலவரத்தை உண்டாக்கி மெய்யறிவைக் கெடுக்கும். நீ உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவன். ஒரு செயலைச் செய்யும் போது அதைச் செய்வதால் உண்டாகும் விளைவுகளை எண்ணிப் பார்த்தல் வேண்டும். பயனில்லாத சொற்களைப் பேசக்கூடாது. அது போலப் பயனில்லாத செயல்களைச் செய்வோரைக் கணக்கிலெடுத்தலாகாது. அமைதியாக இரு. செயல்கள் பயனைக் கொடுக்கும். பொறுத்திருந்து பார். நான் வீடுபேற்றை விரும்புபவன். சலசலப்பிற்காட்படக் கூடாது. இனிமேல் இப்படி நடந்து என்னைத் துன்பப்படுத்தாதே’’ என்றவர்.

‘‘இத்தீயவர்கள் மத்தியில் இப்படி ஒரு மகானா..?’’ ஆச்சரியப்பட்டது லட்சுமி எலி.

**25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்**

**இந்திரனே சாலும் கரி**

‘‘நமசிவாயகம் கூறிய போது பதில் கூறாது அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த ஆரூரன் கோவிலுக்குச் சென்று தணிகாசலத்தைக் கண்டு குறைப்பட்டான். அதைத் தணிக்காசலம் வந்து நமசிவாயகத்திற்குச் சொல்லிவிட்டார். அதனால் கவலைப்பட்ட நமசிவாயகம் மீண்டும் ஆரூரனை அழைத்துச் சொன்னார், ‘‘மகனே, கொடிய நச்சுப் பாம்பொன்று பொறிக்குள் அகப்பட்டுவிட்டது. ஜீவகாருண்ணியம் மிக்க ஒருவர் அதை அப்பொறியில் இருந்து விடுவிக்க விரும்பினார். அதை அறியாத அந்த நச்சுப் அவர் தனக்கு ஏதோ தீங்கு செய்கிறார் என நினைத்து அவரைத் தீண்டி விட்டது. இருப்பினும் உயிர்கள்

மீது இரக்கம் கொண்ட அவர் அது அப்பாம்பின் இயல்பான குணமென அறிந்து மிகவும் சிரமப்பட்டு அதை அப்பொறியில் இருந்து விடுவித்தார். தீயவர்கள் ஆசை மிகுதியால் எல்லாவற்றையும் தவறாகவே எண்ணுவார்கள். அதைப் புத்தியுள்ளவர்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். தீயவர்களுக்குப் புத்தி சொல்லவோ, அவர்களைத் திருத்த முற்படவோ கூடாது. அவர்களைக் காலம் திருத்தும். கவலைப்படாது உனது வேலைகளைக் கவனி. தீயசெயல்கள் அல்ல தீயநினைவுகளும் மனிதனைப் பாதிப்படையச் செய்யும். ஐம்புலன்களில் இருந்து வரும் ஆசைகளை அடக்கி மகிழ்வுடன் வாழ்பவர்களின் ஆற்றல், விண்ணுலகத்தின் தலைவனைான இந்திரனைது ஆற்றலைுக்குச் சமமானது என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் கவலைப்படாதே என்று நமசிவாயகம் கூறியதை எனது காதால் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

**26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**

**செயற்கரிய செய்கலா தார்**

''நமசிவாயகம் அப்படிச் சொன்ன பின்பும் ஆரூரன் அமைதியடையவில்லை என்று நமசிவாயகம் உணர்ந்து கொண்டார்'' என்றது குமரன் எலி.

'ஆரூரன் துடிப்பான இளைஞன். போதனைகளைக் கேட்கமாட்டான். அதற்கும் வயதும் அனுபவமும் தேவை'' என்றது லட்சுமி எலி.

''ஆரூரனை அப்படியே விட நமசிவாயகம் விரும்பவில்லை. அவன் அமைதியடையாவிட்டால் தனது நண்பர்களுடன் சேர்ந்து ஏதாவது செய்து விடுவான் என்று நினைத்த நமசிவாயகம் சொன்னார்,''மகனே, செயற்கரிய செயல்களைப் பெரியவர்களால் மட்டுமே செய்ய முடியும். தீயசெயல்களை எல்லோராலும் மிகச் சுலபமாகச் செய்ய முடியும். தீயசெயல்களைச் செய்து தீயவனாகாதே. செயற்கரிய செயல்கள் என்பது யாரும் செய்ய முடியாத செயல். அது கோபத்தை அடக்குதல். தீமை செய்தவனை மன்னித்தல். எதிரிகளுடனனும் அன்பாகப்பழகல், மக்களுக்குத் தொண்டு செய்தல் என்று பல உண்டு. நீ கோபத்தை அடக்கு. கோபத்தால் பல அரசர்கள் தமது நாடுகளை இழந்துள்ளனர். பல அறிஞர்கள் தவறுகளைச் செய்துள்ளனர். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இப்போது நீ கோபத்தை அடக்கு. அதனால் உனக்குப் பல நன்மைகள் உண்டாகும்'' என்று நமசிவாயகம் கூறினார். ஆனால் அதை ஆரூரன் ஏற்றானோ தெரியாது'' என்றது குமரன் எலி.

**27. சுவையொளி ஊறோசை நாற்றமென்று ஐந்தின்**

**வகைதெரிவான் கட்டே உலகு**

''இன்று அன்னதான மடத்தில் உணவு பரிமாறும் போது பெரும் சண்டையுண்டானது. வழமையாகச் சமையல் செய்யும் சுப்பிரமணியத்தின் தகப்பனார் இறந்தமையால்

சுப்பிரமணியம் இன்று சமைக்க வரவில்லை'' என்று குமரன் எலி கூறும் போது லட்சுமி எலி குறுக்கிட்டது,''தகப்பன் இறந்தால் வரமுடியுமே. அது கூடப்பகுத்தறிவுள்ளவர்களுக்குத் தெரியாதா..?''

''இந்த மனிதர்கள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு கதைப்பார்கள், செயலாற்றுவார்கள். சுப்பிரமணியம் வராததால் அவரது உதவியாளன் கந்தவனம் தான் சமைத்தவன். கறிகளுக்கு உப்புப் புளி காணாதென்று சாப்பிட்ட பலர் இடைநடுவில் எழுந்து சென்று விட்டனர். உருத்திரகுமாரனும் அவனது கையாட்களும் பிரச்சினைப்பட்டவை. தணிகாசலமும் கதிரேசனும் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. அதனால் சுப்பிரமணியம் வரும் வரை மடத்தில் சமைப்பதில்லை என்று தீர்மானித்தார்கள்'' என்றது குமரன் எலி.

''நமசிவாயகம் ஐயா இல்லையா..?'' லட்சுமி எலி கேட்டது.

''அவர் பக்கத்து ஊருக்குச் சென்றுவிட்டார். பின் நேரம் தான் வந்து கவலைப்பட்டார், ''உணவை வீணாக்கக் கூடாது. வீணாக்கினால் பாவம் உண்டாகும். சுவைத்தல், காணுதல், உணர்தல், கேட்டல், மணத்தல் என்னும் ஐம்புலன்களால் உண்டாக்கும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தியவர்கள் தான் உலகில் இன்பமாக வாழ்பவர்கள். இவர்களின் ஆற்றலால் தான் உலகம் நன்மையடைகிறது. ஒரு நாள் சுவை குறைந்தால் சாப்பிட முடியாதா..? அது பெருங்குற்றமா…?'' என்று நமசிவாயகம் கேட்டவர். குளப்பம் செய்தவர்களெல்லோரும் சென்று விட்டனர். அவர் இருந்திருந்தாலும் கேட்கமாட்டார்கள்'' என்றது குமரன் எலி.

**28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**

**மறைமொழி காட்டி விடும்.**

''இந்த ஊரில் இருக்கும் நமசிவாயகம் ஐயாவின் இனத்தவர்கள் தான் எதற்கெடுத்தாலும் குறை சொல்லுகிறார்கள். ஏனையோர் அவரது வார்த்தைகளை மந்திரமாக நினைக்கிறார்கள். சென்ற வாரம் இந்த ஊரில் இருந்து நூறு மைல்களுக்கப்பால் இருந்து வந்த பெரியவர் ஒருவர் நமசிவாயகம் ஐயாவின் பாதங்களில் விழுந்து வணங்கி தனது வியாபாரம் இப்போது நல்ல முறையில் நடைபெறுவதில்லை என்றும் தனது பிள்ளைகள் தீயவழியில் நடக்கிறார்கள் என்றும் குறைப்பட்டவர். உடனே அவர் அப்பெரியவர்களின் பிள்ளைகளைத் தனிமையில் அழைத்துச் சென்று ஒரு மணி நேரம் தியானம் செய்யுமாறு பணித்து அவர்களுக்கு புத்திமதிகள் கூறியவர். இப்போ அவர்கள் திருந்தி நல்லவர்களாக வாழ்கின்றார்களாம். முன்பு பிள்ளைகளது தீயநடவடிக்கைகளால் தானாம் வியாபாரம் நடைபெறவில்லை. இப்போது நன்றாக நடைபெறுகிறது என்று அப்பெரியவர் கூறுகிறார், ''மகிழ்வான மொழியினைப் பேசுவோரின் பேச்சு மந்திரமாக மாறி மக்களை வசீகரிக்கும். அவர்கள் கூறிய வார்த்தைகள் மந்திரமாகச் செயற்பட்டு மக்களை வாழவைக்கும்'' என்று

அப்பெரியவர் கதிரேசனுக்குக் கூறும் போது நான் கேட்டுக் கொண்டிருந்தேன்'' என்றது குமரன் எலி.

''நமசிவாயகத்தைப் பார்த்தாலே கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்ற நினைவு உண்டாகும். அவர் பேசுவது அன்பு மொழி. அது மந்திரமாகச் செயற்படும் என்று இவ்வூரில் பலர் பேசுவதை நான் கேட்டுள்ளேன்'' என்றது லட்சுமி எலி.

**29. குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி**

**கணமேயுங் காத்தல் அரிது**

''நமசிவாயகம் பரமசாது. யாராவது பேசினால் உனது ஆத்திரம் தீரும் வரை பேசு'' என்பாராம். யாராவது மிக்க கோபப்பட்டால்,''எனக்கு அடித்தால் தான் உனது கோபம் தீருமென்று நீ நினைத்தால் உன்னால் முடிந்தவரை எனக்கு அடி என்பாராம். ஒரு நாள் சிவபாலன் என்ற தீயவன் நன்றாகக் குடித்து விட்டு மடத்திற்குச் சாப்பிட வந்தவனாம். அங்கு மரக்கறி உணவு தானே பரிமாறப்படுவது. ஆனால் அவன் மீனுடன் உணவு கேட்டானாம். சுப்பிரமணியம் கொடுத்த உணவைக் காலால் உதைத்தானாம். அப்போது அங்கு நமசிவாயகமும் இருந்திருக்கிறார். அதைக் கண்டவுடன் அவருக்குக் கடுங்கோபம் வந்து விட்டதாம். அதனால் சிவபாலனுக்குப் பலமாக அடித்துவிட்டாராம். ஓரிரு கணம் தானாம் அவர் கோபப்பட்டவர். ''நீ உருப்படமாட்டாய். உண்ணும் உணவு கடவுள் தந்தது. அதை அமிழ்தாக நினைக்க வேண்டும். ஆனால் நீ அதைக் காலால் உதைத்துவிட்டாய். இதற்கான தண்டனை உனக்குக் கிடைக்கும்'' என்றவராம். ஒரு மாதங்கூடச் செல்லவில்லை. சிவபாலன் குழை வெட்ட மரத்தில் ஏறித் தவறி விழுந்து வலது கால் முறிந்து விட்டதாம். அதனால் ஊரே அவருடன் தகாத வார்த்தைகள் பேச அஞ்சுமாம்'' என்றது குமரன் எலி.

''இதை யார் உங்களுக்குச் சொன்னது?'' என்று கேட்டது லட்சுமி எலி.

''காலையிலை சமையல்கார சுப்பிரமணியம் பலருக்கும் சொல்லிக் கொண்டிருந்தான். ஒழுக்கத்தில் மேம்பட்டு மலை போல உயர்ந்திருக்கும். பெரியோரின் கோபம் ஒரு கணம் ஏற்பட்டாலும் பாரிய இடர்களைக் கொடுக்கும்'' என்றான். அது உண்மை'' என்றது குமரன் எலி.

**30. அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்**

**செந்தண்மை பூண்டு ஒழுக லான்.**

''இன்று கரவை சிவன் கோவில் குருக்களின் மணிவிழா பெரியளவில் கொண்டாடப்படுகிறது. நமசிவாயகம் தலைமையில் விழா நடைபெற்றது. ஊர் மக்கள் பலர் மிகவும் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருந்தனர். ஒவ்வொருவரினது வீட்டுப்படலையிலும்

நிறை குடம் வைக்கப்பட்டுள்ளது. வீதிகளெங்கும் வாழை மரங்கள் கட்டப்பட்டுள்ளன. மாவிலைகளாலும்,தோரணங்களாலும், மாலைகளாலும் வீதி அலங்கரிக்கப்பட்டிருந்தது.மேளவாத்தியத்துடன் குருக்களும் மனைவியும் அழைத்து வரப்பட்டனர். விழாவில் பலர் பேசினர். பேசிய எல்லோரும் குருக்களின் அன்பான செயற்பாடுகள் பற்றித் தான் பேசினார்கள். குருக்கள் மக்கள் எல்லோரையும் பாகுபாடின்றி நடத்தியவர் என்றும் அவரோடு சில நிமிடங்கள் கதைத்தாலே நோய்கள், கவலைகள் யாவும் மாறிவிடுமென்று தனிகாசலம் பேசினார். அன்பே சிவம் என்பார்கள். நாம் அன்பே குருக்கள் என்போம் என்று கதிரேசன் பேசினார். எல்லா உயிர்களையும் பாகுபாடின்றி விரும்பி அன்பு செலுத்தும் உயர்ந்தவராய் விளங்குபவர்கள் தான் அந்தணர்கள். அதனால் அந்தணர்களை அறவோர் என்பார்கள். எமது குருக்கள் அந்தணர் என்று சொல்லப்படுகின்ற இலக்கணத்திற்கு உவமையாகக் கூறக்கூடியவர்'' என்று நமசிவாயகம் பேசினார். அவரின் முகத்தில் அன்பு என்ற ஒளி, சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது'' என்றது குமரன் எலி.

## அறன் வலியுறுத்தல் - 04

**31. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு**

**ஆக்கம் எவனோ உயிர்க்கு.**

''சிவநாதன் தனது பேர்த்தியின் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டாராம். ஊர் பரபரப்படைந்துள்ளது'' என்றது லட்சுமி எலி.

''கோவிலடியில் ஒரு கிழமையாய் உதுதான் கதை. சிவநாதன் அரசாங்க வைத்தியசாலையில் சிற்றூழியராகக் கடமை செய்து ஓய்வு பெற்றவர். அவர் கடமை செய்யும் காலத்திலும் ஓய்வான பின்பும் நோயாளிகளின் தேவைகளை அறிந்து அதற்கான எல்லா உதவிகளையும் செய்வார். ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களுக்கு அருகில் இருந்து உதவிகள் செய்வார். உணவு வகைகள் கொண்டு சென்று கொடுப்பார். மருந்து வகைகளை வாங்கி வந்து கொடுப்பார். மேலதிகாரிகளின் வீடுகளுக்குச் சென்று சிறு சிறு உதவிகள் செய்வார். பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்வார். இதனால் ஊர் அவருக்குக் கடமைப்பட்டுள்ளது'' என்றது குமரன் எலி.

''சிறந்த சேவையாளன். அவருக்கு உதவி செய்ய இது தான் நல்ல சந்தர்ப்பம் என்று மக்கள் மகிழ்வுடன் செயற்படுகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

''சிறந்த சேவையாளனை மக்கள் தமது குடும்பத்தவனாக நினைப்பர்'' என்று கதிரேசன் கூறினார். ஒரு வாரத்திற்கு முன்பு கல்வி அமைச்சில் உயர்பதவி வகித்த மால்மருகனின் மாமியார் இறந்த போது ஊரவர் ஒப்புக்குச் சென்று வந்தவையாம். மால்மருகனின் மாமியாரின் பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டிலை இருக்கினை. அவை வரும் வரை பிரேதத்தை விட்டிலை வைத்திருந்தவை. ஒருத்தர் கூடப்போகவில்லையாம். பிரேத ஊர்வலத்திலை பத்துப் பேர் தானாம் கலந்து கொண்டவை'' என்றது குமரன் எலி.

‘‘அவரைப் பற்றிக் கோவிலுக்கு வாறசனம் மோசமாகத் தான் கதைக்கும் ‘‘பதவியில் இருக்கும் போது அவர் யாரையும் பார்த்துச் சிரிக்கக் கூடமாட்டாராம். சிரித்தால் உதவி கேட்டு வந்து விடுவார்கள்’’ என்பாராம். அப்படியானவர் இருக்கும் வீட்டுக்கு யார் போவார்கள்?’’ என்றது லட்சுமி எலி.

‘‘அறம் தான் உயிர்களுக்கு இன்பத்தையும், செல்வத்தையும் பிறவிகள் தோறும் கொடுப்பது. அதனால் சிவநாதனைப் போல அறச் செயல்களை எல்லோரும் விரும்பிச் செய்ய வேணுமென்று நமசிவாயகம் அடிக்கடி சொல்பவர். அது உண்மை’’ என்றது குமரன் எலி.

**32. அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை**

**மறத்தலின் ஊங்கில்லை கேடு.**

‘‘நல்லவற்றைச் செய்தால் எப்பொழுதும் நன்மை உண்டாகும். நல்லவர்கள் எல்லாம் சேர்ந்து நன்மை செய்வார்கள். நன்மை செய்யாவிட்டால் யாரும் நட்புக் கொள்ளமாட்டார்கள். தனிமையில் தான் வாழ வேண்டும். அதனால் உங்களால் இயன்றளவு அறச்செயல்களை மேற்கொள்ளுங்கள்’’ என்று மால்மருகனுக்கு நமசிவாயகம் கூறினவராம். போர் நடைபெறும் போது சிவலிங்கம் செல்தாக்கி இறந்துபோனான். சிவலிங்கம் கூலி வேலை செய்து பிழைப்பவன். மூன்று பிள்ளைகள். மூத்தவன் கணேசன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவன். சிவலிங்கத்தின் மனைவி காவேரி நோயாளி. அதனால் அக்குடும்பம் பெருங்கஷ்டப்பட்டது. அதைக் கண்டு பொறுக்க முடியாத நமசிவாயகம் மால்மருகனின் வீட்டுக்குச் சென்று அவர்களது நிலமையை எடுத்துக் கூறி உங்கள் அலுவலகத்தில் ஒரு சிற்றூழியராகக் கணேசனைச் சேர்க்கும் படி கேட்டவராம். ஆனால் மால்மருகன்,‘‘தான் உயர் பதவி வகிப்பதால் தனக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளிடம் சலுகைகளைப் பெற்றால் பின் அதைப் பயன்படுத்தி அவர்கள் தமக்கு உதவும் படி கேட்பார்கள். அது ஊழல்களுக்கு வழி வகுக்கும்’’ என்றவராம்.

‘‘நீங்கள் உங்களுக்குத் தேவையானவர்களுக்கும் உங்களது மனைவியின் விருப்பத்திற்குள்ளானவர்களுக்கும் சட்டத்திற்குப் பிறம்பாகப் பதவி உயர்வுகளும், நியமனங்களும் வழங்குவதாகள கோவிலில் மக்கள் கதைப்பார்கள். அதனால் தான் வந்தேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டாராம். இதையறிந்த சிவநாதன் நமசிவாயகத்திடம் வந்து, ‘‘ஐயா, கணேசன் உயர்தரம் படித்தவன். சிற்றூழியராக வேலை செய்வானோ என்ற நினைப்பில் நான் கேட்கவில்லை. எனது மேலதிகாரி நடராசா ஐயாவிடம் சொல்லி நான் ஏற்பாடு செய்கிறேன்’’ என்று சொன்னானாம். மறுநாள் ஆஸ்பத்திரியில் அம்புலன்ஸ் ஓடும் வேலையைப் பெற்றுக் கொடுத்தானாம். இப்போது கணேசன் நிர்வாக அதிகாரியாகப் பதவி புரிகிறான். அதை அக்குடும்பம் மறக்காது. சிவநாதனைக் கடவுளாகப் போற்றுகிறது’’ என்று தனிகாசலம் பெருமையாக மக்களுக்குச் சொன்னதைக் கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

**33. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**

**செல்லும்வாய் எல்லாம் செயல்**

“சிவநாதன் தன்னால் செய்யக்கூடிய அறச்செயல்களை முகம் பாராது தகுதி பாராது இனம் பாராது செய்பவன். அதனால் அவன் பெரும் நன்மைகளை அடைகிறான். மூன்று மாதங்களுக்கு முன்பு மாலை வேளையில் மழை பெய்து கொண்டிருந்தது. வெளிநாடொன்றில் மருத்துவக் கல்வி பெறச் சென்ற கலையரசன் என்ற மருத்துவரின் மோட்டார் வண்டி பழுதடைந்து வீதியோரத்தில் நின்று விட்டது. மூன்று வருடங்கள் வெளிநாட்டில் இருந்தமையால் அம் மோட்டார் வண்டியினுள் பெறுமதி மிக்கப் பல பொருட்கள் இருந்தன. அதனால் கலையரசனுக்குப் பயம் உண்டானது. மழை பெய்து கொண்டிருந்தமையால் வீதியால் சென்றவர்களும் வாகனங்களும் எதையும் கவனியாது சென்றன. அப்போது அந்த வழியாக வந்த சிவநாதன் தெருவோரத்தில் நின்ற மோட்டார் வண்டியின் அருகே சென்று பார்த்து கலையரசனை அது பற்றிக் கேட்டான். கலையரசனுக்குப் பயமாக இருந்தது. அவன் திருடனாக இருப்பானோ என்று அஞ்சினான்,“தம்பி பயப்படாதையுங்கோ. உங்களின் ஊர் எது?” என்று கேட்டான்.

“எனது ஊர் கோப்பாய். அங்கு யாரையாவது உமக்குத் தெரியுமோ..?”

“ஓ தெய்வேந்திரம் ஐயாவை எனக்குத் தெரியும். அவருக்குக் கீழை தான் நான் வேலை செய்தேன்.”

“தெய்வேந்திரம் ஐயாவின்ரை மகன் தான் நான்”

“கலையரசனோ..? என்ன தம்பி நான் சிவா..”

“எட சிவா அண்ணையோ. அப்ப நான் வீட்டை போறன் நீங்கள் வண்டியைத் திருத்திக் கொண்டு வாருங்கோ” என்று சொல்லி விட்டு கலையரசன் சென்றுவிட்டான்.

“சிவநாதன் அன்று இரவு முழுவதும் விழித்திருந்து வண்டியைக் காவல் காத்து விட்டு மறுநாள் வண்டியைத் திருத்திக் கொண்டு சென்று கொடுத்தவனாம். அதனால் தெய்வேந்திரமும் கலையரசனும் தானாம் சிவநாதனின் பேர்த்திக்குத் திருமணம் செய்து வைத்தது. சிவநாதனது பேர்த்தியின் மாப்பிளை வைத்தியராம். அவர் தெய்வேந்திரத்தின் சகோதரனின் மகனாம். கலையரசன் திருமணம் செய்யாதிருந்தால் அவனுக்குச் சிவநாதனின் பேர்த்தியைச் செய்து கொடுத்து சம்மந்தியாக்கியிருப்பேன்” என்று தெய்வேந்திரம் சொன்னதாக ஊர் மக்கள் பேசிக்கொள்கிறார்கள்” என்றது குமரன் எலி.

**34. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**

**ஆகுல நீர பிற.**

“கோவிலின் நிர்வாக சபையின் பொதுக்கூட்டம் சனிக்கிழமை நடைபெறப்போகிறதாம். இப்போது நமசிவாயகம் தான் தலைவராக இருக்கிறார். அவர் பற்றவர். அதனால் எப்பொருளிலும் ஆணவப்படாதவர். ஆசைகள் இருந்தால் தான் மனதில் குற்றங்கள் பலவும் இருக்கும். மனத்தூய்மை இல்லாதவர்கள் செய்யும் செயல்களெல்லாம் புகலுக்காகவே செய்யப்படுகின்றன. கோவில் நிர்வாக சபைக்கான பொதுக் கூட்டம் கடந்த பத்து வருடங்களாகப் போட்டியின்றியே தெரிவு செய்யப்பட்டது. இம்முறை தலைவர் பதவிக்கு உருத்திரகுமாரன் போட்டியிடப் போகிறானாம். பாடசாலையில் பல பொருட்களை களவெடுத்து ருசிப்பட்டவன் இப்போ கோவிலைக் கொள்ளையடிக்க வருகிறான் என்று சனம் கதைக்குது” என்றது குமரன் எலி.

“யார் போட்டி போட்டாலும் நேர்மையானவர்களைத் தான் சனம் தேர்ந்தெடுக்கும். உருத்திரகுமாரனிட்டை வாங்கிக் குடிக்கும் ஆட்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களை நம்பித்தான் அவர் போட்டியிடுகிறான்” என்று நேற்று கோவிலடியில் கதைத்தவை.

“உருத்திரகுமாரனுக்குப் படிப்பிக்கவே தெரியாது. கோவிலை நடத்துவரே” லட்சுமி எலி கேட்டது.

“ஆசை ஆரை விட்டது. கேட்டாத் தான் தன்ற நிலை தனக்குத் தெரியும். அங்கை பார் தணிகாசலம் பரபரப்புடன் வருகிறார். அவரோடு கனசனம் வருது” என்றது குமரன் எலி.

“நமசிவாயகம் ஐயா, இராத்திரி யாரோ உருத்திரகுமாரனைக் கடுமையாகத் தாக்கி விட்டார்களாம்” பாத்தியா லட்சுமி இவருக்கு உந்த வேலை தேவையே. நேர்மையானவன், ஒழுங்கானவன் தான் கோவில் நிர்வாகத்திற்குத் தேவை என்று உணர்ந்ததாலை தான் அடிச்சிருக்கினை” என்றது குமரன் எலி.

**35. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**

**இழுக்கா இயன்றதும் அறம்**

“உருத்திரகுமாரனுக்கு பலமான அடியே?” என்று கேட்டது லட்சுமி எலி.

“தணிகாசலம் ஏதோ சொல்கிறார். அதைக் கேட்க விடு” பொதுவேலை செய்வோர் பொறாமை, ஆசை, சினம், பிறரைப் புண்படுத்தும் கடுஞ்சொற்கள் ஆகிய நான்கையும் ஒதுக்கி வாழ வேண்டும். உருத்திரகுமாரனுக்குக் கதைக்கப் பேசத் தெரியாது. அதிபரோடையும் பிரச்சினையாம். அவரை இடம் மாற்றம் செய்யுமாறு அதிபர் கேட்டுள்ளாராம். பிள்ளைகளுக்கு அன்புடனும், பொறுமையுடனும் கற்பிக்க வேண்டும். பிள்ளைக்கு விளங்கும் வரை திருப்பித் திருப்பிக் கற்பிக்க வேண்டும். இவன் பிள்ளைகள் ஏதாவது கேட்டால் முரட்டுத்தனமாக அடிப்பான். போன கிழமை ஏகாம்பரத்தின்ரை மகனுக்கு அடித்தவனாம். ஏகாம்பரமும் பிள்ளைகளும் இவனை அடித்துக் கொல்ல வேண்டுமென்றவங்கள். அதை விட நேற்று

கள்ளுவிக்கும் தவறணையில் பிரச்சினைப்பட்டவனாம். ஆர் அடிச்சாங்களோ ஆருக்குத் தெரியும்''

''ஒவ்வொருவரும் துன்பங்களைத் தாமே தேடிக்கொள்கிறார்கள். நமசிவாயகம் கோவிற் செயற்பாடுகள் தனது ஆன்மீக வாழ்வுக்குத் தடையாக இருக்கிறதென்றும், இளைஞர்கள் யாராவது நிர்வாகத்தைப் பொறுப்பேற்க வேண்டும்'' என்றும் சொன்னவர். பதவிக்கு ஆசைப்பர்றவை பொறாமை, ஆசை, சினம், பிறரைப் புண்படுத்தும் கடுஞ்சொற்கள் ஆகியவற்றைத் தவிர்த்தால் மக்களே அவர்களைத் தெரிவு செய்வார்கள்'' என்றது குமரன் எலி.

''உண்மை'' என்றது லட்சுமி எலி.

**36. அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது**

**பொன்றுங்கால் பொன்றாத் துணை.**

''நேற்று மாலை நமசிவாயகம் நல்ல பல புத்திமதிகளை மக்களுக்குக் கூறினார். அதைக் கேட்க மகிழ்ச்சியாக இருந்தது'' என்றது குமரன் எலி.

''எதைச் சொன்னாலும் மனிதர்கள் அந்த இடத்திலேயே விட்டு விடுவர். அப்படி என்ன சொன்னார்?'' என்று கேட்டது லட்சுமி எலி.

''அன்பான எனது ஊர்மக்களே, எனக்கு எண்பது வயது. மனம் இளமையாக இருக்கிறது. ஆனால் உடல் தள்ளாடுகிறது. இம் முறை என்னைக் கோவில் தலைவராகத் தெரிவு செய்யாதீர்கள். தெரிவு செய்தாலும் ஏற்கமாட்டேன். பொதுச்சேவையையும், அறச்சேவைகளையும் இளமையில் இருந்தே செய்தல் வேண்டும். நாம் இப்போது இளையவர்களாக இருக்கிறோம். வயது வந்த காலத்தில் செய்வோம் என நினைக்காதீர்கள். உயிர் கருவிலும் போகும் பிறந்தவுடனும் போகும் நூறு வயதிலும் போகும். எப்போ போகும் என்று யாருக்கும் தெரியாது. உயிரோடு கூட வருவது நீங்கள் செய்த நற்சேவைகளே. அதாவது தான தர்மங்களும் ஒழுக்கமாகச் செய்யப்பட்ட பொதுச்சேவைகளின் பயன்களுமே. சென்றவாரம் சம்பந்தன் இருபத்தாறு வயதில் விபத்தின் மூலம் இறந்தான். இப்படிப் பல இளைஞர்கள் தினந்தோறும் இறக்கிறார்கள். இறப்பது இயல்பானது. இறக்கும் போது கூட வருபவற்றைத் தேடுவது சிரமமானது. எனவே கோவில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று உங்கள் வாழ்வை வளப்படுத்துங்கள்'' என்றவர் என்றது குமரன் எலி.

''எல்லோரும் கேட்டு விட்டு எழுந்து சென்றிருப்பார்கள். எல்லோரும் பணம் தேட ஆலாய்ப்பறக்கிறார்கள். இதில் பொது வேலை செய்ய எங்கே நேரமிருக்கு. பொது வேலை செய்ய விரும்பவோர் பணத்திற்கும், புகழுக்கும் ஆசைப்பட்டவர்களே'' என்றது லட்சுமி எலி.

37. **அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை**

**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.**

''சாதாரணமான நிகழ்வுகளைக் காட்டி பெரும் தத்துவங்களைக் கூறுவதில் வல்லவர் நமசிவாயகம். அவரின் பேச்சைக் கேட்டுக்கொண்டேயிருக்கலாம்'' என்றது குமரன் எலி.

''அப்படி என்ன சொன்னவர்?'' என்று கேட்டது லட்சுமி எலி.

''அறத்தின் பயனை நாம் இது தான் என்று சொல்ல முடியாது. ஒருவர் பெரிய அதிகாரியாக இருந்தார். அரசனின் ஏவலாளர்கள் அவரைப் பல்லக்கில் வைத்துச் சுமந்து சென்றனர். இது தினமும் நடைபெறும் நிகழ்வு. அதைக் கண்ட மக்கள் அவர் செய்த தர்மத்தின் பயன் அதுவென்று கூறிப்பொறாமைப்பட்டனர். அவர் ஓய்வு பெற்ற பின் கால்நடையாகவே எல்லா இடங்களுக்கும் சென்று வந்தார். இருக்கும் இடத்தைப் பொறுத்துத் தான் மதிப்பு மரியாதை ஏற்படும். அது அறத்தின் செயலல்ல. அதே நாட்டில் இன்னொரு தருமவான் இருந்தார். அவரை மக்கள் கடவுளாக மதித்தனர். அவர் வயோதிபம் அடைந்த போது அவர் செல்ல வேண்டிய இடங்களுக்கு மக்கள் அவரைப் பல்லக்கில் வைத்துச் சுமந்து சென்றனர். ஒருவர் செய்யும் அறச்செயல்களைக் கடவுள் உணர்ந்து அவர்களுக்குப் பயன் கொடுப்பார். அது நிலையானது. பதவி, அதிகாரம் என்பவற்றால் வரும் சலுகைகள் அவர்களின் ஓய்வின் பின் வராது. முதுமையில் அவர்களுக்கு உதவுவார் எவருமில்லை'' என்று சொன்னவர். ஊர்ச்சனங்கள் சிவநாதனையும் மால்மருகனையும் ஒப்பிட்டுப் பேசினர்'' என்றது குமரன் எலி.

38. **வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**

**வாழ்நாள் வழி அடைக்குங் கல்.**

''தகப்பன் இறந்தமையால் மடத்திற்கு வராதிருந்த சுப்பிரமணியம் அன்று காலை நமசிவாயகத்திடம் வந்து;''ஐயா,ஒரு நாள்க் கூட நான் மடத்தில் சமையல் வேலை செய்யாதிருந்ததில்லை. ஏனென்றால் அறம் செய்யத் தவறிய நாள் என்று ஒன்று ஏற்படாமல் ஒருவன் அறச்செயல்களைச் செய்வானேயானால், அச்செயல் மறுபடியும் பிறவி எடுக்கும் வழியை அடைக்கும் கல்லாகச் செயற்படும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். எனது தகப்பனார் இறந்தமையால் கடந்த ஒரு மாத காலமாக நான் எந்த அறச்செயல்களையும் செய்யவில்லை. அதனால் பாதிப்பு ஏதாவது வருமா ஐயா?'' என்று மனம் வருந்திக் கேட்டதைக் கண்டதும் எனக்குக் கவலையேற்பட்டு விட்டது'' என்றது குமரன் எலி.

''தகப்பனின் கடமையைச் சரி வரச்செய்யாவிட்டாலும் பாவம் தான் ஏற்படும். அத்துடன் தகப்பன் இறந்தால் முப்பத்தொரு தினங்கள் ஒதுங்கியிருக்க வேண்டும். இது கூடச் சுப்பிரமணியத்திற்குத் தெரியாதா…?'' என்று கேட்டது லட்சுமி எலி.

“அதைத் தான் நமசிவாயகமும் சொன்னவர். நாளையில் இருந்து அன்னதானம் கொடுக்கப்போகுறார்களாம். ஏழை எளியவர்களுக்கென்று கொடுக்கும் உணவை வசதியானவர்களும் பெற்று உண்பதோடு வீட்டில் உள்ளவர்களுக்கும் வாங்கிச் செல்வது எந்த வகையில் நியாயம்” என்று கேட்டது குமரன் எலி.

“புண்ணியம் செய்வோர் அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. நீங்கள் ஏன் கதைக்கிறீர்கள்” என்றது லட்சுமி எலி.

“வறிய சனம் தொழிலுக்குச் சென்று விட்டுத் தாமதித்து வந்தால் உணவு இராது. அதனால் தான் சொன்னேன்” என்றது குமரன் எலி.

**39. அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**

**புறத்த புகழும் இல**

“இராமநாதனின் மகள் ஆரணியின் திருமணம் குழம்பிவிட்டதாகக் கதைக்கிறார்கள். உனக்குத் தெரியுமா…?” என்று கேட்டது குமரன் எலி.

“ஓ சிறிது நேரத்திற்கு முன்னம் மடத்துப் பக்கம் போனேன். அங்கு தான் பலரும் கூடியிருந்து கதைத்தார்கள். மாப்பிளைப் பகுதி பக்கத்து ஊரைச் சேர்ந்தவையாம். மாப்பிள்ளை பெரும் பணக்காரனாம். அவருக்கு காலசர்ப்பயோகம் இருக்காம். அதனால் பேசிவந்த திருமணங்கள் எவையும் பொருந்தவில்லையாம். இராமநாதனின் மகனின் சாதகம் தானாம் பொருந்தியது. இராமநாதனும் மனைவியும் ஆசிரியர்கள். அதனால் நல்ல குடும்பம் என்று நினைத்துச் சம்மதித்தார்களாம். பிறகு தானாம் இராமநாதன் தீயசெயல்கள் அனைத்தையும் செய்பவர் என்று தெரிய வந்ததாம். அதனால் மாப்பிள்ளையின் தகப்பன் மறுத்திட்டாராம்,“நல்ல செயல்களைச் செய்து அதனால் வரும் இன்பம் தான் உண்மையான இன்பம். தீயசெயல்களைச் செய்து அதன் மூலம் வரும் இன்பம், இன்பம் போலத் தோன்றிப் பல துன்பங்களைத் தரும். அதனால் இச்சம்பந்தம் வேண்டாம்” என்றிட்டாராம். இராமநாதன் இடிந்து போய் இருக்கிறாராம்” என்றது லட்சுமி எலி.

“ஊரில் தனக்கு வேண்டாதவர்களின் பிள்ளைகளின் சம்பந்தங்களைக் குழப்புவாராம் இராமநாதன். இப்பத்தான் அவருக்கு அதன் தார்ப்பாரியம் புரிந்திருக்கிறது” என்று கதிரேசன் கோவிலடியில் சொல்லிக் கொண்டிருந்தவர்” என்றது குமரன் எலி.

“இனி எப்படி வீதிகளில் நடமாடப்போகிறார்?” என்று கேட்டது லட்சுமி எலி.

**40. செயற்பால தோரும் அறனே ஒருவர்க்கு**

**உயற்பால தோரும் பழி**

“கதிரேசன் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றதில்லை. ஆனால் வாழ்வியலுக்குத் தேவையான அத்தனையும் அவருக்குத் தெரியும். இராமநாதன் உருத்திரகுமாரன் ஆசிரியர்களை விட அறிவாளி…” என்றது குமரன் எலி.

“கதிரேசன் நல்ல மனிசன் தான். ஆனால் அவரைப் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்” என்று கேட்டது லட்சுமி எலி.

“நான் இவ்வூருக்குப் புதியவனென்றாலும் கோவிலுக்கு வருபவை கும்பிர்றத்திலும் பார்க்க ஊர்க் கதைகளைத் தானே விரும்பிக் கதைக்கினை. பலர் ஊர் வம்பு பேசத்தான் வரீனை. மடத்துக்குச் சாப்பிட வாறவையும் சாப்பிட்டு விட்டு ஊர்க் கதை கதைக்கினை. ஊர்க்கதை கதைக்கிற நேரம் ஏதாவது பிரயோசனமான வேலைகளைச் செய்யலாம். காலமை கதிரேசன் கோவிலில் ஊர்க் கதைகளைக் கதைத்துக் கொண்டிருந்தவர்களுக்குச் சொன்னதை வைத்துச் சொன்னன்” என்றது குமரன் எலி.

“உவை ஒருத்தரையும் திருத்தேலாது. அன்னதானம் கொடுப்பதன் அர்த்தத்தையே பாழாக்குகிறார்கள்” என்றது லட்சுமி எலி.

“அறச்செயல்களைச் செய்யாவிட்டாலும் பயனில்லாத கதைகளைக் கதைத்து பாவத்தைத் தேடாதைங்கோ. கதைக்கிற நேரம் வீதியைத் துப்பரவு செய்யலாம், மரங்களுக்கு நீர் பாய்ச்சலாம், விளக்குகளைத் துப்பரவு செய்யலாம். இவையெல்லாம் அறச்செயல்கள். தயவு செய்து கோவிலடியில் தேவையில்லாதவற்றைக் கதைத்துப் பாவத்தைத் தேடாதீர்கள். இராமநாதன் தீயவன் என்பது ஊருக்குத் தெரியும். அதை ஏன் திரும்பத் திரும்பக் கதைக்கிறீர்கள். இராமநாதனின் மகள் நல்லவள். அவளின் நலத்தைக் காக்க வேண்டும். ஒரு குமரைப் பற்றிக் கதைப்பது பாவம்என்றவர். யாரும் எதுவும் கதைக்கவில்லை” என்றது குமரன் எலி.

“அவர் சென்ற பின் எல்லோருமாகச் சேர்ந்து கதைத்திருப்பார்கள்” என்றது லட்சுமி எலி.

## இல்வாழ்க்கை - 05

**41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை.**

“ஏழை எளியவர்களுக்காகக் கோவில் மடத்தில் உணவு கொடுக்கப்படுகிறது. உணவை வாங்கிச் சாப்பிட்டு விட்டு உருத்திரகுமாரனின் தந்தை; “இது சாப்பாடே கடமைக்குக் கொடாதைங்கோ சாப்பிடக் கூடியதாகக் கொடுங்கோ” என்றாராம். அதற்கு சின்னத் தம்பி சொன்னதாம்; “இந்தச் சாப்பாட்டுக்கு என்ன குறை. இது வீடே ஒவ்வொருவரினதும் சுவையறிந்து உணவு கொடுக்க.நூறு இருநூறு பேருக்குச் சமைக்கும்

போது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கும். உனக்கென்ன குறை. மனிசியில்லாவிட்டாலும் பிள்ளைகள் இருக்கு. அவர்களிடம் சாப்பிடலாம் தானே'' என்றதால் பெரும் பிரச்சினை'' என்றது குமரன் எலி.

''உருத்திரகுமாரன் பட்டதாரி ஆசிரியர். தகப்பன் மிகவும் கஷ்டப்பட்டுப் படிப்பித்தது. அவரைக் கவனமாகக் காப்பாற்றக் கூடாதே'' என்றது லட்சுமி எலி.

''மனிதர்களைத் திருப்திப்படுத்தவே முடியாது. இல்வாழ்வான் என்பவன் தன் பெற்றோர், மனைவி மக்கள் ஆகிய முத்தரப் பினர்க்கும் நல்வழி நின்று சகல உதவிகளையும் செய்தல் வேண்டும். உருத்திரகுமாரன் பாடசாலையில் பிரச்சினை. தகப்பன் ஊரில் பிரச்சினை. இரண்டு பேரும் படிச்சவை. படிச்சவை சமூகத்திற்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும். அப்பத்தான் சமூகம் அவர்களைப் பின்பற்றும். கற்றவர்கள் தாம் கற்றபடி வாழாவிட்டால் தாம் கற்ற கல்வியால் என்ன பயன்?'' என்று கதிரேசன் உதயகுமாரின் தந்தையைக் கேட்டவர்'' என்றது குமரன் எலி.

''எதைக் கேட்டால் என்ன? என்னத்தைச் சொன்னாலென்ன? விளங்குபவனுக்குத் தான் விளங்கும்'' என்றது லட்சுமி எலி.

**42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை.**

''மாரியபட்சம் தொடங்கிவிட்டது. நாளைக்கு ஐந்நூறு பேருக்குச் சாப்பாடு செய்ய வேண்டும்'' என்று கதிரேசன் சுப்பிரமணியத்திற்குச் சொன்னவர். மாலையபட்சத்தில் ஏன் உணவு கொடுப்பான் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் போது அவர் சொன்னார், ''சுப்பிரமணியம் இல்வாழ்வானுக்குப் பல கடமைகள் இருக்கு. குடும்பத்தவன் துறவிகள், ஏழைகள், அனாதைகளுக்கு உணவு கொடுத்தல் வேண்டும். அத்துடன் பிள்ளைகளால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்கள், ஆதரவில்லாமல் தன்னிடம் வந்து வாழ்ந்து இறந்தவர்களுக்கு மாலையபட்சத்தில் அவர்களை நினைவு கூர்ந்து அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பூசைகள் செய்து ஏழைகளுக்கு உணவளித்தல் வேண்டும். நாளைக்குக் குருக்கள் மடத்திற்கு வந்து கிரியைகள் செய்வார். கந்தவனத்திடம் சொல்லி அதற்கான ஆயத்தங்களைச் செய். உருத்திரகுமாரனது பேரனும் உருத்திரகுமாரனின் தகப்பனைப் போலத் தான் வாழ்ந்தவர். அப்போ மடம் இல்லை. அதனால் அவரை எனது வீட்டில் வைத்துப் பராமரித்தேன். அத்துடன் நமசிவாயகத்தின் தகப்பன் தருமரத்தினத்தின் நினைவாக நமசிவாயகம் நாளை மறுதினம் அடியவர்களுக்கு உணவு கொடுக்கவுள்ளார். அதற்கான ஏற்பாடுகளையும் செய்யச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''கதிரேசன் மடத்தில் அடிக்கடி உணவு கொடுக்கிறார். அதனால் மதிப்போடும் மரியாதையோடும் இருக்கிறார்'' என்றது லட்சுமி எலி.

**43. தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு**

**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை**

‘‘இன்றைக்கு மடத்திலை கதிரேசன் உணவு கொடுக்கிறார். வா வேடிக்கை பார்ப்பம்’’ என்றது குமரன் எலி.

குமரன் எலியும், லட்சுமி எலியும் பிள்ளைகளும் அன்னதான மடத்தின் முகட்டில் இருந்தன. மாலையபட்சத்திற்கான கிரியைகளைச் செய்தார். கிரியைகள் முடிந்த பின் அவர் பேசினார்,‘‘ஐயர் பேசப்போறார்’’ என்றது லட்சுமி எலி.

‘‘எதைப் பேசினாலும் மனிதருக்கு ஏறாது. ஐயர் கடமைக்காகப் பேசுகிறார்’’ என்றது குமரன் எலி.

‘‘நெடுக அலட்டிக் கொண்டே இருப்பீர்கள். கத்தாமல் இருங்கோ. பேச்சைக் கேட்பம்’’ என்றது லட்சுமி எலி.

‘‘அங்கை பார் பூசை நேரத்திலாவது அமைதியா இருந்து கடவுளை வணங்குகிறார்களா? பாவம் மனிதர்கள்’’ என்றது குமரன் எலி.

‘‘அன்பான அடியார்களே, இல்வாழ்வான் என்பவன் தன்குடிப்பிறந்த முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தவர், தான் என்ற ஐவகையும் காக்க வேண்டும்’’ ஐயர் பேசிக்கொண்டிருந்தார்.

‘‘யாரைக்காக்கிறார்களோ இல்லையோ தன்னைக் காத்துக்கொள்வார்கள். ஏமாற்றுக்கள், ஊழல்கள், பொய்கள் சொல்லிப் பொதுப் பணத்தைச சுருட்டித் தமது வேலைகளைப் பார்ப்பதில் மனிதர்கள் கெட்டிக்காரர்கள். இப்போ சுயநலத்தைத் தவிர மனிதனுக்கு வேறு எதுவும் இல்லை. பூசைகள், பொங்கல்கள் எல்லாம் நேர்த்திக் கடன் என்ற பெயரில் இலஞ்சம் தான் கடவுளுக்குக் கொடுக்கிறார்கள். உண்மையானவர்களானால் மனஅமைதியுடனும் மனச்சுத்தத்துடனும் பூசைகளைப் பார்ப்பார்கள், பிரசங்கத்தைக் கேட்பார்கள்’’ என்றது குமரன் எலி.

‘‘மற்றவர்களை விட்டாலும் எத்தனை பெற்றோர் உணவு இல்லாமல் அலைகிறார்கள். நாம் அப்படி அலைகிறோமா?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

‘‘எமக்குப் பற்றில்லை. கிடைத்ததை உண்போம். மகிழ்வுடன் இருப்போம். சுறுசுறுப்பாக உழைப்போம். ஆனால் மனிதர்கள் அப்படியில்லையே. அதனால்தான் துன்பப்படுகிறார்கள்’’ என்றது குமரன் எலி.

**44. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**

**வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.**

‘‘கதிரேசன் கடவுள் மாதிரியானவராம். அவருக்கு எதிலும் பற்றுக்கள் இல்லையாம். மிகமிக நல்ல மனிதர்’’ என்று மடத்திலை இருந்த சிவலிங்கம் முதலாளி சொன்னார். என்றது குமரன் எலி.

‘‘சிவலிங்கம் கூடாத மனிதன் என்று கதைக்கிறார்கள். அறாவட்டி வாங்குபவராம். மனிதநேயம் பார்ப்பதில்லை என்று சனம் கதைக்கிறத்தை நான் கேட்டிருக்கிறேன்’’ என்றது லட்சுமி எலி.

‘‘ஓ நானும் கேள்விப்பட்டனான். பத்து வருடங்களுக்கு முன்னம் இங்கு கடும் பஞ்சம் தலைவிரித்தாடியதாம். கிராமத்தில் ஒழுக்கக்கேடுகளும் கொள்ளைகளும் நடைபெற்றதாம். சிவலிங்கம் அரிசி வியாபாரம் செய்பவர். அவர் பெரிய தனவந்தர். கிராமத்தில் கொள்ளைகள் நடைபெறுவதால் சிவலிங்கம் தன்னிடமிருந்த தங்க ஆபரணங்கள் முழுவதையும் சுமார் இருநூறு பவுண் நகைகளை அரிசிச் சாக்கினுள் மறைத்து வைத்திருக்கிறார். இது அவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. சிவலிங்கம் அரிசியை விலை கூட்டி விற்றுவிட்டு அந்தப் பாவம் தீர மாதத்திற்கு ஒரு முறை அன்னதானம் செய்வாராம். அந்த மாதம் வழங்கப்போற ஒரு மூடை அரிசியைக் கொண்டு சென்று கொடுத்திருக்கிறான். கதிரேசன் அந்த மூடையைப் பிரித்துப் பார்த்த போது அதற்குள் ஏராளமான நகைகள் இருந்திருக்கின்றன. அவர் அதைப் பற்றி யாருக்கும் சொல்லாது எடுத்துச் சென்று சிவலிங்கத்திடம் கொடுத்துவிட்டார். சிவலிங்கம் இப்படியொரு மனிதனா என்று திகைத்துப்போனார். கதிரேசனுக்குச் சன்மானம் கொடுத்திருக்கிறார். அதைக் கதிரேசன் வாங்காது சொன்னாராம்,‘‘ஐயா, பொருள் தேடும் போது அதை அறவழியில் தேட வேண்டும். பின் அதை அறவழியில் செலவு செய்தல் வேண்டும். தானதர்மம் செய்தல் வேண்டும். அப்படி வாழ்வது தான் சிறப்பான வாழ்க்கை என்று கூறினாராம்’’அதன் பின் சிவலிங்கம் அறவழியில் வாழ ஆரம்பித்தாராம். கதிரேசனின் மகளைத் தனது மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தாராம். இதெல்லாம் தெரிந்தும் பலர் தீய செயல்களைத் தானே செய்கின்றனர்’’ என்றது குமரன் எலி.

**45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது.**

‘‘பகல் இரண்டு மணிக்குப் பின்பு ஊர்ச்சனம் முழுவதும் கோவிலடியிலேயே நிற்குது. கதிரேசன் அயல் ஊரிலுள்ள நண்பரைப் பார்க்கப் போனவராம். இன்னும் வரவில்லையென்று அவரது மனைவி மகாலட்சுமியும் பிள்ளைகளும் விசாரிப்பதற்காக் கோவிலடிக்கு வரச் சனம் கூடீற்றுது. பதினொரு மணிக்குள் வந்து விடுவேன் எனக் கூறிச் சென்றாராம். மாலை ஐந்து மணியாகியும் வராததால் சனம் துடிதுடிக்குது’’ என்றது குமரன் எலி.

‘‘கதிரேசன் நல்ல மனிதன். ஊருக்கு உதவுபவர். குடும்பத்தவர்களிடமும் நண்பர்களிடமும் சுற்றத்துடனும் அன்பாகவும் பண்பாகவும் நடப்பவர். அதனால் சனம் துடிப்பதில் அதிசயமில்லை’’ என்றது லட்சுமி எலி.

‘‘ஒரு குடும்பத்தன் எல்லோருடனும் அன்புடன் பழகி அறச்செயல்களைச் செய்து வந்தால், ஊர்மக்கள் அதை மறவாது அச்செயல்களைத் தாமும் செய்வர். இது இயல்புதானே’’ என்றது லட்சுமி எலி.

‘‘அங்கை பார் நாலைந்து பேர் பரபரப்புடன் வருகிறார்கள்,‘‘கதிரேசண்ணை வாரார். அவரது நண்பனுக்கு திடீரென்று சுகவீனம் வந்து விட்டதாம். அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சையளித்து விட்டு வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு வாறார்’’ என்றான் ஒருவன்.

‘‘கதிரேசன் அன்புமயமானவர். அவர் சாப்பிடாமல் மனைவியும் பிள்ளைகளும் சாப்பிட மாட்டார்களாம். அருமையான அன்பான குடும்பம்’’ என்றது குமரன் எலி.

**46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**

**போஒய்ப் பெறுவ தெவன்**

நமசிவாயகம் பரபரப்புடன் வந்தார். அவர் அழுது கொண்டிருக்கும் கதிரேசனது மனைவிக்குச் சொன்னார், ‘‘மகா, ஒருவன் முறைப்படி இல்வாழ்க்கையை வாழ்வானேயானால் அவன் தவம் செய்யவேண்டியதில்லை என்று பெரியவர்கள் சொல்வார்கள். தவம் செய்வது இலகுவானது. முனிவர்கள் காட்டுக்குச் சென்று பன்னசாலை அமைத்துத் தவம் செய்வதால் அவர்களுக்கு உலகில் நடப்பவை எதுவும் தெரியாது. அதனால் உலகபந்தங்கள் எதுவும் இல்லை. சண்டைகள் இல்லை, சச்சரவுகள் இல்லை. நிம்மதியாகத் தவம் செய்யலாம். ஆனால் இல்வாழ்க்கை அப்படியானதல்ல. தனது பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, ஊர்ப் பிரச்சினை எனப் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்வது சுலபமான செயலல்ல. கதிரேசன் அன்புமயமானவர். ஓர் உயிர் துன்பப்பட்டால் அதை நீக்காது ஓயமாட்டார். அதனால் தான் அவர் தனது நண்பனை வைத்தியசாலையில் அனுமதித்து அங்கு சிகிச்சை முடிந்த பின் வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு வந்துள்ளார். இது எல்லோராலும் முடியாத காரியம். நீ அழாதை. உத்தமமான கணவரைப் பெற்ற நீ உயர்ந்தவர்’’ என்றாள். அவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்கக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது என்றது குமரன் எலி.

‘‘அவர் சொன்னது சரி தானே. இங்கே மார்க்கண்டு என்றொருவர் துறவறம் பூண்டு விட்டதாகச் சொல்கிறார்கள். அவரது குடும்பம் பிச்சை எடுக்கிறது. அவர் சுலபமாக இருந்து நல்ல உணவுகளை உண்கிறார். இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**

**முயல்வாருள் எல்லாம் தலை**

கதிரேசன் கோவிலடிக்கு வந்த போது ஊரவர்கள் அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். நமசிவாயகம் சொன்னார்,

‘‘உன்னைப் போலத் தான் மனிதர்கள் வாழவேண்டும். இல்வாழ்வான் என்பவன் தனது குடும்பத்தவரின் ஒத்துழைப்புடன் அறச்செயல்களைச் செய்து வருவானேயானால் அவன்

விண்ணுலகில் வாழும் தேவர்களை விட உயர்ந்தவனென்று சொல்லி மக்கள் அவனைப் போற்றுவார்கள். உன்னைச் சிறிது நேரம் காணாமையால், உனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டதோ என்று எண்ணி மக்கள் துடித்த துடிப்பை நான் நேரில் பார்த்தேன்.ஒவ்வொருவரும் தமது குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு ஆபத்து வந்ததாக நினைத்துக் கடவுளைத் தொழுதனர். பலர் உன்னைத் தேடி நீ சென்ற இடத்திற்குப் புறப்பட்டு விட்டனர். கதிரேசா நீ பாக்கியவான். குடும்பத்திற்கென்று பணம் பொருள் சேராது ஊர்மக்களின் நன்மைக்காக வாழ்ந்தாய். அதன் பெறுபேறு தான் இது. தொடர்ந்து சேவையைச் செய். மக்களின் தொண்டு தான் மகேசனின் தொண்டென்று எனது தந்தையார் அடிக்கடி கூறுவார். அதன் அர்த்தத்தை இன்று தான் தெரிந்து கொண்டேன் என்றார்'' என்றது குமரன் எலி.

''அவர் மக்களை மட்டுமல்ல சகல உயிர்களையும் நேசிப்பவர். காலையில் பறவைகளுக்குத் தானியங்கள் போடுவார். பகல் பசுக்களுக்கு உணவளிப்பார். இப்படிப் பலதைச் சொல்லலாம்'' என்றது லட்சுமி எலி.

''பண்போடு வாழ்பவன் பயன் பெறுவான்'' என்றது லட்சுமி எலி.

**48. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**

**நோற்பாரின் நோன்மை உடைத்து.**

''தன்னைச் சுவாமியார் என்று தானே சொல்லிக் குடும்பத்தை விட்டு விட்டு வாழும் மார்க்கண்டு சொன்னதை நினைக்கச் சிரிப்பாகவும் வேதனையாகவும் உள்ளது. திருமணமானவன் இறக்கும் வரை தனது மனைவி மக்களை பிரியவே கூடாது. மக்களின் கடமைகளை நிறைவேற்றிய பின்பு தான் மனைவியோடு துறவு பூண வேண்டும் என்று சமயம் கூறுகிறது. மார்க்கண்டு ஐந்து பிள்ளைகளைப் பெற்ற பின் அவற்றில் ஒன்றாவது தலையெடுக்கு முன் துறவறம் பூண்டமையால் அவனின் மனைவி கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகிறாள். இவர் என்னென்றால் பிறருக்கு உபதேசம் செய்கிறார். மாலை நேரம் கோவிலடிக்கு வந்த மார்க்கண்டு கதிரேசனை அழைத்து திருநீறு கொடுத்து விட்டுச் சொன்னார், ''மகனே, தவம் செய்வாரைத் தமது வழியில் வாழச் செய்து தானும் அறவழியில் வாழ்வது தவம் செய்வானை விடச் சிறப்பானது. என்னைப் போன்ற தவசிகள் பலர் எந்தவிதமான துன்பங்களுமின்றித் தவம் செய்ய உதவுகிறாய். அத்துடன் தவசிகளின் குடும்பத்தைத் தன் குடும்பம் போல எண்ணி உதவிகள் பலவும் செய்கிறாய். அத்துடன் ஊரவர்களின் நலன்களையும் கவனிக்கிறாய். இது சிறப்பான இல்வாழ்வானால் தான் முடியும். நீ சிறப்பானவன். நல்லவன்.நீயும் உனது குடும்பமும் மேன்மேலும் செழித்து வாழ இறைவன் அருள்புரிவார்'' என்றார்.

''அது கதிரேசனுக்குப் பிடிக்கவில்லை என்று அவரது முகம் காட்டியது. இருந்தும் அவர் எதுவும் பேசவில்லை'' என்றது குமரன் எலி.

''கூடியிருந்தவர்கள் சிரித்திருப்பார்களே'' என்றது லட்சுமி எலி.

**49. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அ.்.தும்**

**பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.**

‘‘மார்க்கண்டு கூறியதைக் கேட்ட நமசிவாயகத்திற்குக் கோபம் வந்தது, ‘‘நீ மற்றவர்களைப் புகழ்ந்து பேசாதே. மற்றவர்கள் புகழும் படியாக வாழ். நீ கல்யாணியைக் காதலித்துத் திருமணம் செய்தனீ. உனக்குக் கல்யாணியின் பெற்றோர் பெண் தர மறுத்ததால் அவளை வற்புறுத்தி அழைத்து வந்தனீ. இப்ப குடும்பக் கஷ்டம் வந்தவுடன் கடவுளை அடைய வேண்டும் என்று துறவறம் பூண்டுவிட்டதாய்ச் சொல்கிறாய். எந்த சமயத்திலும் குடும்பத்தை இடை நடுவில் விட்டு விட்டுத் துறவறம் மேற்கொள்ளும் படி கூறவில்லை. திருமணம் ஆகாதவன் எந்த வயதிலும் துறவறத்தை மேற்கொள்ளலாம். ஆனால் திருமணம் ஆனவன் தனது கடமைகளை முடித்த பின்பு தான் துறவை மேற்கொள்ள வேண்டும் என்று சமயநூல்கள் கூறுகின்றன. நீ விரும்பித் துறவறம் மேற்கொள்ளவில்லை. குடும்பக் கஷ்டம் தாங்க முடியாமல் தான் மேற்கொண்டாய். இல்லறம் தான் அறம். அது தான் சிறப்பானது. கதிரேசனது இல்லறத்தை விட யாரின் துறவறம் மேலானது என்று சொல் பார்ப்போம். உன்னைப் போல உழைக்க கஷ்டப்படுவோர் துறவறம் மேற்கொள்வதால் தான் துறவிகளை மக்கள் துறவிகளை மக்கள் மதிப்பதில்லை. கள்ளச்சாமி, ஆசாமி என்கிறார்கள். நீ துறவு மேற்கொள்ள வேண்டுமானால் உனது குடும்பத்தை மேம்படுத்தி விட்டுப் பின் துறவறத்தை மேற்கொள்’’ என்றார். மார்க்கண்டுவின் முகத்தில் ஈ யாடவில்லை’’ என்றது லட்சுமி எலி.

**50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும்.**

‘‘காலமை மடத்திற்குப் பஞ்சாட்சரமும் மகனும் வந்து கதிரேசனைச் சந்தித்தவை. பஞ்சாட்சரம் விபத்தில் காலை இழந்த பின்பு உழைக்க முடியாது கஷ்டப்படுகிறான். அவனது மகன் ராகுலன் ஏ எல் பரீட்சையில் சித்தியடைந்து விட்டானாம். பஞ்சாட்சரம் அவனை பல்கலைக்கழகத்திற்குச் செல்லுமாறு வற்புறுத்துகிறார். ஆனால் ராகுலன் ஏதாவது வேலைக்குச் செல்ல விரும்புகிறான். அதனால் பஞ்சாட்சரம் அவனைக் கதிரேசனிடம் அழைத்து வந்தார். அவன் சொன்னான்,‘‘ஐயா, பல்கலைக்கழகக் கல்வி ஐந்து வருடங்கள். அது வரை யார் வீட்டைக் கவனிப்பது. நான் வேலையானால்…’’ என்று அவன் சொல்ல இடைமறித்துக் கதிரேசன் சொன்னார், ‘‘பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் தகுதி எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. அதனால் நீ பல்கலைக்கழகத்திற்குச் செல். துரைசிங்கம் தனது தொழிற்சாலையில் கணக்குப் பதிவு செய்ய ஆள் தேவையென்றவர். அவருக்குச் சொல்கிறேன். நீ மாலை வேளையில் சென்று வேலை செய்’’ என்றார். ராகுலனும் பஞ்சாட்சரமும் மகிழ்ந்தனர். பஞ்சாட்சரம் சொன்னார்,‘‘நீங்கள் தான் இந்த ஊருக்குச்சாமி. நான்

இந்த உதவியை மறக்கமாட்டன்'' என்றவர். ஊரவர்கள் எல்லோரும் கதிரேசனைத் தெய்வமாக மதிக்கினை'' என்றது குமரன் எலி.

## வாழ்க்கைத் துணைநலம்- 06

**51. மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்**

**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை**

''மார்க்கண்டு மடத்துக்குள்ளிருந்து புலம்பிக் கொண்டிருக்கிறான். நாலைந்து வம்புப் பொடியள் அவருக்குக் கதை கொடுத்துக் கதை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்'' என்றது குமரன் எலி.

''என்ன சொல்லுது மார்க்கண்டு''

''எல்லாம் மனைவியைப் பற்றித் தான். தன்னுடைய மனைவி கதிரேசனின் மனைவியைப் போல இருந்திருந்தால் தான் துறவறம் மேற்கொள்ள வேண்டிய தேவையில்லையாம். மகாலட்சுமி பெயருக்கேற்ற மாதிரி நல்ல குணங்கள் பலவும் ஒன்று சேரப்பெற்றவள். கணவனைத் தெய்வமாக மதிப்பவள். அவரது சொல்லைக் கேட்பவள். எனது மனைவி அப்படியல்ல. நான் சொல்வதைக் கேட்கமாட்டாள். எனது பெற்றோர்களையும் சகோதரர்களையும் நாயாகக் கூட மதிப்பதில்லை. நேரத்திற்குச் சமைக்காள். பிள்ளைகளைக் கவனிக்கமாட்டாள். இதனால் தான் எனக்கு வாழ்க்கை வெறுத்தது'' என்றார்.

''எல்லாவற்றிற்கும் பெண் பிள்ளைகளைக் குற்றம் சொல்லிப் பழகி விட்டார்கள். அவர் உழைக்கிற காசு முழுவதையும் குடித்து விட்டுச் சாப்பாட்டுக்குப் போனால் அவள் எப்படி மதிப்பாள். கதிரேசன் எப்படி வாழ்கின்றார் என்று உங்களுக்குத் தெரியும் தானே. அப்படி ஒரு நாள் என்றாலும் அவர் வாழ்ந்திருந்தால் இவரது மனைவியும் மகாலட்சுமி மாதிரி வாழ்ந்திருப்பாள். ஆம்பிளைகள் எல்லாத் திருகுதாளங்களையும் செய்து விட்டுப் பெண்களைக் குறை சொன்னால் எப்படி? அன்போடு வாழும் எல்லாக் குடும்பமும் பெண்களை மதித்து நடக்குது. அதனால் தான் அவர்கள் மகிழ்வுடன் வாழ்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

''உண்மை'' என்றது குமரன் எலி.

**52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**

**எனைமாட்சித் தாயினும் இல்**

''குடும்பத்திற்கேற்ற நல்ல பண்புகள் மனைவியிடம் இல்லாமல் இருந்தால் அதைக் கணவன் அவளுக்கு உணர்த்தி நல்ல பண்புள்ளவளாக்குதல் வேண்டுமே தவிர அவளைக் குறை சொல்லக் கூடாது. மார்க்கண்டு அவளைக் காதலித்துத் தான் திருமணம் செய்தவன். ஆரம்பத்தில் மகிழ்வாக இருந்த அவர்களின் வாழ்க்கை பின்பு தானாம் பாழானது. அதற்கும்

காரணம் ஒரு பெண்ணாம். இவர் கள்ளுக் குடிக்குமிடத்தில் இருந்த ஒரு பெண்ணில் மயங்கி வருமானத்தை அவளுக்குக் கொடுக்கத் தொடங்கியதால் தான் பிரச்சினைகள் உருவானதாகப் பேசிக்கொள்கிறார்கள். ஆண்கள் பிழைகளை விட்டு விட்டு மனைவிக்கு குடும்பத்திற்கு வேண்டிய நல்ல பண்புகள் இல்லையென்று சொல்வது நியாயமானதல்ல'' என்றது லட்சுமி எலி.

''பெரியவர்கள் மனைவிக்கு குடும்பத்திற்கு வேண்டிய நல்ல பண்புகள் இருந்தால் தான் குடும்பம் சிறப்பாக அமையும் என்று சொல்லியுள்ளனர். அது ஆண்களுக்கும் பொருந்தும் என்று ஆண்கள் நினைத்தல் வேண்டும். நல்ல பண்பான மனைவி மகாலட்சுமி போலத் தனது கணவனின் வருமானத்தை அறிந்து செலவு செய்வாள். கதிரேசன் உயர்வாக வாழுவதற்கு முக்கிய காரணம் மகாலட்சுமி தான்'' என்றது குமரன் எலி.

''இருவரும் ஒழுங்காக வாழ்ந்தால் தான் வாழ்வு சிறக்கும் என்பதை இருவரும் புரிந்து கொள்ளல் வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

### 53. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
### இல்லவள் மாணாக் கடை

''மார்க்கண்டுவை அன்று நமசிவாயகம் பேசியது நன்றாகத் தாக்கி விட்டது. அவர் இரண்டு நாட்களாக யோசித்துப் பார்த்தாராம். தன்னில் தானாம் பிழை. மனைவியானவள் நற்குணமுடையவளாக இருந்தால் குடும்பத்தில் இல்லாததென எதுவும் இராது. மாண்பில்லாதவளாக இருந்தால் இருக்கும் பொருளும் தேவைக்கு உதவுவதாக இராது. மகாலட்சுமி மாண்புடையவளாக இருக்கிறாளென்றால் அதற்குக் கதிரேசனும் முக்கிய காரணி. காதலி என்பவள் களிமண்ணைப் போன்றவள். கணவன் என்பவன் குயவன். அவன் களிமண்ணான தனது மனைவியைத் தனது கை வண்ணத்தால் மாண்புடையவளாக ஆக்க வேண்டும். நான் அதைச் செய்யவில்லை. நான் அவளைக் கொடுமைப்படுத்தும் போதெல்லாம் அமைதியாக இருந்து துன்பத்தை வெளிக்காட்டிக் கொள்ளாது மௌனமாக அழுதவள். நான் அதைத் தவறாகப் புரிந்து கொண்டதால் தான் இந்த நிலை ஏற்பட்டது. எனது மூத்த மகன் நான் மனைவிக்கு அடித்தால் கத்தியை எடுத்துக் கொண்டு வெட்ட வாறான். மகாலட்சுமி அக்காவின் பிள்ளைகள் தகப்பனைப் போல அன்பானவர்களாக, உதவி செய்பவர்களாக வளர்வதற்கு மகாலட்சுமி காரணமாக இருந்தாள். என்றாலும் கதிரேசனின் அன்பான வாழ்க்கை அவரது மக்களைப் பண்படுத்தியது. எனது தீயநடவடிக்கைகள் எனது பிள்ளைகளைத் தீயவர்களாக்கியது. குடும்பம் மகிழ்வாக இருக்க வேண்டுமானால் கணவனும் ஒழுக்கமாக வாழவேண்டும் என்று புரிந்து கொண்டேன்'' என்று மார்க்கண்டு சிவராசாவிற்குச் சொன்னதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்'' என்றது குமரன் எலி.

''காலம் கடந்தென்றாலும் ஞானம் வந்திருக்கு'' என்றது லட்சுமி எவி.

**54. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மைஉண் டாகப்பெறின்.**

‘‘மார்க்கண்டு சொன்னவற்றைப் பொறுமையாகக் கேட்ட சிவராசா சொன்னான், ‘‘நான் உங்களை விட இளமையானவன். இருப்பினும் நான் சிலவற்றைச் சொல்கிறேன். மனைவி என்பவள் கணவனின் அடிமையல்ல. பல வீடுகளில் ஒருவனின் மனைவியின் மீது பெற்றோர், சகோதரர் இனத்தவரென பலர் மேலாண்மை செய்கின்றனர். உங்களது தாயாருக்கு நீங்கள் அவளைத் திருமணம் செய்தது பிடிக்காததால் பல வழிகளாலும் துன்பப்படுத்தியதை ஊரார் அறிவர். இந்நேரங்களில் நீங்கள் மனைவிக்கு விசவாசமுள்ளவராக நடந்திருக்க வேண்டும். அப்படி நீங்கள் நடக்கவில்லை. பெண்ணும் உணர்ச்சிகள் உள்ள ஓர் உயிர் தானே. செயல்களும் சொற்களும் அவளது மனதை எவ்வளவு துன்புறுத்துமென்று தெரியுமா..? மனைவியானவள் தன் கணவனின் மேல் உறுதியான அன்பை வைப்பாரேயானால் அது கணவனுக்கு எல்லா வகையிலும் நன்மையைக் கொடுக்கும். கணவனை மகிழ்வுடன் வாழச் செய்யும். அதை விட்டு விட்டு மனைவி என்பவள் கணவனினதும், கணவனின் இனத்தவரினதும் அடிமை என்று நினைத்தால் வாழ்க்கை நரகமாகி விடும். கற்பென்றும் உறுதியான நிலை பெண்ணிடம் இருக்குமானால் அவளை விட உயர்ந்தவர் யாரும் இல்லை. கற்பென்ற உறுதியான நிலை கணவனுக்கும் இருக்க வேண்டுமென்று பலர் நினைப்பதில்லை. கதிரேசனின் மனைவியும் தணிகாசலத்தின் மனைவியும் தம் கணவர் மேல் உறுதியான அன்பை வைத்தவர்கள். அதனால் தான் அவர்கள் தெய்வமாகப் போற்றப்படுகின்றனர்’’ என்று சிவராசா கூறிய போது மார்க்கண்டு எதுவும் பேசவில்லை’’ என்றது குமரன் எலி.

‘‘சரியான பேச்சு. இதை மறுக்க முடியுமா..?’’ என்றது லட்சுமி எலி.

**55. தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை.**

‘‘ஒரு பெண் தெய்வத்தைப் பூசிப்பது போலத் தனது கணவனை மதித்து நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தாளேயானால் அவர் பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்று பழந்தமிழ் நூல் கூறுகிறது. எனது மனைவி தெய்வத்தைப் போலப் பூசிக்க வேண்டாம். மனிதரைப் போல நடந்து கொண்டால் போதும்’’ என்றான் மார்க்கண்டு.

‘‘சில பாடல்களுக்கு உரையெழுதியோர் தாம் உணர்ந்தவற்றையே எழுதியுள்ளனர். அவை இப்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றன. நாம் தெய்வத்தை முழுமையாக நம்புகிறோம். பேரன்புடன் அதாவது பக்தியுடன் வணங்குகிறோம். கடவுள் மார் விரும்பிய உணவு வகைகளைச் செய்து படைக்கிறோம். இப்படி ஒரு பெண் தனது கணவனுக்குச் செய்வாளேயானால் அவள் தேவையேற்படும் போது பெய்யும் மழைக்கு ஒப்பானவள் என்ற கருத்தும் உண்டு. உனது தங்கையின் கணவனுக்குச் சத்திரசிகிச்சை செய்வதற்காக உனது தங்கை உன்னிடம் பணம் கேட்ட போது நீ கொடுக்க விரும்பினாய். ஆனால் உனது மனைவி

விரும்பவில்லை. அதனால் உனது தங்கை கதிரேசனிடம் சென்று கேட்டபோது கதிரேசனது மனைவி தனது கழுத்திலிருந்த சங்கிலியைக் கழற்றிக் கதிரேசனிடம் கொடுத்தாள். கதிரேசன் பெரும் பணக்காரர் அல்ல. ஆனால் அவர்கள் மனமொத்து வாழ்கின்றனர். உனது தங்கை சென்று கதிரேசனிடம் நிலைமையை விளக்கிப் பணம் கேட்ட போது, கதிரேசன் கேட்காமலே அவரது மனைவி சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாள். அது கதிரேசனுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. பயிர்கள் வாடும் போது மழை பெய்து பயிர்களைச் செழிக்கப் பண்ணுவது போல கணவன் துன்பப்படும் போது மனைவி மகிழ்வுடன் உதவினால் அது மழையைப் போன்றது என்று சிவராசா மார்க்கண்டுவுக்குச் சொன்னதை நமசிவாயகம் பாராட்டினார்'' என்றது குமரன் எலி.

**56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**

**சொற்காத்துச் சோர்விலாள் பெண்**

''உலகம் சக்தியின் செயற்பாட்டால் தான் இயங்குகிறது. ஓர் ஆணுக்குச் சக்தி நல்ல பெண். பெண் நினைத்தால் நல்லதையும் செய்யலாம் தீயதையும் செய்யலாம். ஒரு நல்ல பெண் முதலில் தன்னைத் திடப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தன்னால் குடும்பத்தவரை, உறவினரை, சுற்றத்தவரைக் காப்பாற்றி நல்வழிப்படுத்த முடியும் என்று நினைத்தல் வேண்டும். அதே நேரம் தனது கணவனையும் மகிழ்வுடன் வாழச் செய்து, அவன் மகிழ்வுடன் தொழிலைச் செய்ய உதவ வேண்டும். கதிரேசனின் மனைவி மகாலட்சுமியைப் பார். தனது கணவனுக்கு என்னென்ன தேவைகள் எப்போது வருமென்று தெரியும். தோட்டச் செய்கையின் போது வெங்காயம் நடவேண்டுமானால் எவ்வளவு வெங்காயம் தேவை. எத்தனை கூலியாட்கள் தேவை. எவ்வளவு உணவு செய்தல் வேண்டும் என்பதெல்லாம் தெரியும். கதிரேசன் நாளைக்கு வெங்காயம் நடவேண்டுமென்று சொன்னால், அவள் தேவையான வெங்காயத்தைக் கூலிக்காரர்களைக் கொண்டு மூடையாகக் கட்டி வைப்பாள். உணவு தேவையான அளவு சமைப்பாள். கூலிக்காசை எடுத்து வைப்பாள். இதனால் கதிரேசனுக்கு வேலைச் சுமை பாதியாகக் குறையும். அதனால் அக்குடும்பத்தின் புகழும் காப்பாற்றப்படும். இது தான் ஓர் அறிவுள்ள பெண்ணின் தன்மை. இதனால் கதிரேசன் பேரும் புகழுடன் வாழ்கிறார்'' என்று நமசிவாயகம் மார்க்கண்டுக்குச் சொன்னான்'' என்றது குமரன் எலி.

''உதுகளெல்லாம் மார்க்கண்டுவுக்கு விளங்கவா போகிறது'' என்றது லட்சுமி எலி.

**57. சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்**

**நிறைகாக்கும் காப்பே தலை**

''நீ உன்னுடைய மனைவியை நம்புவதே இல்லை. அவள் கூண்டில் அடைக்கப்பட்ட பறவையைப் போல துன்பங்களுடன் வாழ்கிறாள். மகாலட்சுமி அப்படியா வாழ்கிறாள். கதிரேசனது வருமானம் எவ்வளவு என்பது மகாலட்சுமிக்குத் தெரியும். அவர் உழைக்கும் பணம் முழுவதையும் மகாலட்சுமியிடம் கொடுத்துவிட்டுத் தேவைகளுக்குக் கேட்பார். வயலில் வேலை செய்தால் மாலை நேரத்தில் மகாலட்சுமி தான் கூலிக்காரர்களுக்குப் பணம் கொடுப்பாள். தனது சகோதரர்கள், பெற்றாராக இருந்தாலும் கதிரேசனுக்குத் தெரியாது எந்த உதவியும் செய்யமாட்டாள். நீ உனது மனைவியிடம் உழைத்த பணத்தைக் கொடுத்திருக்றாயா. அவளில் உனக்குச் சந்தேகம். அவளது பெற்றோர் வந்து சென்றாலும் அவர்கள் ஏதோபொருளைப் பெறத் தான் வந்திருக்கின்றனர் என்று நீ சந்தேகப்பட்டுச் சண்டை பிடிப்பாய். ஒவ்வொருவரும் பிரச்சினைகளைத் தாமே உணர்ந்து செயற்படவேண்டும். அவர்களுக்குத் தினமும் ஒவ்வொன்றைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

அவர்கள் தம்மைத் தாமே வழிநடத்தக் கற்றிருத்தல் வேண்டும். ஒருவன் எவ்வளவு தான் காவல் போட்டாலும் தவறு செய்யும் மனைவி தவறு செய்தே தீருவாள். தவறு செய்யக் கூடாது என்று நினைப்பவள் தன் அறிவின் மூலம் உணர்ந்து நல்லபடி வாழ்வாள்'' என்று மார்க்கண்டுவுக்கு நமசிவாயகம் கூறினார் என்றது குமரன் எலி.

''அறிவுள்ளவனுக்குத் தான் புத்திமதி சொல்லலாம். மார்க்கண்டு யாரையும் மதிப்பதில்லை. யார் சொன்னாலும் கேட்கமாட்டான் என்று கோவிலடியில் பலர் கதைப்பதை நான் கேட்டேன்'' என்றது லட்சுமி எலி.

**58. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**

**புத்தேளிர் வாழும் உலகு.**

''தனது கணவனைத் தெய்வமாக மதித்துப் போற்றும் மனைவியைத் தேவர்கள் கூடப் போற்றுவார்கள் என்று ஒரு புத்தகத்தில் வாசித்துள்ளேன். அது மகாலட்சுமிக்குப் பொருந்தும். எனது மனைவிக்குப் பொருந்துமா..?'' என்று நமசிவாயகத்தைக் கேட்டான் மார்க்கண்டு'' என்றது குமரன் எலி.

''அதற்கு அவர் என்ன சொன்னவர்'' என்று கேட்டது லட்சுமி எலி.

''எல்லாப் பெண்களையும் இறைவன் ஒரே மாதிரியாகத் தான் படைத்தான். மனிதர்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடக்கக் கூடாது. பெண்கள் தமது கணவர்களைத் தெய்வமாக மதிக்க வேண்டும் என்று சொல்பவர்கள் தாமும் ஒழுக்கமாக வாழவேண்டுமென்று ஏன் நினைப்பதில்லை. சமூகநீதி எல்லோருக்கும் ஒன்று தான் என்பதை உன் போன்றவர்கள் உணர வேண்டும். நீ காதலித்துத் திருமணம் செய்தனீ. அப்படியிருக்க ஏன் விநோதினியிடம் சென்றாய். அவள் தேவையேற்படும் போது அதைப் பூர்த்தி செய்பவர்களை வலிந்திழுத்துத் தனது தேவைகளைப் பூர்த்தி செய்பவள். தேவை முடிந்ததும் நாயைக்கலைப்பது போல கலைத்து விடுவாள். அது உனக்குத் தெரியும். தெரிந்தும் சென்றாய். அவளால் ஒதுக்கப்பட்டாய். அதனால் தானே உனது குடும்பத்தில் குழப்பம். உனது மனைவி மீது குற்றம் சொல்லும் நீ திருமணமாகு முன்பும் அதன் பின்பும் தேவதை என்றாய். அவள் கிடைத்தது பெரும் பாக்கியம் என்றாய். இப்போ ஏன் கசக்கிறது. உனது நடத்தையால் தானே. பெண்களைத் தாழ்வாக நினைக்காத ஆண்களின் வாழ்க்கை சொர்க்கமாகத் தான் இப்போதும் இருக்கிறது. அவர்களை மக்கள் போற்றுகிறார்கள். மக்கள் போற்றினால் தேவரும் போற்றுவர் என்று நமசிவாயகம் சொன்னார்'' என்றது குமரன் எலி.

**59. புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**

**ஏறுபோல் பீடு நடை.**

''தனக்கும் தனது கணவனுக்கும், தனது பரம்பரைக்கும் புகழைத்தேடிக் கொடுக்கக் கூடிய மனைவியைப் பெறாதவர்கள் தம்மை இகழும் பகைவர் முன் கம்பீரமாக நடக்க முடியாது'' என்று பெரியவர்கள் கூறக்கேட்டிருக்கிறேன். நான் எந்தத் தவறும் செய்யவில்லை. தவறு செய்தது அவள். ஆனால் என்னைத் தானே மக்கள் குறை கூறுகிறார்கள்'' என்று மார்க்கண்டு நமசிவாயகத்திற்குச் சொல்ல. நமசிவாயகம் சொன்னார்,''மார்க்கண்டு, ஒரு குடும்பத்தின் பெருமையைக் காப்பவள் பெண். அவள் ஒழுக்கமான முறையில் வாழ்ந்தால் தான் மக்கள் அவளையும், அவளது குடும்பத்தினரையும் மதிப்பர். ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால் என்று ஒரு முதுமொழி உண்டு. பெண்ணை ஆக்குவதும் ஆண், அழிப்பதும் ஆண் என்று நான் சொல்கிறேன். ஆண்கள் ஒழுங்காக வாழ்ந்தால் பெண்களும் ஒழுங்காக வாழ்வர். பெண்கள் அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள். அதனால் அன்பாகப் பேசினால் உருகி விடுவார்கள். அது உனக்குத் தெரியும். நீ உன்னில் குறைகளை வைத்துக் கொண்டு அவளைக் குறைகூறித் தப்பிக்க எண்ணுகிறாய். உனது பிடிவாதத்தை விட்டு விட்டு

அவளுடன் ஒற்றுமையாக அவளை மதித்து நட. அவள் உனது குற்றங்களை மறந்து உன்னுடன் அன்பாக வாழ்வாள். நீயும் மக்கள் மத்தியில் தலை நிமிர்ந்து வாழலாம் என்றவர்'' என்றது குமரன் எலி.

''மார்க்கண்டு உழைக்காமல் வாழப்பழகி விட்டது. இனித்திருத்தேலாது'' என்றது லட்சுமி எலி.

**60. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**

**நன்கலம் நன்மக்கட் பேறு.**

''மங்கலம் என்பது மகிழ்ச்சி. மகிழ்ச்சியான இல்வாழ்வானுக்குத் தான் நல்ல பிள்ளைகள் பிறக்கும் என்பது உனது வாழ்க்கையில் நடக்கவில்லையா..?'' நீயும் உனது மனைவியும் திருமணமான புதிதில் சுமார் ஐந்து வருடங்கள் ஊரே மெச்சும் படி வாழ்ந்தீர்கள். அப்போது பிறந்த இரண்டு பிள்ளைகளும் ஒழுக்கத்திலும் கல்வியிலும் இப்போதும் பிறர் பாராட்டும் படி நடந்து கொள்கிறார்கள். விநோதினியின் உறவுக்குப் பின் உனது வாழ்க்கை தடம் புரண்டு விட்டது. அதன் பின் பிறந்த இரு பிள்ளைகளும் ஒழுக்கமில்லாதவர்களாக வாழ்கிறார்கள். அவர்கள் இருவரும் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. ஒழுக்கமாக வாழ்பவனுக்குத் துன்பங்கள் வந்தாலும் மகிழ்வுடன் அதை ஏற்பான். தனது விதியென்று நினைப்பானே தவிர ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபடமாட்டான். அன்பான குடும்பம் துன்பம் வந்த போதும் இன்பமாக வாழும். அப்போது பிறக்கும் பிள்ளைகள் வல்லவர்களாக, ஒழுக்க சீலர்களாக வாழ்வர். நல்ல ஒரு குடும்பத்தன் ஒழுக்கமாக வாழ்ந்து நற்மக்களைப் பெறுவதே வாழ்வின் குறிக்கோளாகும். ஊரில் வாழும் நல்லவர்களைப் பார். அவர்களின் பிள்ளைகள் நல்லவர்களாக வாழ்கிறார்கள். தீயவர்களின் பிள்ளைகள் பெற்றோரைப் பார்த்துத் தீயதையே செய்யும். அது பெற்றோருக்கும் பிடிக்கும் என்று நமசிவாயகம் மார்க்கண்டுக்குச் சொன்னவர். மார்க்கண்டு அதைக் கேட்டுதோ தெரியவில்லை'' என்றது குமரன் எலி.

''நமசிவாயகம் சொல்வது உண்மை தான். நல்லவர்களின் பிள்ளைகள் நல்லவர்களாகவே வாழ்கின்றனர்'' என்றது லட்சுமி எலி.

## மக்கட்பேறு - 07

**61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த**

**மக்கட்பே றல்ல பிற**

''கதிரேசன் இன்று காலை கோவிலுக்கு வந்த போது சிவகுரு வந்து அவரிடம் பணம் கேட்டான். அவர் கொடுத்து விட்டார். அதைக்கண்ட நமசிவாயகம் கதிரேசனிற்கு அருகில் வந்து சொன்னார்,''கதிரேசு பாத்திரம் அறிந்து தான் பிச்சையிடல் வேண்டும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். சிவகுரு குடிகாரன். உழைப்பதில்லை. திருடுவான். அப்படியானவனுக்கு நீ பணம் கொடுக்கலாமா..? என்று கேட்டார்'' என்றது குமரன் எலி.

''கதிரேசன் இரப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாத உத்தமன். இருந்தாலும் சிவகுருவுக்குப் பணம் கொடுத்திருக்கக் கூடாது'' என்றது லட்சுமி எலி.

''சிவகுருவின் மகளுக்குக் கடுமையான சுகவீனம். அவன் பொய் சொல்கிறானோ இல்லையோ நோயாளிக்கு உதவுதல் வேண்டும் என்பதற்காகக் கொடுத்தேன். என்று சொன்னார் கதிரேசன்'' என்றது லட்சுமி எலி.

''உனக்கும் பிள்ளைகள் இருக்கு. உழைப்பதையெல்லாம் தானம் பண்ணினால் பிற்காலத்திற்கு என்ன செய்வாய் என்று கேட்டார் நமசிவாயகம். அதற்குக் கதிரேசன் சொன்னார்,''நமசிவாயகம், ஒருவன் பெறவேண்டிய செல்வங்களுள் அறிய வேண்டியவற்றை

அறியக்கூடிய மக்களைப் பெறுவதே மிக உயர்ந்த செல்வம் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். எனது ஐந்து பிள்ளைகளும் சூரர்கள். மூத்தவன் வைத்தியன், இரண்டாவது மகள் பொறியியலாளர், மூன்றாவது மகன் மருத்துவ பீடத்தில் படிக்கிறான். நான்காவது மகன் க.பொ.த உயர்தரத்தில் மூன்று ஏ எடுத்துள்ளான். அந்தச் செல்வம் எனக்குப் போதும்'' என்றவர். அதற்கு நமசிவாயகம் எதுவும் பேசவில்லை என்றது குமரன் எலி.

### 62. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

### பண்புடை மக்கட் பெறின்

''உண்மை தான் கதிரேசு. உன்னுடைய ஐந்தாவது மகள் மற்றப்பிள்ளைகளை விடக் கெட்டிக்காரி. உனது பண்பான குடும்ப வாழ்விற்குக் கிடைத்த பரிசு தான் உனது பிள்ளைகள். அவர்கள் கல்வியில் மட்டும் கெட்டிக்காரரல்ல. உன்னைப் போலப் பண்பிலும் சிறந்தவர்கள். மற்றவர்களுக்கு உதவுவதிலும் முன் நிற்பவர்கள். வைத்தியசாலையில் மருந்து பெறச்செல்லும் அனைத்து நோயாளிகளும் உனது மகனிடமே மருந்து பெற விரும்புகிறார்களாம். தகுதி தராதரம் பாராது உனது மகன் சேவையாற்றுவதாக ஊரவர்கள் பேசுவதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கு. ஒரு ஆன்மா ஏழு பிறவிகள் எடுக்குமாம். அது எடுக்கும் மனிதப்பிறவியில் வாழும் வாழ்க்கையைக் கொண்டே அதன் மிகுதிப் பிறப்புக்கள் தீர்மானிக்கப்படுமாம். நன்மக்களைப் பெறும் உன்னைப் போன்ற பெற்றோர் தாம் எடுக்கும் பிறவிகளில் எந்தத் துன்பமும் ஏற்படாது மகிழ்வுடன் வாழ்வாராம். நீ புண்ணியவான்'' என்று நமசிவாயகம் கதிரேசனுக்குச் சொல்லக் கதிரேசன் சிரித்தார்'' என்றது குமரன் எலி.

''அவர் அருமையான மனிதன். மனிதருக்கு மட்டுமல்ல மற்றைய உயிர்களுக்கும் அவர் துன்பம் செய்யாதவர். அந்த மனிதன் சகல செல்வங்களுடனும் நோய் நொடியின்றி நீடூழி வாழ வேண்டும்'' என்று வாழ்த்தியது லட்சுமி எலி.

### 63. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்

### தம்தம் வினையான் வரும்.

''நமசிவாயகம், நான் தேடிய பொருளென்றால் அது என்னுடைய பிள்ளைகள் தான். நல்ல பிள்ளைகளைப் பெற்றவர்கள் தான் பூவுலகில் இன்பமாக வாழ்வார்கள். இன்று நான் தேடும் காசு, பணம், தோட்டம் துரவெல்லாம் எனது பொருளல்ல. கால மாற்றத்தால் அது காலகதியில் பிறரின் பொருளாகிவிடும். ஆனால் நான் தானம் செய்த பொருட்களும், பிள்ளைகளுமே கை மாறாது இருந்து எனக்கு என்றும் உறுதுணையாக இருக்கும். சிவகுரு கெட்டவன் தான். இருப்பினும் தனது பொருளான பிள்ளைக்கு நோய் என்றவுடன் அவன் துடித்த துடிப்பைக் கண்டு தான் நான் இரங்கினேன். எனக்குச் சிறிதளவு கடன் உள்ளது. எனது தோட்டத்தை விற்றுக் கடனை அடைத்து விட்டு ஓய்வாக இருக்குமாறு எனது பிள்ளைகள் வற்புறுத்துகின்றனர். தோட்டம் இருந்தால் நான் அதில் கஷ்டப்பட்டு உழைப்பேனாம். நான் கஷ்டப்பட்டது போதுமாம். ஓய்வெடுக்கும் படிவற்புறுத்துகிறார்கள். அதற்காகத்தான் தோட்டத்தை விற்குமாறு கூறுகின்றனர். அதை விற்றால் பின் அது எனது பொருளாகுமா..?நான் பெற்ற பிள்ளைகள் இறந்தாலும் அது என் பொருள் தானே. இல்லை என்று சொல்ல முடியுமா? என்று நமசிவாயகத்தைக் கேட்டார் கதிரேசன்'' என்றது குமரன் எலி.

''உண்மை தான். கதிரேசன் சொன்னால் அதில் அர்த்தம் இருக்கும்'' என்றது லட்சுமி எலி.

### 64. அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்

**சிறுகை அளாவிய கூழ்**

''என் மக்கள் என் சொத்து, என் பொருள் என்று எனது குடும்பத்திலுள்ள எனது பிள்ளைகளையே நான் உரிமை கொண்டாட முடியும். பெற்ற பிள்ளைகளை நினைப்பது இன்பம், அவர்களது செயல்களை நினைப்பது பேரின்பம். அவர்களோடு உரையாடுவது அதனிலும் இன்பம். எனது மூத்த மகன் ஆரூரனுக்கு மூன்று வயதாக இருக்கும் போது அவனுக்கு நான் உணவு ஊட்டுவேன். அவனுக்காக மகாலட்சுமி சமைத்த சுவையுள்ள சத்தான உணவை அவனுக்கு ஊட்டும் போது அவன் இரண்டு முறை உண்ட பின் எனக்கு ஊட்டுவான். அவனது பிஞ்சுக் கைகளால் ஊட்டப்பட்ட அந்த உணவு தேனாக இனிக்கும். அவன் மண்ணை அள்ளித் தீத்தினாலும் அமிழ்தென்று கூறிப் பொய்யாகச் சுவைப்பேன். இப்போது வயது வந்து திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்கு அவன் தகப்பனான போதும் வீட்டுக்கு வந்தானேயானால் தாய் கொடுக்கும் உணவை எடுத்து எனக்கு ஊட்டிய பின்பு தான் அவன் சாப்பிடுவான். இது அவனது மனைவிக்கு வேடிக்கையாக இருக்கும். ஆனால் பிள்ளைகள் அந்த உணவை எடுத்துத் தகப்பனுக்கும் எனக்கும் ஊட்டும். அப்படி ஊட்டப்படும் அந்த உணவின் சுவையை எப்படி சொல்வது'' என்று கதிரேசன் மெய்மறந்து கூறியதை நான் கேட்டேன். எனது மெய் சிலிர்த்தது'' என்றது குமரன் எலி.

''மனிதரில் மிகமிக நல்லவர்களும் இருக்கிறார்கள். மிகக் கொடிய தீயவர்களும் இருக்கிறார்கள். பிள்ளைகளைப் பாசத்துடன் வளர்த்தால் அவர்கள் தாம் வைத்துள்ள பாசத்தை வெளிப்படுத்துவார்கள்'' என்றது லட்சுமி எலி.

67. **தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**

**முந்தி இருப்பச் செயல்**

''இன்றைக்குக் கதிரேசனின் பிறந்த நாளாம். ஊரே கோவிலில் கூடி விட்டது. எல்லோரும் கதிரேசன் இன்னும் நூறாண்டுகள் உடல் நலத்துடன் வாழவேண்டும் என்று பிராத்தித்தனர். நமசிவாயகம் சொன்னார்,''ஒரு தந்தை தன் பிள்ளைகளை அன்போடு வளர்த்தால் அவர்கள் பண்போடு வளர்ந்து மக்களுக்கு சேவைகள் செய்வார்கள். அத்துடன் கற்றவர்களின் மத்தியில் எல்லோருக்கும் முன்னவனாக இருக்கத்தக்க வகையில் தனது மகனை கல்வியில் மேம்பட்டவனாக்குவதே தந்தை தன் மகனுக்குச் செய்யும் சேவையாகும். கதிரேசனின் பிள்ளைகளெல்லோரும் கல்வியில் விற்பன்னர்கள். மூத்த மகன் ஆரூரன் சிறந்த வைத்தியன். எத்தனையோ ஆயிரம் வைத்தியர்களிடையே ஆரூரன் சிறந்த வைத்தியனாகக் கடமையாற்றியமையால் மேற்படிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளான். அவன் லண்டன் மாநகரத்திற்குச் சென்று வைத்தியத்துறையில் நிபுணத்துவம் பெறவுள்ளான். அந்தளவில் கதிரேசன் தனது கடமையைத் திறம்படச் செய்துள்ளார். கற்றவர் அவையில் ஆரூரன் முதல்வனாக விளங்குகிறான். அது கதிரேசனுக்குப் பெருமை. எமது கிராமத்திற்கும் நாட்டிற்கும் பெருமை'' என்றார். மக்கள் குதூகலித்து கைகொட்டி மகிழ்ந்தனர். நாம் மடத்தில் குடியேறியமையால் இவற்றையெல்லாம் பார்க்க முடிகிறது'' என்றது குமரன் எலி.

''உண்மை தான் வயலில் இருந்தால் இவற்றைப் பார்க்க முடியுமா?'' என்றது லட்சுமி எலி.

**68. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**

**மன்னுயிர்க் கெல்லாம் இனிது.**

''அதற்குக் கதிரேசன் சொன்னார், ''நான் பெரிதாகப் படிக்கவில்லை. அப்போது எமது கிராமத்தில் பாடசாலை இல்லை. அத்துடன் எனது பெற்றோர் மிகவும் வறியவர்கள். அதனால் தூரஇடத்திற்குச் சென்று கல்வி கற்க முடியவில்லை. எமது மக்கள் கற்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அமரர் கந்தர் வைத்திலிங்கம் ஒரு பாடசாலையை நிறுவிக் கிராம மக்களின் வீடுகளுக்குச் சென்று பிள்ளைகளை அழைத்து வந்து கற்பித்தார். அவருக்கு உதவியாக

நமசிவாயகம் அவர்கள் செயற்பட்டார். அதனால் தான் எனது பிள்ளைகளும் கிராமத்தவரும் கல்வி கற்க முடிந்தது. ஒவ்வொரு தந்தையும் தன்னை விடத் தம்முடைய பிள்ளைகள் சிறந்த கல்வியாளர்களாக வர உதவ வேண்டும். கல்வி தான் மனிதருக்குச் சிறப்பையும் முன்னேற்றத்தையும் தரும். நான் எனது உழைப்பில் ஒரு சிறு பகுதியைத் தானம் செய்கிறேன். எனது பிள்ளைகள் நான் செய்ததிலும் பார்க்கக் கூடிய சேவை செய்கிறார்கள். இதனால் இக்கிராம மக்களும் ஏனையோரும் பயன் பெறுகின்றனர். இது நான் செய்த புண்ணியமாகும்'' என்று கண்கலங்கினார். அப்போது கதிரேசனும் பிள்ளைகளும் மகாலட:சுமியும் அங்கிருந்தனர். மகாலட்சுமி மிக்க மகிழ்வுடன் காணப்பட்டாள்'' என்றது குமரன் எலி.

''பின்னை இருக்காதா. அவளுடைய கணவன் மிகவும் சிறந்தவர். பிள்ளைகள் கல்வியில் மேம்பட்டவர்கள். அதனால் தாய் மகிழ்வது இயல்பு தானே'' என்றது லட்சுமி எலி.

### 69. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

### சான்றோன் எனக்கேட்ட தாய்.

''மகாலட்சுமி பக்கத்திலிருந்த ஒரு பெண்ணுக்குக் கூறியதைக் கேட்கக் கவலையாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது'' என்றது குமரன் எலி.

''அப்படி என்ன சொன்னவா..?'' ஆவலோடு கேட்டது லட்சுமி எலி.

''ஆரூரன் கருவில் தங்கிய நாள் முதல் மகாலட்சுமிக்கு ஒரே வருத்தமாம். கரு தங்கிய நாளில் இருந்து பிறக்கும் வரை கணக்கில் அடங்காதாம். பிறந்த பின்பும் ஆரூரனுக்கு அடிக்கடி நோய் ஏற்பட்டதாம். வாழ்க்கையே வெறுக்கும் அளவிற்குத் துன்பம் வந்தாலும் தான் தாய் என்ற தகுதியைப் பெற்றதற்காக மிகவும் சந்தோசப்பட்டாளாம். இப்போ ஆரூரன் அவன் முதன்மையானவன், பேரறிஞ்ஞன் என்று கேள்விப்படும் போது உலகையே வென்ற மகிழ்வு தனது மனதில் ஏற்பட்டுள்ளதாம். தான் பாக்கியசாலி. ஓர் உத்தமனை, ஒரு கல்வியாளனைப் பெற்ற தாய் என்று பெருமைப்படுகிறாவாம்'' என்று கூறும் போது நானும் மகிழ்ந்தேன்'' என்றது குமரன் எலி.

''கேட்கும் போது எனக்கே மகிழ்ச்சியாக இருக்கு. அப்போ பெற்றவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்'' என்றது லட்சுமி எலி.

''கதிரேசன் கொடுத்து வைத்தவர்'' என்றது குமரன் எலி.

### 70. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை

### என்நோற்றான் கொல்எனும் சொல்

''கதிரேசன் தன் மக்களுக்குச் சொய்ய வேண்டிய சேவைகளைச் செய்து மக்களில் மேம்பட்டவர்களாக வாழவழி வகுத்தார். அத்துடன் ஊரில் உள்ள வறிய பிள்ளைகள் தொடர்ந்து படிக்கவும், மேற்படிப்பை வறுமை காரணமாகத் தொடர முடியாது கைவிட்டவர்களுக்குக் கல்வியைத் தொடரவும் உதவியவர். பல நல்ல கருமங்களை ஊருக்காகச் செய்தவர். கோவில் மடத்தைச் சிறந்த முறையில் பராமரிப்பவர். கதிரேசனைப் பெற அவரது பெற்றோர் என்ன தவம் செய்தனரோ என ஊர் மக்கள் வியப்புடன் பேசினார்கள். இன்று தலை சிறந்த கல்வியாளர்களைப் பெற்ற கதிரேசன் என்ன தவம் செய்து அவர்களைப் பெற்றாரோ என வியக்கின்றனர். இதற்குக் கதிரேசன் தான் பதில் சொல்ல வேண்டும்'' என்று நமசிவாயகம் கூறினார் என்று குமரன் எலி கூறியது.

''கதிரேசன் எதுவும் சொல்லவில்லையா?'' என்று கேட்டது லட்சுமி எலி.

“கூறினவர். அவர் கூறியதைக் கேட்கச் சிரிப்பாக இருந்தது; “எனது தகப்பனார் என் மீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருந்தார். அதனால் அவரை தந்தையாக, தாயாக, நண்பனாக நான் கண்டேன். எனது பிள்ளைகள் மீது எனது தந்தையைப் போல நானும் அன்பு வைத்தேன். அதனால் நான் விரும்பிய படி அவர்கள் நடந்தார்கள். இதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது என்றார்” என்றது குமரன் எலி.

“அன்பு எல்லாவற்றையும் செய்ய வைக்கும்” என்று நமசிவாயகம் அடிக்கடி கூறுவார். அது உண்மை போலத் தெரிகிறது” என்றது லட்சுமி எலி.

## அன்புடைமை – 8

71. **அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**

**புன்கணீர் பூசல் தரும்.**

“முருகையா கதிரேசனின் உயிர் நண்பர். தரம் ஒன்றில் இருந்து இருவரும் தரம் ஐந்து வரை ஒரே பாடசாலையில் கற்றவர்கள். தரம் ஐந்தில் கல்வி கற்கும் போது இருவரும் சின்னத்தம்பியின் மாட்டுப்பண்ணையில் வேலை செய்தனர். இருநூற்றுக்கும் மேற்பட்ட மாடுகளை அவிழ்த்துச் சென்று புற்தரையில் மேயவிட்டு விட்டு அதைக்காவல் காப்பார்கள். புற்தாரையின் அருகே சிறிய பற்றைக்காடு ஒன்றுள்ளது. அதில் ஓநாய்களும் நரிகளும் வசித்து வந்தன. அவை அடிக்கடி மாடுகள் நிற்கும் பக்கம் வரும். இருவருமாகச் சேர்ந்து அவற்றைக் கலைப்பார்கள். இருவரும் நல்ல நண்பர்கள். எதையும் விட்டுக் கொடுப்பார்கள். அப்படி வாழும் போது கூலி வேலை செய்வதற்காக மலேசியாவுக்குப் பலர் சென்றனர். அப்படிச் சென்றவர்களுள் முருகையாவும் ஒருவர்.

முருகையா கதிரேசனைத் தானனுடன் வரும்படிவற்புறுத்திய போதும் கதிரேசனின் தந்தை அவரை விடவில்லை. முருகையா மலேசியாவிற்கச் சென்றாலும் தனது அன்பை வெளிப்படுத்தி அடிக்கடி கடிதம் எழுதுவார். அதன் பின் முருகையா மலேசியாவில் வாழும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அங்கையே தங்கி விட்டார். மாதம் ஒரு முறை எழுதிய கடிதம் பின் வருடம் ஒருமுறையானது. இருப்பினும் இருவரும் ஒருவரை ஒருவர் மறக்காது வாழ்ந்து வந்தனர். இப்போ முப்பது வருடங்களுக்குப் பிறகு முருகையா ஊருக்கு வந்திருந்தார். வந்ததும் அவர் கதிரேசனைத் தேடி கோவிலுக்கு வந்தார். கதிரேசனைக் கண்ட முருகையா,“கதிரேசா” என்று அழைத்தவாறு அவரைக் கட்டியணைத்தார். வெகுநேரம் வரை இருவரும் பேசவில்லை. அவர்களின் கண்களால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது” என்றது குமரன் எலி.

“ஏன் அழுதவை?” என்று கேட்டது லட்சுமி எலி.

“அன்பு மயப்பட்ட நண்பர்கள் பிரிந்து வாழ்ந்து விட்டுப் பின் சந்தித்தால் பேசமுடியாது அவதிப்படுவார்கள். இருவரினது நட்பும் மிகமிக உயர்ந்தது” என்று நமசிவாயகம் சொல்லிக் கொண்டிருந்தார்” என்றது குமரன் எலி.

**72. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**

**என்பும் உரியர் பிறர்க்கு**

“சின்னத்தம்பியின் மாடுகளை மேய்க்கும் போது கூட்டமாக வந்த ஓநாய்களை விரட்ட இருவரும் முயற்சித்தனர். அதனால் கோபம் கொண்ட ஓநாய்கள் முருகையாவை மோசமாகத் தாக்கிவிட்டன. ஊர் மக்கள் திரண்டு வந்து ஓநாய்களைக் கலைக்காவிட்டால் இருவரும் இறந்திருப்பார்கள். பின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முருகையாவின் அருகே

இருந்து கதிரேசன் அவருக்கு உதவிகள் செய்தார். அவருக்கு இரத்தமும் கொடுத்தார். இப்போதும் கதிரேசன் யாருக்கும் எந்த உதவியும் செய்யத் தயங்கமாட்டார். அன்புள்ளம் கொண்ட அவர் எல்லோருக்கும் உதவுவார். ஆனால் சின்னத்தம்பி கொடியவன். அன்பில்லாதவன். காயப்பட்ட முருகையாவை வைத்தியசாலைக்குச் சென்று பார்க்கவில்லை. தனக்கும் அவனுக்கும் உள்ள உறவு முதலாளி, தொழிலாளி மட்டுமே என்று கூறிவிட்டான். ஆறுமாதங்களின் பின் கொடிய நோயான மலேரியாக் காய்ச்சல் அவனுக்கு வந்து விட்டது. மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த அவனைப் பராமரிக்க யாரும் இல்லை. அக்கொடிய நோய் தமக்கும் தொத்தி விடுமென்று பலரும் பயந்தனர். ஆனால் முருகையா துணிவுடன் சென்று அவரைப் பராமரித்தான். அன்புள்ளவர்கள் எல்லாவகையிலும் பிறர்க்கு உதவுவார்கள். அன்பில்லாதவர்கள் தமக்கு மட்டுமே உரியவர்களாகிறார்கள்'' என்று நமசிவாயகம் சொல்லக் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''இப்போதும் சின்னத்தம்பி கெட்டவன் என்று தானே மக்கள் பேசிக்கொள்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**73. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**

**என்போ டியைந்த தொடர்பு**

''உடல் அழிவடைவது. உயிர் அழியாது. இந்த உயிர் அன்புள்ளதாக, பண்புள்ளதாக இருந்தால் தான் உடலுக்கு நன்மை உண்டாகும். உயிர் மகில்வடைந்தால் உடல் பூரிக்கும். அன்பு தான் வாழ்க்கை. அன்பு தான் கடவுள். அன்பு தான் எல்லாம். அதனால் கதிரேசு எனது மகளை உனது மகனுக்குத் திருமணம் செய்து வைப்பாயா..?'' அன்புடன் உள்ளப் பூரிப்புடன் கேட்டார் முருகையா..? என்றது குமரன் எலி.

''பெண்ணைப் பார்க்காது, சீதனம் வாங்காது யாராவது திருமணம் செய்வார்களா?'' என்று கேட்டது லட்சுமி எலி.

''இதென்ன கேள்வி. உனக்காக நான் என் உயிரையே கொடுப்பேன். அப்படியிருக்க எனது மகனைக் கொடுக்கமாட்டேனா?'' என்று கேட்டார் கதிரேசன்'' என்றது குமரன் எலி.

''கதிரேசு எவ்வளவு தான் நீ அன்பாக வளர்த்தாலும் திருமணம் என்றால் சம்பந்தப்பட்ட பெண்ணையும், ஆணையும் கேட்க வேண்டும். வாழ்க்கை என்பது அயிரங்காலத்துப் பயிர்..'' என்று நமசிவாயகம் கூறும்போது கதிரேசன் குறுக்கிட்டுச் சொன்னார், ''உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பென்பது அன்போடு கூடி வாழும் வாழ்க்கை என்பார்கள். எனது மகன் எனது உயிரோடு கலந்துள்ளான். அவனது செயற்பாடுகள் எதுவும் இல்லை. அதனால் அவன் சம்மதிப்பான். உங்களுக்குச் சந்தேகமானால் கேட்டுப் பாருங்கள். நமசிவாயகம்'' என்றார் கதிரேசன். கதிரேசனின் கதையைக் கேட்டு கோவிலில் கூடியிருந்த அனைவரும் திகைத்து விட்டனர்'' என்றது குமரன் எலி.

''என்னதான் தகப்பன் பிள்ளையென்றாலும் திருமண விடயத்தில் சம்பந்தப்பட்டவனைக் கேட்க வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**74. அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**

**நண்பென்னும் நாடாச் சிறப்பு.**

''உடனே நமசிவாயகம் தனது கைத்தொலைபேசியை எடுத்து கதிரேசனது இரண்டாவது மகனான குமாரனுடன் தொடர்பு கொண்டார், ''குரு, உனது தந்தை தனது நண்பனான முருகையாவின் மகளை உனக்குத் திருமணம் செய்ய விரும்புகிறார். உனக்கு விருப்பமா..?''

‘‘அப்பா தான் எனது உலகம். அப்பா செய்வதெல்லாம் எனது நன்மைக்காகவே இருக்கும்’’ என்று குருபரன் சொன்னானாம். இப்படி ஒரு பிள்ளையா?’’ என்று சனம் வியந்தது’’ என்றது குமரன் எலி.

‘‘நமசிவாயகம், அன்பு மற்றவர்களிடம் விருப்பமுடையவராக வாழும் தன்மையை உண்டாக்கும். அது எல்லார் இடத்திலும் நட்பை உருவாக்கும் சிறப்பையும் தரும். நான் முருகையா மீது கொண்டுள்ள அன்பின் தன்மையைக் குருபரன் அறிவான். அது போல நான் தன்னில் கொண்டுள்ள அன்பையும் அவன் அறிவான். அன்பின் பொருளை அறிந்தவன் அதன் சிறப்பையும் உணர்ந்தவன். அன்புள்ளவன் எப்போதும் நன்மையே செய்வான் என்று புரிந்து கொள்வான். மாசற்ற அன்பு எல்லா நலன்களையும் தரும் என்று எனது மகனுக்குத் தெரியும்’’ என்று கதிரேசன் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

‘‘புண்ணியம் செய்த பெற்றார் கொடுத்து வைத்த பிள்ளைகள், நட்பை உணர்ந்த நண்பர்கள் என்றும் மகிழ்வுடன் வாழ்வார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து**

**இன்புற்றார் எய்தும் சிறப்பு**

‘‘நீ பாக்கியசாலி கதிரேசன். உனது பிள்ளைகள் உன்மீது பேரன்பு வைத்திருக்கின்றனர். ஊரவர்களும் உன் மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கின்றனர்’’ என்று நமசிவாயகம் கூறும் போது கதிரேசன் குறுக்கிட்டுச் சொன்னார், ‘‘நமசிவாயகம் அனைவரிடமும் தகுதி தராதரம் பாராது நாம் அன்பு வைத்தால் அவர்களும் அன்பு வைப்பார்கள். கொடிய பிராணிகளான சிங்கம் புலி, கரடி, பாம்பு என்பவற்றில் கூட அன்பு வைத்தால் அவையும் வைக்கும். ஆறாம் அறிவில்லாத உயிர்களுக்கும் அன்பின் மகத்துவம் தெரியும். நட்பின் தன்மையும் தெரியும். ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு இது தெரியாதா..? உலகத்தில் கவலைகள் எதுவும் இன்றி இன்பமாக வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் சகல உயிர்கள் மீதும் அன்பு வைத்தல் வேண்டும். அன்பு தான் உலகை இன்பப்படுத்தும் காரணி. இதை உணராதவர்கள் தான் பல்வேறு வகையிலும் துன்பப்படுகிறார்கள். நான் எனது மகனின் மீது வைத்துள்ள அன்பு தான் அவனை எனது விருப்பத்திற்கு இணங்க வைத்தது. முருகையாவைக் குருபரனுக்குத் தெரியாது. ஆனால் அவரும் நானும் ஒருவர் மீது ஒருவர் வைத்த அன்பின் அளவு தெரியும். அதனால் தான் பெண் எப்படியானவள் என்று அறியாத எனது மகன் சம்மதித்தான். அவன் என் மீது வைத்த அன்பின் தன்மையால் நான் சம்மதித்தேன்’’ என்று கதிரேசன் கூறும் போது எனது உடல் சிலிர்த்தது’’ என்றது குமரன் எலி.

‘‘அன்பால் வசப்பட்ட குடும்பம்’’ என்றது லட்சுமி எலி.

**76. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**

**மறத்திற்கும் அ∴தே துணை.**

‘‘இன்று மதியம் சாப்பிடும் போது நமசிவாயகத்திற்கு செல்லத்துரை அடித்துவிட்டான். அவன் அடிக்கும் போது மது அருந்தியிருந்தான். அதைக் கேள்விப்பட்ட கதிரேசனுக்கு வந்த கோபத்தைப் பார்த்து ஊரே திகைத்து விட்டது. ஒரு கம்பை எடுத்து வந்து மார்க்கண்டுவுக்கு அடிஅடியென்று அடித்து விட்டார். ஊரார் தடுக்காவிட்டால் கொலை கூடச் செய்திருப்பார்’’ என்றது குமரன் எலி.

‘‘செல்லத்துரை தானே நமசிவாயகத்திற்கு அடித்தது. ஏன் கதிரேசன் மார்க்கண்டுக்கு அடித்தவர்’’ என்று கேட்டது லட்சுமி எலி.

‘‘மார்க்கண்டுவுக்குச் செல்லத்துரை மதுபானவகைகளை வாங்கிக் கொடுப்பவன் என்று கதிரேசன் சந்தேகப்பட்டவர். மார்க்கண்டு தான் பற்றுக்களைத் துறந்தவன் என்று சொல்லிக் கொண்டு பல கூடாத செயல்களைச் செய்து வந்ததை கதிரேசன் அறிந்து விட்டார். அன்று மார்க்கண்டு செல்லத்துரைக்கு மதுபானத்தை வாங்கிக் கொடுத்து நமசிவாயகத்தை அடிக்கும் படி ஏவிவிட்டிருக்கிறார். இதைச் செல்லத்துரையோடு குடிக்கும் பரமசிவம் வந்து கதிரேசனுக்குச் சொல்லிவிட்டான். அதனால் தான் கோபம் தலைக்கேறிக் கதிரேசன் அடித்தவர். அதை அறிந்த நமசிவாயகம் சொன்னார், ‘‘கதிரேசன் அன்புமயமானவர். அன்பால் தான் தவறு செய்வோரைத் திருத்துபவர். ஆனால் தன் மீது அன்பு வைத்தவனுக்கு அநியாயம் நடைபெறுவதைக் கண்டு கொத்தித்தெழுந்து கதிரேசன் தாக்குவார் என்று நானும் நம்பவில்லை. ஊரவர்களும் நானும் அன்பானது அறத்திற்கு மட்டும் தான் உரியது. என்று இது வரை நினைத்திருந்தோம். அது தவறு அநியாயத்தை அழிக்கவும் அன்பு உதவும் என்பதை இன்று அறிந்து கொண்டேன்’’ என்றவர் என்றது குமரன் எலி.

‘‘யாரும் எதிர்பாராத அதிசயம் தான் நடந்திருக்கு’’ என்றது லட்சுமி எலி.

**77. என்பி லதனை வெயில்போலக் காயுமே**

**அன்பி லதனை அறம்.**

‘‘எலும்பில்லாத உயிர்களான புழுக்கள் வெயிலில் ஊர்ந்து சென்றால் வெயில் அவ்வுயிர்களை வருத்தும். அது போலப் பிறஉயிர்கள் மீது அன்பில்லாதவர்கள் அன்புள்ளம் கொண்டவர்களை வருத்தினால் அவர்களை அறக்கடவுள் வருத்துவார் என்று நினைத்து நான் பேசாமல் இருந்தேன். குடிகாரனுடன் பிரச்சினைப்பட்டால் அவன் குடித்திருக்கும் போதுதெல்லாம் வாயில் வந்தபடி ஏசுவான். என்ற பயத்தால் யாரும் செல்லத்துரையை எதுவும் கேட்பதில்லை. அத்துடன் மார்க்கண்டு ஏவித்தான் செல்லத்துரை அடித்தது என்று யாருக்கும் தெரியாது. நான் பிழை விடமாட்டேன் என்று ஊரவர்களுக்குத் தெரியும். அத்துடன் நான் அவன் குடித்து விட்டு மடத்துள் உணவு உண்ண வரும் போது குடித்து விட்டு மடத்துள் வராதே என்று ஏசுவேன். அந்தக் கோபத்தில தான் அவன் அடித்திருப்பான் என்று ஊரவர் நம்பினர். நான் எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்படைப்பேனே தவிரத் தண்டனை கொடுக்கமாட்டேன். அறக்கடவுள் கதிரேசனது உருவில் வந்து தண்டனை கொடுத்து விட்டார்’’ என்று நமசிவாயகம் சொல்லும் போது அங்கிருந்த அனைவரும் அதை ஆமோதித்தனர்’’ என்றது குமரன் எலி.

‘‘நமசிவாயகம் நல்லவர். அவரது நம்பிக்கை வீண்போகவில்லை’’ என்றது லட்சுமி எலி.

**78. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**

**வற்றல் மரந்தளிர்த் தற்று.**

‘‘அன்பு தான் வாழ்வு. அன்பு தான் உயிர் மூச்சு. அன்பு கொண்டவன் மீது யாரும் குறை சொன்னாலே கோபம் ஏற்படும் என்று நினைத்து வாழ்பவன் நான். நமசிவாயகம் பற்றுக்கள் அனைத்தையும் துறந்து தவவாழ்வு வாழ்பவர். அவர் தனது காணிகளை விற்று உதவியதால் தான் இன்று இவ்வூர் மக்கள் நல்ல தரமான கல்வியைப் பெறுகின்றனர். அவர் ஒவ்வொரு உயிர் மீதும் அளவில்லாத அன்பு கொண்டுள்ளார். அதனால் தான் மடத்தின் அருகே உள்ள தொட்டியில் மிகவும் சிரமப்பட்டு நீர் நிரப்பி வைக்கிறார். அதனால் கால்நடைகள் மகிழ்வுடன் நீர் அருந்துகின்றன. அப்படி அன்புள்ளம் கொண்ட ஒருவரைக் காரணமின்றி மிருகத்தனமாகக் குடும்பத்தின் மீது பற்றில்லாத ஒருவன் தாக்கினால் எப்படி இருக்கும். குடும்பத்தில் பற்றில்லாதவன் பாலை வனத்தில் நிற்கும் பட்ட மரத்திற்கு ஒப்பானவன். அவனில் அன்பு என்ற ஈரம் இருக்க மாட்டாது. அப்படி இருந்தால் அது பாலை வனத்தில் நிற்கும் பட்ட மரம் தளிர்த்தது போலாகும். பட்ட மரம் தளிர்க்குமா..? இல்லையே. மனிதர்கள் குற்றமிழைப்பது இயல்பு. குற்றமிழைக்காத ஒருவனைத் தாக்குவது பெரும் துன்பங்கள் பலவற்றைத் தரும் என்பதை இங்கு வாழும் ஒவ்வொரு வரும் உணரல் வேண்டும்.

இனிமேல் மார்க்கண்டுவிற்கு மடத்தில் உணவு வழங்கப்பட மாட்டது'' என்று கதிரேசன் கூறிய போது அங்குள்ள மக்களைப் போல நானும் அதிர்ந்து போனேன்'' என்றது குமரன் எலி.

''சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். அது இதுதான்'' என்றது லட்சுமி எலி.

**79. புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை**

**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு**

''அப்போது நமசிவாயகம் கதிரேசனின் அருகே வந்து சொன்னார்,''கதிரேசு, மார்க்கண்டு அறியாமையால் தவறாக நடந்து விட்டது. அதை நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. கோவில் மடத்தில் இரந்துண்ண வருபவர்களை எக் காரணம் கொண்டும் துரத்தக் கூடாது. அத்துடன் உணவு முடிந்த பின் யாராவது வந்தாலும் இல்லையென்று கூறாது சமைத்துக் கொடுத்தல் வேண்டும் என்று கூறும் நீங்களா இப்படிச் சொன்னது'' என்று வருத்தப்பட்டார் நமசிவாயகம். அதற்குக் கதிரேசன் சொன்னார், ''நான் பற்றுக்களைத் துறந்து துறவியாகி விட்டேன் என்று கூறும் மார்க்கண்டுவின் உள்ளத்தில் அன்பு இல்லை. ஆராயும் தன்மையும் இல்லை. பழி வாங்கும் எண்ணமே உள்ளது. அதை முற்றாக ஒழித்தால் தான் சன்னியாசம் பூண முடியும். உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு என்பது இல்லாதவருக்கு உடலின் வெளியே உள்ள உறுப்புக்களால் எந்தப் பயனும் இராது. அவன் உழைத்துச் சாப்பிடட்டும் மடத்தில் அனாதைகளுக்கும், தவசிகளுக்கும், வயோதிபர்களுக்கும், யாரும் இல்லாதவர்களுக்கு மட்டுமே உணவு வழங்கப்பட வேண்டும். இவன் நான் சொன்னவர்களில் எந்த ரகம்? தவசியா? அனாதையா..? யாருமில்லாதவனா..? சொல்லு பார்ப்பம்''என்று கதிரேசன் கேட்ட போது பேசுவதறியாது நமசிவாயகம் திகைத்து நின்றார்'' என்றது குமரன் எலி.

''கதிரேசன் சொன்னது சரி. உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றுவதை விட்டு விட்டுத் தவசி வேடம் போடுகிறார். போட்ட வேடத்திற்கேற்றவாறு வாழவேண்டாமா?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**80. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**

**என்பு தோல் போர்த்த உடம்பு**

''பண்பு, பாசம், இரக்கம், கருணை இப்படிப்பட்ட சொற்கள், செயல்கள் யாவும் ஒன்று சேர்ந்தது தான் அன்பு. ஓர் உயிரின் மேல் அன்பு வைக்காதவன் மரப்பொம்மையாவான். மரப்பொம்மைக்குக் கயிறு கட்டி ஆட்டுவது போல இறை சக்தியால் ஆட்டுவிக்கப்படுகிறானே தவிர அன்பென்ற பாசக் கயிற்றால் ஆட்டுவிக்கப்படவில்லை. அன்பில்லாத மரப்பொம்மைக்கு தோல்போர்த்தப்பட்டுள்ளது. இத்தகைய பொம்மைக்கு உணர்வுகள், பந்த பாசங்கள், இரக்கம் போன்றன இல்லை. உடலும், மனமும், இதயமும் மரத்தாலானதே அதற்குக் காரணமாகும். இல்லாவிட்டால் சென்றவாரம் மார்க்கண்டுவின் இளைய மகன் பகீரதனுக்குக் கடும் நோய் ஏற்பட்ட போது உதவிய நமசிவாயகத்திற்கு ஆள் வைத்து அடிப்பானா..? பிள்ளை சாகும் தறுவாயில் இருந்த போதும் அவன் சென்று பார்க்கவில்லை. இவன் மனிதனுமல்ல மிருகமும் அல்ல. மிருகங்களுக்குப் பிள்ளைப் பாசம் உண்டு. அதனால் இவனை மிருகங்களோடு கூட ஒப்பிட முடியாது'' என்று கதிரேசன் ஆத்திரத்தோடு கூறியதை நான் கேட்டேன்'' என்றது குமரன் எலி.

''இப்படி ஒரு மனிதனா..?'' என்று கேட்டது லட்சுமி எலி.

''இவனை விடக் கேவலமான பல மனிதரை நான் கோவிலடியில் கண்டுள்ளேன். இவர்கள் மனித உருவில் உலாவும் சாத்தான்கள்'' என்றது குமரன் எலி.

## விருந்தோம்பல் - 9

**81. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு**

“காலையில் எழுந்தது முதல் கதிரேசன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார். என்ன விசேசம்” என்று கேட்டது லட்சுமி எலி.

“வீட்டில் இருந்து மனைவியோடு வாழ்வது வீடு தேடி வரும் விருந்தினர்களுக்கு உணவு கொடுத்து உபசரிப்பதற்காகவே. மடத்தில் உணவு கொடுக்கப்படுவதால் நாம் வீட்டில் கொடுப்பது குறைவு. இன்று வீட்டுக்கு வருபவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும்.” என்று கதிரேசன் தனது மனைவிக்குக் கூறியவர்” என்றது குமரன்.

“பெரும்பாலான நாட்களில் கதிரேசனது செலவில் தானே மடத்தில் உணவு கொடுக்கப்படுகிறது. பிறகு வீட்டிலும் கொடுக்க வேண்டுமா..?” என்று கேட்டது லட்சுமி எலி.

“உதைத்தான் நமசிவாயகம் கேட்டவர். அதற்குக் கதிரேசன் சொன்னார், “நமசிவாயகம், இல்வாழ்வான் மனைவியோடு சேர்ந்து வீட்டிற்கு வரும் விருந்தினரை அன்புடன் வரவேற்று உணவு கொடுத்தல் வேண்டும். அதற்காகத் தான் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. வீட்டில் விருந்தினரை உபசரித்தால் திருமகள் அவ்வீட்டில் வந்து குடியேறி சகல சௌபாக்கியங்களையும் தருவாள். அத்துடன் வீடும் வாழும். அதனால் இன்று மதிய உணவிற்கு நீயும் வா” என்று கதிரேசன் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“கதிரேசன் மகிழ்வாகவும் வசதிகளுடனும் இருப்பதற்குக் காரணம் அது தான்” என்றது லட்சுமி எலி.

**82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று**

“உருத்திரகுமாரன் ஆசிரியரின் வீட்டில் இன்று ஏதோ விசேசம் என்று காலையில் மடத்தில் கதைத்தார்கள். என்ன விசேசம்” என்று கேட்டது லட்சுமி எலி.

“பேரனாரின் திவசமாம். சென்ற முறை திவசத்திற்குச் சென்ற போது தனக்கு உணவு சரியாகப் பரிமாறப்படவில்லை” என்று மார்க்கண்டு சொல்லிக் குறைப்பட்டது. கதிரேசன் என்றால் நிறையச் சமைப்பார். ஆனால் உருத்திரகுமாரன் அளவாகச் சமைப்பார். செல்வோருக்குப் போதாமல் இருக்கும். அத்துடன் ஏனைய நாட்களில் பசியென்று சொல்லி உருத்திரகுமாரனது வீட்டுக்குச் சென்றால் அவர் சென்றவர்களைக் கவனிக்கமாட்டார். தான் உண்டு விட்டு வந்து கதைப்பார். ஆனால் கதிரேசன் அப்படியல்ல அமிர்தமாக இருந்தாலும் எல்லோருக்கும் கொடுத்துத் தான் சாப்பிடுவார். அத்துடன் கடமைக்காக உணவு கொடுக்க மாட்டார். திட்டமிட்டு நல்ல முறையில் சமைக்கப்பட்ட உணவு வகைகளைச் சமைத்துக் கொடுப்பதோடு தானும் அவர்களுடன் கூட இருந்து உணவு அருந்துவார். அமிழ்தாக இருந்தாலும் தனியே இருந்து உண்ணபட்டார். இன்று அவரின் வீட்டுக்குப் பலர் செல்வார்கள்” என்றது குமரன் எலி.

**83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**

**பருவந்து பாழ்படுதல் இன்று.**

“நமசிவாயகம் கதிரேசனது வீட்டுக்கு வந்து உணவு உண்டு விட்டுச் சொன்னார், “கதிரேசு, தன்னை நம்பி நாள்தோறும் வரும் விருந்தினர்களைப் போற்றுகின்றார்களது

வாழ்க்கை ஒரு போதும் கெட்டு விடாது'' என்று சொன்னார். ''அது உண்மை. இந்த முறை வேளாண்மை பலருக்கு அழிந்து விட்டது என்று சொல்லிக் கவலைப்பட்டனர். ஆனால் கதிரேசனுக்கு அமோக விளைச்சல். கடவுள் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்'' என்று மடத்தில் இருந்தவர்கள் கதைக்கிறார்களே தவிரச் செயற்படுவதில்லை. போன முறை உருத்திரகுமாரனுக்கு அமோக விளைச்சல். முழு நெல்லையும் விற்று வயல் வாங்கியிருக்கிறார்'' என்றது குமரன் எலி.

**84. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**

**நல்விருந்து ஓம்புவான் இல்.**

''எல்லோரும் கதிரேசனுக்குக் கடவுள் உதவுவார் என்று சொல்கிறார்களே தவிர அவரைப் போல வாழ நினைப்பதில்லை. சிவபாதம் மடத்திற்கென்று மக்கள் கொடுக்கும் நெல்லின் ஒரு பகுதியைத் தனது நெல்லோடு சேர்ந்து விற்று விடுகிறார். அவருக்கு எப்படி கடவுள் உதவுவார் என்றும் முகமகிழ்வோடு விருந்தினரை வரவேற்று உணவளிப்பவன் வீட்டில் திருமகள் மகிழ்வுடன் இருந்து அவனுக்கு வரும் கஷ்டங்களை நீக்குவாள் என்றும் மடத்தில் நமசிவாயகம் தொண்டை கிழியக் கத்திய போதும் யாரும் கேட்பதில்லையென்றும் மடத்தில் கூடியிருந்து கதைக்கிறார்களே தவிரக் கதிரேசனைப் போல உதவுவதில்லை'' என்றது குமரன் எலி.

**85. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**

**மிச்சில் மிசைவான் புலம்.**

''ஐந்து வருடங்களுக்கு முன்பு எல்லோரும் நெல்லை விதைத்த பின் பெருமழை பெய்ததாம். பல நாட்கள் தொடர்ந்து பெய்ததால் விவசாயிகள் விதைத்த நெல்லையெல்லாம் வெள்ளம் தள்ளிக் கொண்டு போய் விட்டதாம். வெள்ளம் வற்றிய பின்பு மக்கள் விதைப்பதற்கு விதை நெல் இன்றிக் கஷ்டப்பட்டனராம். விதைத்தது போக உணவுக்கென வைத்திருந்த சிறிதளவு நெல்லைக் கதிரேசன் வயலைத் திருத்தி விதைத்தவராம். வழக்கமாக நூறு புசல் நெல்லை அவர் விதைப்பது வழக்கம். அந்த முறை கதிரேசன் பத்துப் புசல் நெல்லைத் தனது முழு வயலிலும் விதைத்தாராம். அந்த முறை அவருக்கு அமோக விளைச்சல் முதல் வருடம் விளைந்ததை விட மூன்று பங்கு விளைச்சல் ஏற்பட்டதாம். அதற்குக் காரணம் திருமகள் அவருடன் கூட இருக்கிறாள் என்று உருத்திரகுமாரன் சொன்னான். இல்லை. விருந்தினரைப் போற்றி உணவளித்த பின் எஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனின் நிலத்தில் விதையிடாத நிலத்திலும் விளையும்'' என்று நமசிவாயகம் சொன்னார். அது எப்படி என்று உருத்திரகுமாரன் கேட்டான். அதற்கு நமசிவாயகம் சொன்னார், ''நூறு புசல் நெல் விளைக்கும் வயலில் பத்துப் புசல் நெல்லையே கதிரேசன் விதைத்தார். ஆனால் நெற் பயிர் மட்டம் வெடித்து வயல் முழுவதையும் நிரப்பியிருந்தது. அதனால் விதையிடாத இடததிலும் நெல் விளைந்ததால் தானே வழமையை விடக் கூட விளைந்தது'' என்று நமசிவாயகம் சொன்னதை உருத்திரகுமாரன் ஏற்றுக் கொண்டான்'' என்றது குமரன் எலி.

**86. செல்விருந்து ஓம்பி வருவிருந்த பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு**

''கதிரேசனது வீட்டில் அன்று உணவு உண்டவர்கள் யார் யார் என்று கதிரேசன் பார்த்து வைத்திருந்தார். விருந்தினர்கள் உண்டு முடிந்ததும் தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். மாலையாகி விட்டது. அவரது மனைவி வந்து சொன்னாள், ''நமசிவாயகமும் தணிகாசலமும் கதிரவேலு வாத்தியாரும் வரவில்லை. அவர்கள் தேவை நிமிர்த்தம் பிற

ஊர்களுக்குச் சென்றிருப்பார்கள். நீங்கள் வந்து சாப்பிடுங்கள்'' என்று சொல்லும் போது கதிரேசன் சொன்னார் ,''அவர்கள் எங்கும் செல்லவில்லை. கோவிலில் வேலை நடைபெறுவதால் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் தேவைகளைக் கவனிக்கிறார்கள். அவர்கள் வரட்டும்'' என்றார். அப்போது அருணாசலம் சொன்னார், ''வந்த விருந்தினர்கள் உணவு உண்டு செல்ல, வரப்போகும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவர் மாமா. இது உங்களுக்குத் தெரியாதா. அதனால் மாமாவை மக்களுக்கு மட்டுமல்ல தேவர்களுக்கும், கடவுள்களுக்கும் பிடிக்கும்'' என்று சிரித்தார். அப்படியான கதிரேசனுக்கு வாழ்க்கையில் எந்தக் குறையையும் கடவுள் விடவில்லை'' என்றது குமரன் எலி.

''இவ்வாறான ஒரு மனிதனைக்காண நாம் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**87. இனைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்**

**துணைத்துணை வேள்விப் பயன்.**

''மாமா அடிக்கடி சொல்லும் வார்த்தை இது, ''விருந்தோம்பல் என்ற வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவிட்டுக் கூற முடியாது. எந்த அளவிற்கு ஒருவன் விருந்தினரைப் போற்றுகின்றானோ அந்தளவிற்கு அது பயன் தரும்'' அது உண்மை. இப்போ மாமா நூறு ஏக்கர் தென்னந்தோட்டத்தை வாங்க நினைக்கிறார். மடத்திற்கு உணவு தயாரிக்கத் தேங்காய் தேவையாம். நான் தென்னந்தோட்டத்தை வாங்கினால் தேங்காயை இலவசமாக மடத்திற்குக் கொடுக்கலாம்'' என்றார். ஏன் தெரியுமா தினமும் ஏராளமான மக்களுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்பதற்காக. கதிரேசனுக்கு நல்ல மருமகன் வாய்த்திருக்கிறார். கதிரேசன் எள்ளுக்கொண்டா'' என்றார். அவர் எண்ணெய்யைக் கொண்டு வருவார்'' என்றது குமரன் எலி.

**88. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி**

**வேள்வி தலைப்படா தார்.**

''உருத்திரகுமாரன் எச்சில் கையால் கூடக் காகங்கலைக்கமாட்டான். கொடுக்கின்ற கதிரேசனை வாழத் தெரியாத மடையன் என்று அடிக்கடி சொல்வான். அண்மையில் பெய்த மழையின் போது பெரும் இடிஇடித்தது. அப்போது நூறேக்கரில் நின்ற தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டன. நெல் வயல் அழிந்து விட்டது. பல பசுக்கள் இறந்து விட்டன. ஆனால் கதிரேசனுக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லை. அது ஏன்என்று என்னைக் கேட்டான். அதற்கு நான் சொன்னேன், ''விருந்து என்ற வேள்வியை மேற்கொள்ளாதவர்கள் ஒரு காலத்தில் செல்வந்தர்களாக இருந்து அதனை இழக்கும் போது, வாழ்ந்த காலத்தில் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யவில்லையே என்று வருந்துவார்கள். இப்போது கதிரேசனுக்கு ஏன் நட்டம் ஏற்படவில்லை என்று உனக்குப் புரியும்'' என்றது குமரன் எலி.

''அவர் அதர்மத்தை நம்புவாரே தவிரத் தர்மத்தை நம்பமாட்டார்'' என்றது லட்சுமி எலி.

**89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**

**மடமை மடவார்கண் உண்டு.**

''நேற்றுப் பொன்னையாவின் பேரன் விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவனாம். பொன்னையா முப்பது வருடங்களாக உருத்திரகுமாரனது வீட்டில் வேலை செய்பவனாம். பேரனான ராகுலன் உருத்திரகுமாரனின் மாணவன். அவன் பாடசாலை விட்ட பின்பு உருத்திரகுமாரனது வீட்டுக்குச் சென்று வேலைகள் பலவற்றைச் செய்பவனாம். வேலை செய்யும் நாட்களில் உருத்திரகுமாரனது மனைவி பழைய உணவு வகைகளையே

கொடுப்பாளாம். வறுமை காரணமாக அவன் அதை வாங்கி உண்பானாம். வேலை செய்வதற்குக் கூலி கொடுப்பதில்லையாம். தனது பிள்ளைகள் உடுத்துக் கழித்த பழைய துணி வகைகளையே கொடுப்பானாம். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ராகுலனுக்கு நல்ல உணவு வகைகளைக் கொடுக்கும்படி வைத்தியர் கூறியிருக்கிறார். பொன்னையா உருத்திரகுமாரனது வீட்டுக்குச் சென்று அதைக் கூறிப்பண உதவி அல்லது நல்ல சத்துள்ள உணவு வகைகளை வாங்கித் தருமாறு கேட்டவராம். ஆனால் உருத்திரகுமாரன் அதைக் கேட்டதாகக் காட்டிக் கொள்ளவில்லையாம். இதைப் பொன்னையா நமசிவாயகத்திற்குச் சொல்ல அவர் சொன்னார்,''முப்பது வருடங்கள் அவனோடு வாழ்ந்தும் அவனைப் பற்றித் தெரியாது வாழ்ந்திருக்கிறாய். அவன் கஞ்சன். செல்வமுள்ள காலத்தில் வறுமை எதுவென்றால் ஏழை எளியவர்களுக்கு உணவு கொடாமை. இது அறியாமை மிகுந்த பேதையரிடத்தில் நீங்காது வீற்றிருக்கும் குணம் என்றவராம்'' என்றது குமரன் எலி.

''உருத்திரகுமாரன் தகப்பனுக்கே உணவு கொடுக்காதவன். பேதையான பொன்னையாவுக்கு இது கூடவா தெரியாது'' என்று கேட்டது லட்சுமி எலி.

**90. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து**

''உருத்திரகுமாரன் ஒரு போதும் யாரிடமும் கலகலப்பாக பேசிச் சிரித்ததில்லை. பேசிச்சிரித்தால் மறுநாள் உதவி கோரி வந்து விடுவார்கள் என்று சொல்பவனாம். அப்படியானவரிடத்தில் எனது தந்தை உதவி கோரியதை நினைக்கக் கவலையாக உள்ளது. அப்பாவுக்கு எண்பது வயதாகிறது. இனி வேலைகள் எதுவும் செய்ய வேண்டாம் பேசாமல் வீட்டில் இருங்கோ. கிடைப்பதைப் பகிர்ந்து உண்போம் என்று சொன்னால் அப்பா கேட்கமறுக்கிறார். ஒருவனை நன்கு அறிந்த பின்பு தான் அவனிடம் உதவி கேட்க வேண்டும். உருத்திரகுமாரனுக்கு இதயமே இல்லை. அப்படி இருக்க மனச்சாட்சி எப்படி இருக்கும் என்று எதிர்பார்ப்பது. அனிச்சம் பூவை முகர்ந்தால் அது வாடிவிடும். யாராவது எதையும் கேட்டுவிடுவார்கள் என்ற அச்சத்தினால் யாரையும் முகமலர்வுடன் வரவேற்றுப் பேசாத உருத்திரகுமாரனின் வீட்டுப் பக்கம் பிச்சைக்காரர்களே போவதில்லை. இதை முழுமையாக அறிந்த அப்பா அவரிடம் இரக்கச் சென்றதை நினைக்க அவமானமாக இருக்கிறது'' என்று நமசிவாயகத்திற்குக் கூறிப் பொன்னையாவின் மகன் சுந்தரன் கவலைப்பட்டவராம்'' என்றது குமரன் எலி.

''அந்தக் கோவிலடியில் தினமும் சுந்தரம் பலருக்குத் தனது தகப்பனை உருத்திரகுமாரன் வீட்டுக்குச் செல்லாமல் தடுக்குமாறு கூறுவான். பாவம் அவன்'' என்றது லட்சுமி எலி.

## இனியவை கூறல் - 10

**91. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்**

**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

''காலமை பொன்னையா கோவிலுக்கு வந்து தனது பேரன் சுகப்பட வேண்டும் என்று பிராத்தித்தவர். அப்போது நமசிவாயகம் வந்து சொன்னார், ''பொன்னையா, நீ ஏழையென்றாலும் ஒழுக்கமாக வாழ்பவன். அதனால் தீயவனான உருத்திரகுமாரனின் வீட்டுக்குச் செல்லாதே. உனது மகனான சுந்தரனும் ஒழுக்கமாக வாழ்பவன். அவன் தினமும் நீ உருத்திரகுமாரனின் வீட்டுக்குச் சென்று கஷ்டப்பட்டு உழைப்பதை எண்ணி மனம் வருந்திக் கண்ணீர் விடுகிறான். அவன் ஏழை என்பதற்காக அவனுக்குப் பாரமாக இருக்க நீ விரும்பவில்லை. உனக்கு எண்பது வயது ஓய்வாக இருத்தல் வேண்டும். அதைவிட ஊரவர் சிலர் உனது செயலால் உனது மகனைக் குறை சொல்கிறார்கள். அது உனக்கு விருப்பமா..?'' என்று கேட்டார். அதற்குப் பொன்னையாவால் பதில் கூறமுடியவில்லை. விம்மி விம்மி அழுதார்; ''பொன்னையா, உனது மகன் பணம் இல்லாததால் ஏழை. உருத்திரகுமாரன்

குணம் இல்லாததால் ஏழை. உனது மகனை விடக் கேவலமானவன். உனது செயலால் உனது மகனைத் துன்பப்படுத்துகின்றனர். தயவு செய்து இனியாவது உனது மகனைத் துன்பப்படுத்தாதே'' என்றார் நமசிவாயகம். சிறிது நேரம் பொன்னையா பேசவில்லை. பின், எனது மகனைப் பற்றியும், என்னைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்த உங்களது அன்பான பண்புள்ள வார்த்தைகளை என்னால் மீறமுடியவில்லை'' என்று கலங்கினார். அதைக் கண்ட நமசிவாயகம் சொன்னார், ''கோவிலுக்கு வா. மடத்தில் வேலை செய்'' என்று பொன்னையாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது'' என்றது குமரன் எலி.

''சுந்தரன் மிகவும் நல்லவன் என்றே ஊரில் கதைக்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**92. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**

**இன்சொலன் ஆகப் பெறின்.**

''அன்று பொன்னையா உருத்திரகுமாரனின் வீட்டுக்குச் செல்லாததால் உருத்திரகுமாரன் பொன்னையாவைத் தேடிக் கோவிலடிக்கு வந்தான். உருத்திரகுமாரனைக் கண்ட பொன்னையா சொன்னார்,''பேரனுக்குச் சுகமில்லை. அதை நினைக்க எனக்குத் தலை சுற்றுகிறது. மயக்கம் வருகிறது''

''சரி நாளைக்கு வா'' என்று உருத்திரகுமாரன் கூறும்போது பொன்னையா சொன்னார், ''கொஞ்ச நாட்களுக்கு நான் வரமாட்டேன். வேறு யாரையாவது பாருங்கோ'' அந்த வார்த்தைகள் உருத்திரகுமாரனின் கோபத்தை அதிகரிக்கச் செய்தது, ''முப்பது வருடமாய் நான் சோறு போடுறன். உன்ரை பேரனும் எங்கள் வீட்டில் தான் உண்டு வளர்ந்தவன். இப்ப காசில்லை என்றவுடனை ரோசம் வந்திட்டுது உங்களுக்கு. குண்டி காய்ந்தால் குதிரை வைக்கோல் தின்னுமாம். நாழைந்து நாள்ப் போக வருவாய். அப்ப கதைப்பம்'' என்று கோபத்துடன் உருத்திரகுமாரன் சொல்லிவிட்டுச் சென்றான். அப்போது அங்கே நமசிவாயகமும் இருந்தவர். பொன்னையா சொன்னார், ''ஒருவன் அள்ளிக் கொடுக்காவிடாலும் அன்பாகப் பேசினால் பொய்யையும், புரட்டையும் நம்பலாம். ஆனால் இவனின் சொல்லும் செயலும் ஒன்று. நேற்று மாலை கதிரேசன் வந்து பேரனைப் பார்த்து விட்டுப் பணமும் தந்தவர். அவர் எதுவும் தராவிட்டாலும் அவரைப் பார்த்தாலே மனதில் மகிழ்ச்சியுண்டாகும் என்று பொன்னையா சொல்ல நமசிவாயகம் சிரித்தவர்'' என்றது குமரன் எலி.

''பலர் கொடுத்துப் புகழ் பெறுகின்றனர். சிலர் பேசும் வார்த்தைகளால் புகழடைகின்றனர்'' என்றது லட்சுமி எலி.

**93. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்**

**இன்சொ லினதே அறம்.**

''அன்று வெள்ளிக்கிழமை. மாலை நேரம் மிகவும் களைப்புடனும், பசியுடனும் வந்த சுந்தரம் மடத்தில் அந்த நேரம் உணவு இருக்குமா என்ற சந்தேகத்துடன் உள்ளே வந்தான். சமையல்காரன் சுப்பிரமணியமும் அவனது உதவியாளனும் மறுநாள்ச் சமையலுக்கான காய்கறிகளை வாங்கச் சென்றிருந்தனர். களைப்புடன் வந்த சுந்தரத்தைக் கண்ட அம்மடத்தில் தங்கியிருக்கும் யோகநாதன் என்ற முதியவர் அன்போடு வரவேற்றார், ''வா சுந்தரம் சாப்பிடுகிறாயா..?'' என்று கேட்டார்,''சாப்பிடத்தான் வந்தேன். எனது மனைவி வைத்தியசாலைக்குச் சென்றதால் சமைக்கவில்லை. உணவு உள்ளதா..?'' என்று கேட்டான் சுந்தரம். ''வா இரு'' என்ற யோகநாதன் வாழையிலையைப் போட்டு உணவைப் பரிமாறினார். ''இன்னும் சோறு இருக்கிறது. வயிறார உண்'' என்று கூறி மீண்டும் மீண்டும் சோற்றை இட்டவர். அவன் சாப்பிட்டு முடிந்ததும் சொன்னார், ''உனது மகனுக்கு எப்படி..? நீ நல்லவன். யாருக்கம் தீங்கு செய்யாதவன். அதனால் கடவுள் உனக்குத் துன்பம் செய்யார்'' என்றவர்

சிறிது நேரம் கழித்துச் சொன்னார்,‘‘நீ பணத்திற்குப்படும் கஷ்டங்களை நான் அறிவேன். நான் பரதேசி. யாரும் என்னை ஆதரிக்காததால் மடத்தில் இருக்கிறேன். வயது சென்றமையால் உழைக்க முடியவில்லை. அதனால் தினமும் உனது மகன் சுகம் பெற வேண்டும் என்று பிரார்த்திப்பேன். ஊரில் உள்ள நல்லவர்களைச் சந்தித்து உனக்கு உதவுமாறு கூறுவேன்’’ என்று கண்கலங்கினார். சுந்தரன் துடித்துப்போனான்,‘‘ஐயா ஒருவரின் உயிரைக் காப்பாற்றுவது பணமல்ல. பெரியவர்களின் ஆசி. கடவுளின் அனுக்கிரகம். எனக்காகப் பலர் கடவுளை வேண்டுகின்றனர். அது எனக்குப் போதும் மனம் விரும்பி முகம் மலர்ந்து பேசுவதும் பற்றில்லாமல் ஆண்டவனை வேண்டுவதும் அறம். அந்த அறம் எனது மகனை வாழவைக்கும்’’ என்றான் சுந்தரன். எனக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது’’ என்றது குமரன் எலி.

‘‘நீங்கள் சொல்வதைக் கேட்க முடியவில்லை’’ என்றது லட்சுமி எலி.

**94. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**

**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

“மடத்தில் சாப்பிட்டு விட்டு வெளியே வந்த சுந்தரனை அவ்வூர் மக்கள் பலர் சூழ்ந்து கொண்டனர். ஒவ்வொருவரும் சுந்தரனின் மகனின் உடல் நிலையைப் பற்றி அக்கறையுடன் விசாரித்தனர். அவர்களிற் பலர் வைத்தியசாலைக்குச் சென்று நலன் விசாரித்ததுடன் அன்பளிப்புப் பொருட்களும் கொடுத்தவர்கள். “நான் பெரும் வசதியானவன் இல்லை. இருந்தும் எனது மகனை மிக்க வசதியுடன் வைத்தியம் செய்யக் காரணமாக இருந்த உங்களுக்கு நன்றி கூற வார்த்தைகளே இல்லை. விபத்து நடந்தன்று பொருள் இல்லாததால் எனது மகன் இறந்து விடுவானோ எனப் பயந்தேன். இப்பொழுது அந்தப் பயம் நீங்கி விட்டது” என்று கரங்குவித்தான் சுந்தரன். “சுந்தரா, நீயும் உனது தந்தையும் இவ்வூரவர் கேட்கும் உதவிகள் எதையும் செய்யாது விட்டதில்லை. அத்துடன் யாராலும் வெறுக்கத்தக்க சொற்களை ஒருபோதும் பேசியதில்லை. அதனால் ஊரவர் உன்னை மிகவும் விரும்புகிறார்கள். அத்துடன் உன்னைத் தமது குடும்பத்திலுள்ள ஒருவனாகவும் நினைக்கிறார்கள். அதனால் தான் அவர்கள் தம்மாலியன்ற பொருளுதவிகளைச் செய்தனர். ஊரவருடன் அன்பாக இருப்பவர்களுக்கு ஒரு போதும் துன்பமோ வறுமையோ வராது” என்று நமசிவாயகம் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“நமசிவாயகம் சொன்னால் அதில் அர்த்தமிருக்கும்” என்றது லட்சுமி எலி.

**95. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**

**அணி அல்ல மற்றுப் பிற**

“அப்போது கதிரேசன் மடத்திற்கு வந்தார். அவரைக் கண்டவுடன் சுந்தரன் ஓடிச் சென்று அவரது பாதங்களைப் பிடித்தபடி சொன்னான்,“ஐயா, நீங்கள் தான் இவ்வூருக்குக் குலதெய்வம். எந்தவொருவன் துன்பப்பட்டாலும் அவனிடஞ் சென்று ஆறுதல் கூறிப் பணமும் கொடுப்பீர்கள். எனது மகன் விபத்துக்குள்ளான போது எனது சித்தம் கலங்கிவிட்டது. எதைப் பற்றியும் யோசிக்க முடியவில்லை. நீங்க்ள் வைத்தியசாலைக்கு வந்து வைத்தியரைக் கண்டு பேசிய பின் என்னிடம் வந்து கூறிய அன்பான வார்த்தைகள் தான் என்னைத் திடப்படுத்தின. அதன் பின் உங்கள் மூத்த மகன் வைத்தியசாலைக்கு வந்து வைத்தியர்களோடு கலந்துரையாடினார். அவர் பட்டணத்திலுள்ள வைத்தியசாலையில் கடமையாற்றிய போதும் தகுதி தராதரம் பாராது வைத்தியசாலைக்கு வந்ததை என் வாழ்நாளில் மறக்கமாட்டேன்” என்று அழுதான். அப்போது அங்கிருந்த யோகநாதன் சொன்னான், “ஒருவன் பணிவுள்ளவனாகவும்,இன்சொல்லைப் பேசுபவனானகவும்வாழ்ந்தால் அவனை எல்லோரும் விரும்புவர். நீ அப்படி வாழ்ந்தமையால் தான் அவர் வந்தார். எல்லோரும் பெறுமதிமிக்க ஆபரணங்களை அணிந்த போதும் ஆபரணங்களுக்காக யாரும் அவர்களை மதிப்பதில்லை. உண்மையான ஆபரணம் இன்சொல்லும், பணிவும் தான். அந்த இரண்டும் உள்ளவர்களைத் தான் உலகம் மதிக்கும்” என்றார். எனக்கு அவரின் வார்த்தைகள் அப்போது புரியவில்லை. இப்போது புரிகிறது” என்றது குமரன் எலி.

“கதிரேசனும் மகனும் தேவர்களை விட உயர்ந்தவர்கள்” என்றது லட்சுமி எலி.

**96. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.**

“மகனே யாராக இருந்தாலும் அவரது தகுதியைப் பாராது அவருக்கு உதவி செய்தல் வேண்டும். நான் பரம ஏழை. முயற்சித்து முன்னேறினேன். எனது பிள்ளைகள் வளர்ந்ததும் உழைத்தார்கள். அதுவும் நான் முன்னேறக் காரணமாக அமைந்தது. ஒருவர் மற்றவர்களுக்கு பயன் கருதாமல் உதவி செய்தல் வேண்டும். இனிமையான சொற்களைப் பேச வேண்டும். தன்னைப் போலப் பிறரையும் நேசிக்க வேண்டும். அப்படி வாழ்ந்தானேயானால் அவன் செய்த பாவங்கள் படிப்படியாக தேய்ந்து அறம் வளரும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அத்துடன் நாம் முற்பிறவியில் செய்த பாவங்களும் தேய்ந்து மறைந்து விடும். பாவங்கள் இல்லாதவன் புண்ணியவான். அதனால் அவன் செய்யும் தொழில் வளர இறைவன் அருள்புரிவார். நான் இதற்காகத் தான் மற்றவர்களை மதிக்கிறேன், அன்பாகப் பேசுகிறேன். அது போல இக்கிராமத்தில் யார் செய்தாலும் அவர்கள் மலையைப் போல உயர்வார்கள். இது எனது நம்பிக்கை” என்றார் கதிரேசன்” என்று கூறியது குமரன் எலி.

“மடத்தில் நமசிவாயகமும் கதிரேசனும் எத்தனை தரம் உதைக் கூறியிருப்பார்கள். அவற்றைக் கேட்காமல் விட்டு விட்டுக் கதிரேசனுக்குக் கடவுள் அள்ளிக் கொடுக்கிறார் என்றெல்லோ புலம்பிக் கொண்டிருக்கிறர்கள்” என்றது லட்சுமி எலி.

**97. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்**

“அப்போது நமசிவாயகம் ,“யாரும் தான தர்மம் செய்யத் தேவையில்லை. பிறரை மதித்து அன்பாகப் பேசுங்கள். அது உங்களை இமயமாக உயர்த்தும். இன்னொரு உயிர் மீது அன்பு கொள்பவன் அதைத் துன்புறுத்த மாட்டான். அந்த உயிர் மீது இரக்கப்படுவான். காலகதியில் இவ்விரக்கம் பற்றாக நட்பாக மாறும். அப்படி மாறும் போது அது அவ்வுயிர்களுக்கு உதவிகளைச் செய்ய வைக்கும். நம்பிக்கை சகலவற்றையும் செய்விக்கும். ஒருவன் துன்பப்படும் போது அன்பாகப் பேசி அவனது துயரத்தைக் குறைப்பவன் அவருக்குப் பெரும் உதவி செய்தவனாவான். மடத்தில் இருக்கும் யோகநாதன் வயோதிபர். பொருளாதார வசதியில்லாதவர். அவரைச் சுற்றி எந்நேரமும் மக்கள் இருக்கிறார்கள். அவர் துன்பப்படவோருக்கு ஆறுதல் கூறுகிறார். ஆறுதல் கூறுதல் என்பது பொருள் கொடுப்பதை விட உயர்வானது” என்று நமசிவாயகம் கூறினார்” என்றது குமரன் எலி.

“நான் பெருந்துன்பத்தோடு வந்தேன். அதை யோகநாதன் இல்லாமற் செய்து விட்டார். அவரோடிருந்தால் துன்பம் தாக்குவது தெரியாது. நல்ல ஆலோசனைகள் வழங்குகிறார்” என்று பொன்னையா கூறியதை நான் கேட்டேன்” என்றது லட்சுமி எலி.

**98. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பம் தரும்.**

“அன்று இரவு பாலசுந்தரனுக்கு யாரோ கொட்டனாலும், பொல்லுகளாலும் தாக்கி விட்டார்கள். வேதனையோடு முனகியபடி வீதியோரத்தில் கிடந்த பாலசுந்தரத்தை ஊரவர் பார்த்து விட்டுக் காணாதது போலச் சென்று விட்டனர். அந்த வழியாக வந்த நமசிவாயகம் வீதியோரமாகக் கிடந்த பாலசுந்தரத்தை வைத்தியசாலையில் சேர்த்தார். பெருங்காயங்களுக்குள்ளான பாலசுந்தரம் மனம் பேதலித்திருந்தான். அதனால் அவன் கண்டபடி பிதற்றிக் கொண்டிருந்தான். மறுநாட்க் காலை கதிரேசனும் நமசிவாயகமும் அவனை வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தனர். அவன் தன்னைத்

தாக்கி விட்டார்கள் என்று அழுதான். அப்போது கதிரேசன் சொன்னர்,“மகனே, உனக்குக் காரணமின்றி யாரும் அடித்திருக்க மாட்டார்கள். எல்லாச் செயல்களுக்கும் ஒரு மூலம் இருக்கும். உனது வாய் சரியில்லை. வாயில் வந்தவற்றையெல்லாம் பேசுவாய். இந்த ஊரில் நீ கேவலமாகக் கதைக்காதவர் யார் இருக்கிறார்கள். சில நேரங்களில் என்னையும் கேவலமாகப் பேசியுள்ளாய். நான் அதைப் பொருட்படுத்தவில்லை. எல்லோரும் அப்படி இருக்கமாட்டார்கள். பிறருக்கு துன்பத்தை உண்டாக்காத இனிமையான சொற்கள் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரும். பயனில்லாத கொடிய சொற்கள் சொல்பவனுக்கு வாழ்நாள் முழுவதும் துன்பங்கள் தான் வரும். அதனால் பிறரைப் புண்படுத்தும் சொற்களைப் பேசாதே” என்றார். ஆனால் பாலசுந்தரம் அதைக் கேட்கவில்லை. சங்கரப்பிள்ளை தான் தனக்கு அடித்தது என்கிறான். அவன் திருந்தமாட்டான்” என்றது குமரன் எலி.

“அவன் திருந்தாவிட்டாலும் பெரியவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்வார்கள். கேட்டால் இன்பம். கேட்காவிட்டால் துன்பம்” என்றது லட்சுமி எலி.

**99. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.**

“பாலசுந்தரம் தன்னைத் தாக்கியது சங்கரப்பிள்ளையென்று வருவோர் போவோர்குச் சொல்லிக் கொண்டிருந்தது. சங்கரப்பிள்ளையின் காதுகளுக்கு எட்டியது. அதனால் கடுங்கோபங் கொண்ட சங்கரப்பிள்ளை வைத்தியசாலைக்கு வந்து சொன்னான்,“நேற்று நான் வவுனியாவுக்குத் தொழில் விடயமாகச் சென்று இன்று காலையில் தான் வந்தேன். உனக்கும் எனக்கும் பிரச்சினை இல்லை. ஆனால் நீ ஊரில் உள்ள எல்லோரைப் பற்றியும் மிகவும் கேவலமாகக் கதைக்கிறாய். இதனால் உனக்கு என்ன இலாபம். ஊரவர் போற்றுகின்ற கதிரேசனைப் பற்றியும், நமசிவாயகத்தைப் பற்றியும் நீ கதைக்கிறாய். நமசிவாயகம் தனது காணிகளை விற்று மடமும், பாடசாலையும் கட்டியதால் தான் இன்று ஏழை எளியவர்கள் ஒரு வேளையாவது உண்கின்றனர். பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். இதெல்லாம் உனக்குத் தெரியாதா? யாரோ உன்னை அடித்து வீதியோரத்தில் கிடந்த உன்னைப் பார்த்த ஊரவர் இவன் சாகட்டும்” என்று விட்டுச் சென்றனர். நீ மடத்துப் பணத்தைக் கொள்ளையடிப்பதாகக் கூறிய நமசிவாயகம் தான் உன்னை வைத்தியசாலையில் சேர்த்தார். நேற்று கதிரேசன் வந்து உனக்கு ஆறுதல் சொல்லும் போது உனது மனம் ஆறுதலடையவில்லையா..? இன்சொற்கள் இன்பத்தைத் தரும் என்று நீ உணர்ந்திருந்தால் இப்படியான வன்சொற்களைப் பேசி மற்றவர்களை அவமதித்திருக்க மாட்டாய்” என்றாராம்” என்றது குமரன் எலி.

“எதைச் சொல்லியும் என்ன பயன். நமசிவாயகமும் கதிரேசனும் எத்தனை முறை புத்திமதி சொல்லியும் திருந்தாதவன் தானே பாலசுந்தரம்” என்றது லட்சுமி எலி.

**100. இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.**

“பாலசுந்தரத்தின் மனைவி மங்களம் காலமை கோவிலுக்கு வந்து சங்கரப்பிள்ளையின் மகன் நகுலன் வைத்தியசாலைக்கு வந்து தனது கணவனை மிரட்டியதாகச் சொன்னாள். அவளுக்குப் பயமாக இருக்கிறதாம். நகுலன் மிகவும் நல்லவன். ஆனால் கோபம் வந்தால் கட்டாயம் அடிப்பான். வைத்தியசாலையால் வா உன்னைக் கொல்கிறேன் என்றவனாம். கதிரேசன் அவளுக்கு ஆறுதல் கூறியனுப்பினார். எனினும் மங்களம் அழுது கொண்டு சென்றவள். தேவையில்லாமல் கதைப்பது என்றும் துன்பங்களையே தரும். ஒருவன் இனிமையாகப் பேசுவதால் எதை இழக்கிறான். இதை உணராது வாழ்வோரால் தான் பிரச்சினைகள் உருவாகிச் சண்டையில் முடிவடைகின்றன. நல்ல இனிமையான பழங்கள் இருக்கையில் மிக்க புளிப்புடைய காய்களை ஏன் சிலர் உண்கிறார்கள் என்று புரியவில்லை. உனது கணவன் இன்று நடந்த சம்பவத்தோடு திருந்துதல் வேண்டும். திருந்தாவிட்டால் நகுலன் சொன்னபடி செய்தும் காட்டுவான்” என்று கதிரேசன் கூறியதால் மங்களம் அழுது கொண்டு போனாள்” என்றது குமரன் எலி.

“ஆம்பிளைகள் ஆராயாதும், பெரியவர்கள் சொல்வதைக் கேளாது வாழ்வதாலும் பெண்களுக்குத் தான் துன்பங்கள் வருகின்றன. பாவம் பெண்கள்” என்றது லட்சுமி எலி.

**செய்ந்நன்றி அறிதல் - 11**

**101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.**

“யோகநாதன் திடீரென்று நோய்வாய்ப்பட்டமையால் அவரைக் கதிரேசன் வைத்தியசாலையில் சேர்த்தார். அவர் எழுந்து நடக்க முடியாததால் சிவநாதன் அவருக்குதவியாக வைத்தியசாலையில் ஐந்து நாட்கள் தங்கியிருந்தான். யோகநாதனின் மனைவி ஐந்து வருடங்களுக்கு முன் இறந்து விட்டாள். யோகநாதனின் மகன் வெளிநாட்டிற்குச் சென்று அங்குள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்த பின்பு யோகநாதனோடு தொடர்பு கொள்வதில்லை. அவரது இனத்தவர்கள் அவர் முதியவராக இருந்தமையால் பிற்காலத்தில் தாம் தான் பராமரிக்க வேண்டுமென்று நினைத்து அவரைச் சேர்ப்பதில்லை. அன்று காலை யோகநாதன் சுகப்பட்டமையால் திரும்பவும் மடத்திற்கு வந்து விட்டார். அவர் சிவநாதனைப் பார்த்துக் கண் கலங்கினார். “மகனே, நீ எனது இனத்தவன் அல்ல. நான் உனக்கு இதுவரை எந்த உதவியும் செய்யவில்லை. அப்படியிருக்க ஐந்து நாட்கள் என்னுடன் வைத்தியசாலையில் கூட இருந்து சகல விதமான உதவிகளையும் செய்தாய். இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன். எந்தவிதமான கைம்மாறையும் எதிர்பாராமல் நீ செய்த இந்த உதவிக்கு விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும் கொடுத்தாலும் போதாது” என்று கண்கலங்கினார். சிவநாதன் எல்லோருக்கும் உதவி செய்யும் நல்லவன்” என்றது குமரன் எலி.

“பண வசதி உள்ளவர்களே பணம் கொடுக்காது தானே சிவநாதனைக் கொண்டு வேலை செய்விக்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

“சிவநாதனைச் சனம் போற்றிப் புகழும் போது அவன் சொல்வான், “நான் செய்வதைச் சொல்ல வேண்டாம். நீங்களும் இயன்றவரை பிறருக்கு உதவி செய்யுங்கள்” என்பான். அதை யார் கேட்கின்றார்கள்?” என்றது குமரன் எலி.

**102. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது**

“யோகநாதன் முன்பு மதுபான வகைகளைக் குடித்தவர். மாமிசம் உண்டவர். மனைவி காலமான பின்பு அவர் மடத்திற்கு வந்தமையால் அவரால் மதுபானங்களைக் குடிக்க முடியவில்லை. இவ்வளவு காலமும் மனதில் தோன்றாத அந்த நினைவு அவரைத் திடீரென்று தோன்றிச் சித்திரவதை செய்தது. மதுபானமும் மாமிச உணவும் வாங்குவதற்கு ஐந்நூறு ரூபா வேண்டும். அவரிடம் பணம் இல்லை. அதனால் அவர் சிவநாதனைக் கேட்டார், “மகனே, குறை நினைத்துக் கொள்ளாதை. என்னுடைய உடல் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. நான் இறக்கு முன் சிறிதளவ மதுபானம் குடிக்க விரும்புகிறேன். அத்துடன் மாமிசமும் உண்ண விரும்புகிறேன். இது யாருக்கும் தெரியக் கூடாது. செய்வாயா?” என்று யோகநாதன் கேட்டதும் சிவநாதன் தடுமாறிப்போனான். ஆசைகள் நிறைவேறாது மரணிப்பவர்களின் ஆத்மா பேயாய் அலையும் என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். அதனால் இனிமேல் கேட்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் தனது நண்பனின் வீட்டில் அவர் கேட்டதை வாங்கிக் கொடுத்தான். மறுநாள் மாலை யோகநாதன் சொன்னார்,“என்னுடைய ஆசை நிறைவேறி விட்டது. நீ செய்த உதவி இந்த உலகத்தை விடப் பெரியது. எனது ஆத்மா இனிச் சாந்தியடையும்” என்று கண்கலங்கியதைப் பார்த்தேன். மதுவும் மாமிசமும் உண்ணாத சிவநாதன், மதுவும் மாமிசமும் உண்ணும் தனது நண்பனின் வீட்டில் ஒழுங்கு செய்தது மிகவும் பெரிய செயல்” என்றது குமரன் எலி.

“நல்லவர்கள் ஆசை தீயதாக இருந்தாலும் நிறைவேற்றுவர்” என்றது லட்சுமி எலி.

**103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது.**

“கதிரேசன் மடத்திற்கு வந்து யோகநாதனுக்குச் சொன்னார்,“யோகநாதன், உனக்கு வயது சென்று விட்டது. ஆசைகளைக் குறைக்க வேண்டும். சில வாரங்களுக்கு முன்பு நீ கடுமையாகச் சுகவீனமுற்று வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற போது சிவநாதன் என்ன பயன் கிடைக்குமென்று ஆராயாமல் உனக்கு உதவி செய்தான். இனத்தவர்கள் உன்னை வந்து பார்க்கக் கூட இல்லை. அது கடலை விடப் பெரிய உதவி. அதன் பின் நீ மது அருந்த வேண்டும் என்றும், மாமிசம் உண்ண வேண்டும் என்று ஆசைப்பட்டாய். அது தகாத ஆசை. ஒரு முறை மது அருந்தினால் பின் மறுமுறையும் அருந்தச் சொல்லும். நீ கேட்ட போது சிவநாதன் என்னிடம் வந்து சொன்னான். அவன் தீட்சை பெற்றவன். மது அருந்தாதவன். மாமிசம் உண்ணாதவன். உனது ஆசையை நிறைவேற்றுவதற்காகத் தனது சமயக் கடமைகளை ஒதுக்கி வைத்து விட்டு உதவி செய்தான். நான் தான் நீ கேட்டதை வாங்கிக் கொடுக்கும் படி சொன்னேன். உனது ஆசை தீர்ந்து விட்டது. இனிமேல் அதை நீ கேட்கக் கூடாது” என்று சொல்லிவிட்டு கதிரேசன் சென்று விட்டார்.

“யோகநாதன் எதுவும் பேசவில்லை. அவர் கூறியது போல சுவையை அறிந்த நாக்கு அடிக்கடி ஆசைப்படும். யோகநாதன் முன்பு குடித்து விட்டு அடாவடித்தனங்களில் ஈடுபட்டாராம்” என்றது குமரன் எலி.

“மனிதருக்கு இடங்கொடுத்தால் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடுவார்கள்” என்றது லட்சுமி எலி.

**104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார்.**

“ரகுநாதன் வெளிநாட்டில் வசித்தவன். இப்போ ஊருக்கு வந்திருக்கிறான். இருபது வருடங்களுக்கு முன் வெளிநாட்டுக்கு அனுப்பும் முகவரான பேரின்பநாயகத்திடம் ரகுநாதனும், தந்தையும் சென்று ரகுநாதனை வெளிநாட்டுக்கு அனுப்புமாறு கேட்டனர். அப்போ நாட்டுப் பிரச்சினை காரணமாக ஏராளமான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். ரகுநாதனும் தந்தையும் பலமுறை சென்றும் பேரின்பநாயகம் அவனை அனுப்பவில்லை. ஒரு நாள் கதிரேசனைச் சந்தித்த ரகுநாதன் தனது நிலையை எடுத்துச் சொன்னான். அப்போது கதிரேசனுக்கு ஊரில் பெரும் மதிப்பு இருந்தது. கதிரேசனைக் கண்ட பேரின்பநாயகம் வந்து வணங்கினான். பின் வந்த காரணத்தை வினாவினான். கதிரேசன் ரகுநாதனை வெளிநாட்டுக்கு அனுப்புமாறு கேட்டார். அதன்படி அடுத்த வாரம் பேரின்பநாயகம் ரகுநாதனை அனுப்பி விட்டான். இன்று மடத்திற்கு வந்த ரகுநாதன் கதிரேசனின் பாதங்களைப் பணிந்து, “ஐயா, நீங்கள் இல்லாவிட்டால் நான் வெளிநாட்டிற்குச் சென்றிருக்க மாட்டேன். இங்கிருந்தால் போரில் இறந்திருப்பேன். இந்த உதவியை மறக்க மாட்டேன்” என்று கண்கலங்கினான்.

“இது ஒரு உதவியா..? பணம், பொருள் கொடுப்பது தான் உதவி” என்றார் கதிரேசன். “இல்லை ஐயா அன்று உங்கள் வார்த்தைகளைப் பேரின்பநாயகம் வேதவாக்காகக் கருதியமையால் தான் என்னை அனுப்பினார். ஒருவர் திணையளவு மிகமிகச் சிறிய உதவி செய்தாலும் அதன் பயனை எண்ணிப் பார்த்தால் அது பனையை விடப் பெரியதாகும் ஐயா” என்று கண்கலங்கியதைப் பலர் பார்த்தனர்” என்றது குமரன் எலி.

**105. உதவி வரைத்தன்று உதவி  உதவி**

**செயப்பட்டார் சால்பின் வரைத்து**

“ஐயா, நான் இப்போது பெருங்கோடீஸ்வரனாக இருக்கிறேன். நீங்கள் செய்த உதவிக்குக் கைம்மாறாகக் கொடுக்கக் கூடிய பொருள் எதுவும் என்னிடம் இல்லை. அந்த உதவி அவ்வளவு பெரியது. நீங்கள் வசதியாக இருக்கிறீர்கள். நீங்கள் என்ன செய்யச் சொல்கிறீர்களோ அதைச் செய்கிறேன். அத்துடன் எனது நினைவாக இந்தத் தங்க மோதிரத்தை ஏற்க வேண்டும்” என்று கூறிக் கதிரேசன் எதிர்பாராத வேளையில் அவரது மோதிரவிரலில் தான் கொண்டு வந்த மோதிரத்தை அணிந்து விட்டான். கதிரேசன் திகைத்துப் போனார். அதைக் கழற்ற முயன்றார். அப்போது திருநாவுக்கரசு சொன்னார்,“அதை நீ கழற்றிக் கொடுக்கக் கூடாது. கடவுளுக்குப் பக்தன் கொடுக்கும் காணிக்கையாக அதை ஏர்” என்றார். கதிரேசனால் எதுவும் பேசமுடியவில்லை. “மடத்திற்கு எவ்வளவு கொடுத்தல் வேண்டும். பாடசாலைக்கும், கோவிலுக்கும் எவ்வளவு கொடுத்தல் வேண்டும்” என்று கேட்டான். “மகனே, உனது வசதிக்கேற்றபடி கொடு. உதவியென்பது அவரவரின் தகுதியைப் பொறுத்துத் தான் இருத்தல் வேண்டும். சாதாரணமான ஒரு தொழிலாளியிடம் பத்தாயிரம் ரூபா தா என்று கேட்கக் கூடாது. பெருந்தனவந்தனிடம் இவ்வளவு கொடு என்று சொல்லக்கூடாது. சில சமயம் நான் கூறும் தொகை குறைவாக இருக்கலாம். அது உனது தகுதிக்குப் பொருந்தாது” என்றார் கதிரேசன். அவரின் வார்த்தைகள் அவரின் தகுதியை வெளிப்படுத்தியது” என்றது குமரன் எலி.

“பெரியவன் பெரியவன் தான்” என்றது லட்சுமி எலி.

**106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு**

“ஐயா, நாம் துன்பப்பட்ட போது துணையாக இருந்தவர்களின் நட்பைப் போற்றல் வேண்டும். அத்துடன் மனதில் மாசற்றவரின் நட்பை ஒரு போதும் மறக்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். எனது மகன் வாழ்ந்த காலத்தில் பெரும் போர் நடைபெற்றது. அந்த நேரத்தில் இளைஞர்கள் பெருந்துன்பப்பட்டனர்.பலர் கைது செய்யப்பட்டனர். சிலர் கொல்லப்பட்டனர். அந்த நேரம் கடவுள் போல் உதவிய பேரின்பநாயகத்தையும், உங்களையும் நாம் உயிர் உள்ளவரை மறக்கமாட்டோம். நீங்கள் பெரியவர், பற்றில்லாதவர், யாருக்கும் கைம்மாறு கருதாது உதவி செய்பவர். அதனால் எனக்குச் செய்த உதவியைச் சிறு உதவியென்று நினைப்பீர்கள். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் அவ்வுதவி மலையை விடப் பெரியது” என்று தழுதழுத்த குரலில் ரகுநாதனின் தகப்பன் கூறினார். கதிரேசன் அதைக் கேட்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை” என்றது குமரன் எலி.

“பெரியவர்கள் அப்படித் தான்” என்றது லட்சுமி எலி.

**107. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமந் துடைத்தவர் நட்பு**

அன்று காலை சிவநாதன் மடத்தைக் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தான். அவனுக்கு உதவி செய்து கொண்டிருந்தார் யோகநாதன். கதிரேசன் வந்து சிவநாதனைக் கொண்டு தீய செயல்களைச் செய்விக்காதே என்று கூறியது கவலையளித்தது. ஏனோ தெரியவில்லை அன்று தீய எண்ணங்கள் தலை தூக்கி விட்டன. அவர் சிவநாதனுக்கு அருகில் வந்து சொன்னார், “தமக்குத் துன்பம் நேர்ந்த போது அதைப்போக்கியவரின் நட்பைப் பெரியவர்கள் தாம் எடுக்கும் பிறவிகள் தோறும் மறக்காமல் இருப்பர் என்று நூல்கள் கூறுகின்றன. எனக்குத் துன்பம் நேர்ந்த போது உதவிய உன்னை நான் துன்புறுத்தி விட்டேன். அதை மன்னித்துக் கொள்” என்று தழுதழுத்தார். அதற்கு சிவநாதன் சொன்னார், “வயதான காலத்தில் ஆசைப்பட்டாய் என்பதற்காக எனது சமய ஒழுக்கத்தை மீறி உனக்கு உதவி செய்தேன். நான் செய்யும் எந்தச் செயலையும் கதிரேசனுக்குத் தெரியாமல் செய்வதில்லை. அது பிழையானால் என்னை மன்னித்துக் கொள்” என்றான் சிவநாதன். “நான் இனி

அப்படியான விடயங்களைக் கேட்க மாட்டேன்" என்று யோகநாதன் அழுதார்" என்று கூறியது குமரன் எலி.

"யோகநாதன் நல்லவர். ஆனால் ஆசை யாரை விட்டது" என்றது லட்சுமி எலி.

**108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று**

"உருத்திரகுமாரனுக்கு சிவநாதனைப் பிடிக்காது. தான் ஆசிரியராக இருந்து ஊர் மக்களின் பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறேன். சிவநாதன் வைத்தியசாலையில் சிற்றூழியராகப் பணியாற்றியவன். அவனுக்கு இருக்கும் மதிப்பில் நூறில் ஒரு பங்கு கூட எனக்கில்லை. உனது பிள்ளையைக் கற்பிப்பவன் நான். அதற்காகவாவது என்னை மதிக்க வேண்டாமா? என்று முகுந்தன் என்ற பெற்றாரைக் கோபமாகக் கேட்டான். அதற்கு முகுந்தன் சொன்னான்,"ஐயா மதிப்பதென்றால் என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்? எனக்குப் புரியவில்லை. கண்டவுடன் காலில் விழுந்து வணங்குவதா மதிப்பு..? நான் எல்லோரையும் மதிக்கிறேன். அன்பாகப் பேசுகிறேன். இதற்கு மேல் என்ன செய்வதென்று சொல்லுங்கள். சிவநாதன் எல்லோருக்கும் உதவி செய்பவன். அதற்காக அவனை எல்லோரும் விழுந்து கும்பிடுகிறார்களா? ஒருவர் செய்த உதவியை மறப்பது தர்மமாகாது. தீமையை உடனே மறப்பது தான் தர்மம். அதைத் தான் ஊரவர்கள் செய்கிறார்கள்" என்றான் முகுந்தன். உள்ளதை உள்ளபடி கூறுபவன். அதனால் சில பிரச்சினைகளுக்குட்பட்டாலும் அதை அவன் கைவிட்டதில்லை" என்றது குமரன் எலி.

"உருத்திரகுமாரனை யார் மதிக்கிறார்கள். வகுப்பில் படிப்பிப்பதில்லை என்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பிள்ளைகளை வரும்படி கூறுவதாகவும் மக்கள் கதைக்கின்றனர். வாங்கிற சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டுமென்ற எண்ணமில்லாதவன் அவன்" என்றது லட்சுமி எலி

**109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன்று உள்ளக் கெடும்.**

"இன்று காலை உருத்திரகுமாரனுக்கும் சிவநாதனுக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டு விட்டது. கோபம் கொண்ட உருத்திரகுமாரன் சிவநாதனுக்கு நாலைந்து முறை அடித்து விட்டான். ஆனால் சிவநாதன் பேசாது இருந்த போதும் உருத்திரகுமாரன் மீண்டும் மீண்டும் அடித்தான். கூடிநின்றவர்கள் உருத்திரகுமாரனைப் பிடித்தனர். அப்போது சிவநாதன் சொன்னான், "நீ எனது பிள்ளைகளுக்குக் கற்பித்த ஆசிரியன். ஆசிரியன் என்பவன் பெற்றோரைப் போன்றவன். நீ அன்பில்லாது நடந்தாலும் நான் கோபப்பட்டு உன்னைத் தண்டிக்க மாட்டேன். ஆசிரியரைத் தண்டிப்பது பெற்றோர்களைத் தண்டிப்பது போன்றதாகும். உனது தந்தையிடம் நான் கடனாகப் பணம் பெற்றுள்ளேன். அறாவட்டி கொடுத்தாலும் எனது கஷ்டத்தை அப்பணம் தான் போக்கியது. அதனால் உன்னைப் பேசக்கூட என்னால் முடியவில்லை" என்று சிவநாதன் மனம் வருந்திக் கூறிய போதும் உருத்திரகுமாரன் மரம் போல நின்றானே தவிரக் கவலைப்படவேயில்லை" என்றது குமரன் எலி.

"மானமுள்ள மனிதன் தான் வெட்கப்படுவான். உருத்திரகுமாரனுக்கு எத்தனை பேர் அடித்திருப்பார்கள். தான் ஆசிரியன் என்றும் சிவநாதன் சிற்றூழியன் என்றும் கூறும் உருத்திரகுமாரன் சிவநாதன் அடித்தால் என்ன செய்வான்?" என்று கேட்டது லட்சுமி எலி.

**110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகர்க்கு.**

“சிவநாதனுக்கு உருத்திரகுமாரன் அடித்ததைக் கேள்விப்பட்டு ஆத்திரத்துடன் வந்த கதிரேசன் உருத்திரகுமாரனைக் கேட்டார், “நீயெல்லாம் ஓர் ஆசிரியர். ஆசிரியர் என்பவன் பொறுமையில் பூமா தேவியாகவும், அன்பில் தாயாகவும், கண்டிப்பில் தந்தையாகவும் இருந்து சமூகத்திற்கு வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். நீ அப்படி இருக்கிறாயா? ஒரு கேவலமான மிருகமாக நடந்து கொள்கிறாய். படித்த நீ இவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா..? சிவநாதன் உனக்கு எவ்வளவு உதவிகள் செய்திருப்பான். நீ குடித்து விட்டு வீதியால் வரும் போது விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் இருந்த போது என்னென்ன செய்தவனென்று உனது குடும்பத்தினரைக் கேள். ஒருவன் செய்த உதவிக்கு நன்றி செய்யாவிட்டாலும் பரவாயில்லை. அவனுக்குத் தீமை செய்யாதிருந்தாலே கடவுளின் அருள் கிடைக்கும். எந்தப் பழி பாவங்கள் செய்தவனுக்கும் தப்பிப்பிழைக்க வழியுண்டு. ஒருவர் செய்த உதவியை மறந்தவனுக்குக் கடவுளின் அருள் கூடக் கிடையாது என்று பெரியவர்கள் கூறியது உனக்குத் தெரியாதா..?” என்று கதிரேசன் சொல்ல உருத்திரகுமாரனுக்குக் கோபம் வந்தது. ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை” என்றது குமரன் எலி.

“வெளிக்காட்டியிருந்தால் ஊரவரிடம் வாங்கிக்கட்டியிருப்பார்” என்றது லட்சுமி எலி.

**நடுவுநிலைமை– 12**

**111. தகுதி யெனஒன்று நன்றே பகுதியால்**
**பாற்பட் டொழுகப் பெறின்.**

“கருணாகரன் மிகவும் வறியவன். சாதியில் குறைந்தவன்.எனினும் மிகவும் நல்லவன். பெரியவர்களை மதிப்பவன். அவன் கதிரேசனிடம் வந்து கேட்டான், “ஐயா, எனது தந்தையின் நினைவாக நான் அமாவாசையன்று மடத்தில் உணவு கொடுக்கப்போகிறேன். அன்று நீங்கள் மடத்தில் உண்ண வேண்டும். நீங்கள் ஒருவர் உண்டால் இந்தக் கிராமத்தவர்கள் முழுப்பேரும் உண்டதற்குச் சமம். எனது தந்தையின் ஆத்மாவும் நிம்மதியடையும்” என்றான். “நான் வருகின்றேன்” என்று மகிழ்வுடன் கூறினார் கதிரேசன். கருணாகரன் சென்ற பின் நடராசா என்ற பெரும் பிரமுகர் வந்து சொன்னார், “கதிரேசு இன்று அமாவாசை தந்தையின் நினைவாக கோவிலில் பெரிய ஒரு பூசை செய்யவுள்ளேன். ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கவுள்ளேன். மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கவுள்ளேன். நீங்கள் தான் வந்து அதை ஆரம்பித்து வைத்தல் வேண்டும்” என்றார். நடராசா பெரும் பணக்காரர் மட்டுமல்ல அவ்வூரில் அவரில்லாது எந்த நல்ல காரியமும் நடைபெறாது அது தெரிந்த கதிரேசன் கூறினார், “நடா, காலையில் கருணாகரன் வந்து தனது தந்தையின் நினைவாக மடத்தில் உணவு கொடுக்கப்போவதாகச் சொன்னான். நான் அங்கே செல்லல் வேண்டும். அங்கு செல்லாவிட்டால் நான் வாக்குத் தவறியவனாவேன். வேண்டுமானால் அவனது நிகழ்வு முடிய வருகிறேன். நீ நிகழ்வைத் தொடங்கி நடத்து” என்றார். கதிரேசன் அயலவர், நண்பர், பகைவர் என எந்தத்தரப்பினராக இருந்தாலும் சமமாக நடத்துபவர். யாரும் தன்னால் பாதிக்கப்படக் கூடாது, ஏமாற்றப்படக் கூடாது என்று நினைப்பவர். நடராசா கேட்டார், “கருணாகரனுக்கு வரமுடியவில்லை. கோவிலுக்குச் செல்கிறேன் என்று கூற முடியாதா? அதற்குக் கதிரேசன், “கடவுளின் காரியமானாலும் நடுவு நிலைமை தவறிச் செய்தால் பாவம் உண்டாகும். வறியவனான கருணாகரனின் மனதை நான் புண்படுத்த விரும்பவில்லை” என்று கதிரேசன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நடராசா சென்றுவிட்டார். பின் கதிரேசன் கருணாகரனின் நிகழ்வு முடிவடைந்ததும் கதிரேசன் சென்ற போது

நடராசா அவரை வரவேற்கவில்லை. அதற்குக் காரணம் கதிரேசன் கருணாகரனின் நிகழ்வுக்குச் சென்றமையால் பெரும்பாலான மக்களும் அங்கு சென்று விட்டனர்” என்றது குமரன் எலி.

“கதிரேசனைக் கோபிப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது” என்றது லட்சுமி எலி.

**112. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி**
**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.**

“கதிரேசனது மூத்த மகன் ஆரூரன் புகழ் பெற்ற வைத்தியன். நண்பர்களுடன் மடத்திற்கு வந்து இந்த ஊரில் வாழும் மக்களுக்கு வைத்திய பரிசோதனை செய்து மருந்து கொடுத்தார். இரத்த அழுத்தம், சலரோகம், அளவுக்கதிகமான கொழுப்புள்ளவர்கள், கண்ணில் நோய்யுள்ளவர்களை எல்லாம் பரிசோதித்து ஆகவேண்டியவற்றைச் செய்தார். நூறுபேருக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது. மக்கள் எல்லோரும் கதிரேசனைப் புகழ்ந்தார்கள். நமசிவாயகத்திற்குக் கண்ணில் புரை படர்ந்திருந்தது. அத்துடன் மூன்று பேருக்குப் புரை படர்ந்திருந்தது. மூன்று பேருக்கும் இலவசமாகச் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இனி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மடத்திற்கு வந்து நோயாளிகளைப் பரிசீலித்து மருந்து கொடுக்கப் போவதாக ஆரூரன் சொன்னார். அதைக் கேட்ட நமசிவாயகம் சொன்னார்,“நடுவு நிலையோடு வாழ்பவனின் செல்வம் மட்டுமல்ல குணமும் அவனுக்கு மட்டுமின்றி அவனது பரம்பரைக்கும் செல்லும். கதிரேசனின் குணம் அப்படியே அவரது மகனுக்கும் உண்டென்றது” குமரன் எலி.

“உண்மை தான். உருத்திரகுமாரனது குணம் அப்படியே அவனின் மகனுக்கும் இருக்கு என்று யோகநாதன் மடத்தில் சொன்னதாகவும் அதைக் கேள்விப்பட்ட உருத்திரகுமாரனும் மகனும் யோகநாதனுடன் சண்டைக்குப் போனதாகவும் சனம் கதைத்தது” என்றது லட்சுமி எலி.

**113. நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்.**

மடத்திற்கு அருகில் திருநாவுக்கரசுவிற்கு ஒரு காணி இருந்ததாம். திருநாவுக்கரசு முப்பது வருடங்களுக்கு முன்பு வெளிநாட்டிற்குச் சென்று விட்டது. இப்போ அந்தக் காணியை உருத்திரகுமாரன் தன் பெயரில் கள்ள உறுதி எழுதி அடைத்து விட்டானாம். தான் அக்காணியைத் திருநாவுக்கரசிடம் வாங்கி விட்டதாக ஊரில் கதை கட்டிவிட்டானாம். திருநாவுக்கரசு வந்து பார்த்து விட்டு நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். காணியை எழுதிய பிக்கிராசியாருக்கும், சாட்சிக் கையொப்பமிட்ட மார்க்கண்டுவுக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா உருத்திரகுமாரனால் கொடுக்கப்பட்டதாம். இப்ப மூன்று பேரையும் பொலிஸ் கைது செய்து விட்டது. உருத்திரகுமாரன் ஆசிரியர் வேலையில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளானாம். நன்மையே தந்தாலும் நடுவு நிலையில் இருந்து தவறுவதால் வருகின்ற செல்வத்தை வெறுத்து ஒதுக்குதல் வேண்டும். இல்லாவிட்டால் அதனால் பெரும் துன்பங்கள் பலவும் வருமென்று யோகநாதன் கூறியதைக் கேட்டேன்” என்றது குமரன் எலி.

“உருத்திரகுமாரனுக்கு எவ்வளவு சொத்திருக்கு. இது வேணுமே?” என்று சொன்னது லட்சுமி எலி.

**114. தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப் படும்.**

“தாயைச் சந்தையில் பார்த்தால் மகளை வீட்டில் வந்து பார்க்கத் தேவையில்லை என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. இவர் நல்லவரா கெட்டவரா என்பதை அறிய அவரின் வழிவந்தோரைப் பார்த்து அறிந்து கொள்ளலாம் என்று யோகநாதன் திருநாவுக்கரசுவிற்குச் சொன்னார். உருத்திரகுமாரனின் மகன் அரவிந்தன் ஊரில் சண்டியன். அவனுக்குக் கள்ளை வாங்கிக் கொடுத்து இன்னாரை அடி அல்லது மதிப்புக் குறைவாகப் பேசு என்று சொன்னால் அப்படியே செய்வான். போனவாரம் மடத்தில் பலர் இருந்தனர். அரவிந்தன் வந்து என்னைக் கேளாத கேள்விகளெல்லாம் கேட்டான். தூசண வார்த்தைகளால் ஏசினான். எண்பது வயது கடந்த அவன் என்னை அடிக்க வந்த போது ஊரவர் அவனைப் பேசினர். உடனே அவன் ஊரவரை வாயில் வந்தபடியெல்லாம் ஏசினான். இவற்றைப் பெற்றோர் கண்டித்தல் வேண்டும். பெற்றோரே மோசமாக நடந்தால் எப்படிக் கண்டிப்பது. அதனால் தகப்பனைப் போலவே பிள்ளையும் அடாவடித் தனங்களில் ஈடுபடுபவன். எனவே கவனமாக இருங்கள்’’ என்று யோகநாதன் கூறிய போது திருநாவுக்கரசு பயந்து போனார்” என்றது குமரன் எலி.

“தகப்பனைப் போலத்தான் பிள்ளைகள் இருக்கும் என்பதற்குக் கதிரேசனின் பிள்ளைகளும் உருத்திரகுமாரனின் பிள்ளைகளும் சாட்சி” என்றது லட்சுமி எலி.

**115. கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சகத்துக்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.**

“ஐயா, ஒருவருக்கு இன்பமும், துன்பமும் நன்மையும் தீமையும் வரத்தான் செய்யும். அது இயல்பு மட்டுமல்லக் கடவுளின் வரம். நன்மை வந்த போது மகிழாமலும், துன்பம் வந்த போது துவளாமலும் வாழவேண்டும். உலகநீதியை ஆராய்ந்து அதன்படி நடத்தல் வேண்டும். நல்லவற்றையே செய். தீயவற்றைச் செய்தால் அறத்தாலேயே தண்டிக்கப்படுவாய் என்று படித்து விட்டுப் பிள்ளைகளுக்கு அதைக் கற்பிக்கும் ஆசிரியர், படித்ததைக் கைவிட்டு விட்டுத் தீமைகளைச் செய்யலாமா..? இவன் எல்லாம் ஏன் படித்தான் என்று தெரியவில்லை என்று யோகநாதன் திருநாவுக்கரசுவிற்குக் கூறினார்” என்றது குமரன் எலி.

“படிக்கிறது தேவாரம். இடிக்கிறது சிவன் கோவில் என்பார்கள். அதைத் தான் உருத்திரகுமாரன் செய்கிறான்” என்றது லட்சுமி எலி.

**116. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்**
**நடுவுஒரீஇ அல்ல செயின்**

“மடத்திற்கு வந்த அதிபர் குணசீலன், மடத்தில் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்த உருத்திரகுமாரனின் அருகே வந்து சொன்னார், “உருத்திரகுமாரா, நீ ஓர் ஆசிரியன். அதற்கான பண்புகளைக் கைக்கொள்ளல் வேண்டும். உனது நடத்தையால் பாடசாலைக்கும் கெட்ட பெயர்

உண்டாகிறது. நீ படித்தனி. தவறு செய்யும் போது நான் இதற்கான தண்டனையை காலங்கடந்தாவது பெறுவேன் என்று அறியவில்லையா..? நீ கற்ற கல்வி உனக்கு அதைச் சொல்லவில்லையா..? தெரிந்தும் நீ தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்கிறாய். அவற்றிற்கான பலன் வரும் போது உன்னால் தாங்க முடியாது போகும். அதனால் இனியாவது தவறு செய்யாமல் வாழப்பார்" என்றது குமரன் எலி.

''உருத்திரகுமாரனாவது திருந்துவதாவது" என்றது லட்சுமி எலி.

**117. கெடுவாக வையாது உலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு**

"நமசிவாயகம் ஒரு காலத்தில் பெரும் பணக்காரனாகவும் ஏராளமான நிலபுலன்களுக்குச் சொந்தக்காரனாகவும் இருந்தவராம். அவற்றையெல்லாம் விற்று மடத்திற்கும், கோவிலுக்கும் கொடுத்த பின் இப்ப பரம ஏழையாகி விட்டார். ஆனால் ஊரில் உள்ள எவரும் ஏழை என்று அவரைக் கருதுவதில்லை. நாளை பாடசாலையின் பரிசளிப்பு விழா. பிரதம விருந்தினராகக் கல்வி அமைச்சர் கலந்து கொள்கிறார். கல்வி அமைச்சருக்குக் கொடுக்கும் அதேயளவு கௌரவம் நமசிவாயகத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கு. சென்ற வருடப் பரிசளிப்பு விழாவுக்கு விருந்தினராக வந்த கல்விப் பணிப்பாளர் வைத்திலிங்கம் மத்திய மகாவித்தியாலயத்தில் தானாம் கல்வி கற்றவர். அவர் விழாத் தொடங்கியதும் நமசிவாயகத்தின் கால்களில் விழுந்து வணங்கியவராம். பின்பு தனக்கு நமசிவாயகம் என்னென்ன உதவிகள் செய்தவர் என்று சொன்னவராம். படித்தவர்கள் பண்பாளர்களை மதிப்பார்கள், போற்றுவார்கள், துதிப்பார்கள். பண்பாளர்கள் வறுமைப்பட்ட போதும் அவர்களது மதிப்பு அணுவளவும்குறையாது" என்றது குமரன் எலி.

"ஊருக்குள்ளேயும் நமசிவாயகத்தை மதியாதவர் யார்?" என்று கேட்டது லட்சுமி எலி.

**118. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.**

"உருத்திரகுமாரனின் மகள் அகல்யாவிற்கு அயலூரில் திருமணம் பேசப்பட்டது. மாப்பிள்ளையின் தந்தை உருத்திரகுமாரனைப் பற்றி விசாரிப்பதற்காக உருத்திரகுமாரனது ஊருக்கு வந்தார். அவர் சிலரை விசாரித்த போது அவர்கள் உருத்திரகுமாரனைப் பற்றி மிகவும் மோசமாகச் சொன்னார்கள். மாப்பிள்ளையின் தந்தைக்கு கதிரேசனைத் தெரியும். அதனால் கதிரேசனைத் தேடி வந்து தான் வந்த விஷயத்தையும், ஊரவர் கூறியவற்றையும் கூறிக் கதிரேசனது அபிப்பிராயத்தைக் கேட்ட போது கதிரேசன் சொன்னார், "ஊரில் பலரை விசாரித்துவிட்டீர்கள். பிறகேன் என்னை விசாரிக்கிறீர்கள்" என்றார் கதிரேசன். கதிரேசு நீ நடுவு நிலைமை தவறாதவன். ஊரில் நான் கேட்டவர்கள் சொல்லும் போது அவர்களது முகத்தை அவதானித்தேன். அவை மிக்க கோபமுடையவையாக இருந்தன. நீ தராசைப் போன்றவன். தராசு இரும்பையும் பொன்னையும் சமமாக மதிப்பது. அதனால் நீ சொல்லு" என்றார். "தகப்பனைப் பற்றி நீ கேள்விப்பட்டதெல்லாம் உண்மை. ஆனால் அகல்யா தங்கமான பெண். அகல்யாவின் தாயின் பெற்றோர் மிக மிக நல்லவர்கள்.

குடும்பத்திற்கேற்ற பெண். நம்பிச் செய்யலாம்” என்றார். கதிரேசனது பேச்சை நம்பிய மாப்பிள்ளையின் தந்தை தனது மகனுக்கு அகல்யாவைச் செய்து வைத்தார்” என்றது குமரன் எலி.

“கலியாணத்தின் பின் அகல்யா தகப்பனின் வீட்டுக்கு வருவதை நிறுத்தி விட்டாளாம். அதனால் பெரும் துன்பப்படுகிறானாம் உருத்திரகுமாரன்” என்றது லட்சுமி எலி.

**119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.**

“திருமணம் முடிந்த பின்பு அகல்யா வீட்டுக்கு வராததால் உருத்திரகுமாரன் மாப்பிளை வீட்டுக்குச் சென்றார். அவரை யாரும் வரவேற்கவில்லை. வெகுநேரம் கழித்து வெளியே வந்த அகல்யா சொன்னாள், “உங்களை எனது தந்தை என்று சொல்ல நான் வெட்கப்படுகிறேன். இனிமேல் நீங்கள் இங்கு வரவேண்டாம். மாமா எனது கணவரின் சாதகத்தில் தோஷம் இருப்பதாகச் சோதிடர்கள் கூறினார்களாம். எத்தனையோ சம்பந்தங்கள் பேசியும் பொருந்தவில்லை. எனது சாதகம் பொருந்தியமையாலும், கதிரேசன் அவர்கள் சொன்னதாலுமே என்னைச் செய்தனர். நீங்கள் ஓர் ஆசிரியர். பிள்ளைகளை வழிநடத்த வேண்டியவர். சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டியவர். அப்படி இருக்கிறீர்களா..? அப்படி ஒருநாளாவது வாழ்ந்திருப்பீர்களா..? உள்ளத்தில் நெறி தவறாத எண்ணத்தையும், வார்த்தைகளிலும் மாறாத தன்மையும் கொண்ட கதிரேசனால் தான் எனக்கு இந்த வாழ்வு கிடைத்தது. அவர் எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லி எனது நம்பிக்கையைக் கெடுத்து விடாதே” என்றவர். அதனால் நீங்கள் இனிமேல் இங்கு வரவேண்டாம்” என்று கூறிவிட்டாளாம். அதை நமசிவாயகத்திற்கு உருத்திரகுமாரன் சொல்லிச் சொல்லி அழுத போது கேட்டேன்” என்றது குமரன் எலி.

“நடுவு நிலையில்லாமல் வாழ்ந்தால் இப்படிப் பல துன்பங்கள் வரும்” என்றது லட்சுமி எலி.

**120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்**

“பட்டணத்தில் பெரும் வர்த்தகரான பரஞ்சோதி இன்று ஊரில் கடை திறக்கிறாராம். இந்த ஊர்ச் சனம் முழுவதும் பரஞ்சோதியின் கடையில் தானாம் பொருட்களை வாங்குவார்கள். அவர்கள் சிரமப்படக்கூடாதென்பதற்காகப் பரஞ்சோதி இங்கு கடை திறக்கிறாராம். அதனால் ஊரவர் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள்” என்றது குமரன் எலி.

“இங்கு மூன்று கடைகள் இருக்கு. அப்படியிருந்தும் இவ்வூர்ச் சனம் பட்டணத்திற்குச் சென்று தானே பொருட்களைக் கொள்வனவு செய்யுது. அது ஏன்?” என்று கேட்டது லட்சுமி எலி.

“பரஞ்சோதி மிகமிக நல்ல மனிதராம். விலை கூட்டியோ, நிறைகுறைத்தோ, கலப்படம் செய்தோ பொருட்களை விற்கமாட்டாராம். ஏழைகளுக்குக் கடனும் கொடுப்பாராம். விவசாயிகளிடமிருந்து பொருட்களை நியாய விலைக்குக் கொள்வனவு செய்வாராம். “பிறர் பொருளையும் தம் பொருளாய் எண்ணி நடு நிலை வழுவாது நின்று வியாபாரம் செய்வது தான்

வியாபாரிகளுக்கு அழகு. பரஞ்சோதி நல்லவன், வல்லவன்,இரக்கமுள்ளவன்" என்று காலையில் கதிரேசன் கோவிலடியில் கூறியதைக் கேட்டேன்" என்றது குமரன் எலி.

"ஊரில் கடை வைத்திருப்போர் காலாவதியான பொருட்களையும், தரம் குறைந்த பொருட்களையும் தான் விற்கின்றனர். நான் கடையில் உள்ள உணவுப் பொருட்களை உண்டுள்ளேன்" என்றது லட்சுமி எலி.

**அடக்கம் உடைமை – 13**

**121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆர்இருள் உய்த்து விடும்**

"நமசிவாயகமும் கதிரேசனும் கோவிலில் நின்ற போது பரஞ்சோதி வந்து இருவரின் கால்களிலும் விழுந்து வணங்கினார். அதை எதிர்பாராத கதிரேசனும், நமசிவாயகமும் துடிதுடித்துப் போனார்கள்,"மகனே, கோவிலடியில் கடவுளைத் தவிர வேறு யாரையும் வணங்கக் கூடாது. அரசனாக இருந்தாலும் வணங்கக் கூடாது. அது தான் விதி. இனிமேல் அப்படிச் செய்யாதே" என்றார் கதிரேசன்."எனக்குத் தெரியாதையா. தவறாயின் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று பரஞ்சோதி சொன்னார். "பரஞ்சோதி மிகமிக நல்லவர். பெரியவர்களை மதிப்பவர். பெரும் பணக்காரன் என்றாலும் அடக்கமுள்ளவர். அதனால் தான் ஒரு சிறு கடையைத் தொடங்கி இன்று பல தொழிற்சாலைகளையே வைத்திருக்கிறார். இவரோடு போட்டி போட்டுச் செயற்பட்ட பரமநாதன், தந்தை தேடிய சொத்து முழுவதையும் அழித்து விட்டார். மக்கள் பரஞ்சோதியைத் தேவர்களில் ஒருவராக மதிக்கின்றனர்" என்று ஊர்ப் பாடசாலை அதிபர் கூறியதை நான் கேட்டேன்" என்றது குமரன் எலி.

**122. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு**

"அன்று பரஞ்சோதி ஊரில் உள்ள மக்களுக்கெல்லாம் மடத்தில் உணவளித்தார். வருடா வருடம் கடை திறந்த நாளில் கோவிலில் பூசையும் மடத்தில் உணவு வழங்கலும் நடைபெறும்" என்று கூறினார். "பரஞ்சோதி அடக்கமான மனிதர். ஆணவம், திமிர் என்பன துளி கூட இல்லை. அடக்கம் தான் அவரை உயரவைத்தது. ஒவ்வொரு மனிதனும் அடக்கமாக வாழ்ந்தால் மேன்மையடையலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு பரஞ்சோதி" என்று நமசிவாயகம் மக்களுக்குக் கூறிக்கொண்டிருந்தார்" என்றது குமரன் எலி.

**123. செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து**
**ஆற்றின் அடங்கப் பெறின்.**

"பரஞ்சோதியின் கடைத்திறப்பு விழாவுக்கு வந்த அனைவரும் பரஞ்சோதியின் அடக்கத்தைப் பற்றியே பேசினார்கள்" ஒருவர் அடக்கத்துடன் வாழ்வானேயானால் அவன் தான் பூமியில்

வாழ்பவர்களில் சிறந்தவன் எனப் பெரியவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவான். அதற்குச் சான்றாக இன்றைய நிகழ்வு விளங்குகிறது. ஊர்ப் பெரியவர்கள் எல்லோரும் இங்கு வந்துள்ளனர்" என்று கதிரேசன் பேசும் போது கூறினார்" என்றது குமரன் எலி.

"பரஞ்சோதி பல் வேறுவிதமான சமூகசேவைகள் செய்பவராம். யாரும் சென்று அவருடன் பேசலாமாம். எல்லோரையும் அன்புடன் வரவேற்று ஆசனத்தில் அமர்த்திச் சிற்றூண்டி வகைகளும் கொடுத்துத்தான் அனுப்புவார் என்று கோவிலடியில் பேசுவதைக் கேட்டேன்" என்றது லட்சுமி எலி.

**124. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையிலும் மாணப் பெரிது.**

"பாடசாலை மண்டபத்திற்கு மேல் அருகில் நின்ற பெரிய வேப்ப மரம் இரவு வீசிய புயற்காற்றால் சரிந்து விழுந்து விட்டது. மண்டபத்திற்குச் சரியான சேதம். பாடசாலை அதிபர் வந்து நமசிவாயகத்திற்குக் கூறிவிட்டுச் சென்றார். உடனே மக்களை அழைத்து மரத்தை வெட்டி அப்புறப்படுத்துமாறு நமசிவாயகம் சொன்னவுடன் மக்கள் சென்றுவிட்டனர். "அம் மண்டபத்தைத் திருத்த எப்படியும் மூன்று வருடங்களாவது செல்லும். அதனால் பிள்ளைகள் பாதிக்கப்படுவர். நாம் தற்காலிகமாக ஒரு மண்டபத்தை அமைத்துப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும். அதற்கு ஊரவரின் உதவியை தான் கோர வேண்டும். நமசிவாயகம் நாலைந்து பேரைக் கூட்டிச் செல்வோம்" என்றார் கதிரேசன். போவதானால் எல்லோரினதும் வீட்டுக்கும் செல்லல் வேண்டும். உருத்திரகுமாரனும் அவனது நண்பர்களும் பயனில்லாத கதைகளைக் கதைப்பார்கள். பெரியவர்கள் முன் எதைக் கதைக்க வேண்டும் என்று தெரியாதவர்கள். அத்துடன் அடக்கமில்லாதவர்கள். அவர்களை விலக்கி விடுவோம்" என்றார் நமசிவாயகம். "அது பெரும் பிரச்சினைகளை உருவாக்கும். முதலில் ஊரவர்களிடம் செல்வோம். பின் அவர்களிடம் செல்வோம். இப்போது பரஞ்சோதி ஊரவராகி விட்டார். அதனால் முதலில் அவரிடஞ் செல்வோம்" என்று கூறிய கதிரேசன் மக்களையும் அழைத்துக் கொண்டு பரஞ்சோதியின் வீட்டுக்குச் சென்றார். பரஞ்சோதி அவர்களை அன்புடன் வரவேற்றார். அதன் பின் சொன்னார், "பாடசாலை மண்டபத்தின் மீது மரம் விழுந்தமையால் அது சேதமடைந்து விட்டதாக மக்கள் சொன்னார்கள். நீங்கள் தற்காலிகமாக ஒரு மண்டபம் அமைக்கவுள்ளதாகவும் கேள்விப்பட்டேன். ஏன் தற்காலிகமாக அமைக்க வேண்டும். நான் நிரந்தரமாக ஒரு கட்டிடத்தை எனது தந்தையின் நினைவாகக் கட்டித் தருகின்றேன். சேதமடைந்த கட்டிடத்தை அரசாங்கம் திருத்தட்டும்" என்றார். சென்ற எல்லோரும் திகைத்து விட்டனர், "ஐயா, அடக்கமாக வாழ்க்கையை வாழும் ஒருவருடைய உயர்வும் மலையை விட உயர்ந்தது என்பார்கள். அதை உங்கள் மூலம் அறிந்து கொண்டோம்" என்று கதிரேசன் கண் கலங்கியபடி கூறியதாக மக்கள் கதைக்கிறார்கள்" என்றது குமரன் எலி.

"சாதாரண மாணவ்களே அடக்கமின்றி வாழும் போது பெரும்பணக்காரனான பரஞ்சோதியின் அடக்கம் மலையை விட உயர்ந்தது தான்" என்றது லட்சுமி எலி.

**125. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**

**செல்வர்க்கே செல்வம் தகைத்து.**

“பெயரும் புகழுக்காகவும் தனது தந்தையின் பெயரைப் பிரபலப்படுத்தவும் தான் பரஞ்சோதி மண்டபத்தைக் கட்டிக் கொடுக்கிறது. அதைப் புரிந்து கொள்ளாத கதிரேசனும் ஊரவரும் பரஞ்சோதியைப் புகழ்ந்து தள்ளுகிறார்கள்” என்று கோவிலடியில் உருத்திரகுமாரன் கூறியதைச் சிலர் கேட்டு அவனுடன் சண்டைக்குச் சென்றனர். சிலர் அடக்கமில்லாத விசரனுடன் கதைத்தால் எமக்குத்தான் தீமை வரும் என்று சொல்லிச் சென்றனர். சிலர் உருத்திரகுமாரன் சொல்வதை ஆமோதித்தனர். இதைக் கேள்விப்பட்ட பரஞ்சோதி கோவிலடியில் வந்து கதிரேசனைச் சந்தித்துச் சொன்னார்,“ஐயா, எனது தந்தையின் நினைவாக ஏராளமான நிகழ்வுகளை நான் செய்துள்ளேன். பாடசாலை மண்டபத்திற்கு எனது தந்தையின் பெயரைச் சூட்ட வேண்டாம். இந்த மண்டபத்தை நான் எனது தந்தையின் நினைவாகக் கட்டிக் கொடுக்கிறேன் என்று ஊரவர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியும். அது போதும்” என்றார். ஒரு சிறு மின்விளக்கைப் போட்டாலே பெயரை எழுதும் மக்களிடையே பரஞ்சோதி வித்தியாசமானவர். பணிவோடு வாழ்வது வாழ்பவருக்குப் பெரும் பெருமையைக் கொடுக்கும். ஆயினும் தனவந்தர்கள் பணிவோடு வாழ்ந்தால் அது அவர்களுக்கு மற்றொரு பெருஞ்செல்வம்” என்று நமசிவாயகம் கூறினார்” என்றது குமரன் எலி.

“கட்டிட வேலையைக் குழப்ப உருத்திரகுமாரன் செய்த சதிஉது. தன்னை விட மேலானவர் யாரும் இருக்கக் கூடாதென்று அவன் நினைக்கிறான்” என்றது லட்சுமி எலி.

**126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

“உருத்திரகுமாரனின் நண்பன் கஜேந்திரன் மது அருந்தி விட்டு கோவிலடியில் வந்து சொன்னான்,“இந்த ஊர்ச்சனம் எப்ப பரஞ்சோதியைக் கண்டது. இதுவரை காலமும் உருத்திரகுமாரனும் அவனது தந்தையும் தான் எல்லாருக்கும் உதவினவை. இப்ப பரஞ்சோதியைத் தூக்கிப் பிடிக்கினை. அவனுக்கு ஊரில் மதிப்பு இல்லை. மதிப்பைப் பெற இஞ்சை உள்ள சிலரை மயக்கி வைத்திருக்கிறான்” என்று கூறும் போது பற்குணம் சொன்னான், “கஜேந்திரா, கோவிலடியில் மதுவை அருந்தி விட்டுக் குழப்பம் விளைவிப்பது பாவம். பேசாமல் போ. அல்லது அமைதியாக இரு” என்றதும் கஜேந்திரனுக்குக் கோபம் வந்து விட்டது. பற்குணத்தை அடிக்கச் சொன்றான். பற்குணம் அவனது கையைப் பிடித்து முறுக்கி வைத்துக் கொண்டு சொன்னான், “உன்னை அடித்து முறித்துப் போடுவன். பெரியவை உனக்கும் வெறியா என்று கேட்பார்கள். கிடைத்தற்கரிய இந்த மானிடப்பிறப்பைக் கேவலப்படுத்தாதே. இந்தப் பிறப்பில் ஆமையானது தனது ஓட்டுக்குள்ளே உறுப்புக்களை ஒடுக்குவது போல, மனிதர்கள் தமது ஐம்பொறிகளையும் அடக்கி வாழ்ந்தார்களேயானால் எடுக்கவிருக்கும் ஏழு பிறப்புக்களிலும் சிறப்பாக வாழலாம். நீ முதலில் அடுத்தவரைக் குறை கூறுவதை நிறுத்தி விட்டு உன்னில் உள்ள குறைகளைத் திருத்து” என்று கூறினான்” என்றது குமரன் எலி. “பரஞ்சோதி ஊரிலும் பல சமூகசேவைகளைச் செய்வதாகத் தானே சனம் கதைக்குது” என்றது லட்சுமி எலி.

“குறை சொல்பவன் வாயில் வந்தவற்றையெல்லாம் சொல்வான். அவன் குடித்தமையால் என்ன பேசுகிறேன் என்று தெரியாமல் பேசியிருப்பான்” என்றது குமரன் எலி.

**127. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.**

“பற்குணம் சென்ற பின்பும் கஜேந்திரன் பரஞ்சோதியைப் பற்றியும், கதிரேசனைப் பற்றியும், நமசிவாயகத்தைப் பற்றியும் வாயில் வந்தபடி கதைத்துக் கொண்டிருந்தான். அப்போது கோவிலுக்கு வந்த காவல்துறை அதிகாரிகளும், ஊழியர்களும் வந்து கஜேந்திரனுக்குப் பின்னால் நின்றனர். அதைக் கஜேந்திரன் கவனிக்காது தூசண வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தான்,“கோவிலடியில் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசியதற்காக உன்னைக் கைது செய்கிறேன்” என்ற காவல்துறை அதிகாரி கஜேந்திரனுக்கு பலமாகப் பலமுறை அடித்து விட்டுச் சொன்னார்,“மனிதனுக்கு நாக்கால் தான் எல்லாத் துன்பங்களும் வருகின்றன. பேசும் போது ஆராய்ந்து பேசவேண்டும். பொது இடங்களிலும் வணக்கத்தலங்களிலும் பேசக்கூடாததூசண வார்த்தைகள் பேசக்கூடாது. நாவடக்கமில்லாதவர்கள் பல வழிகளாலும் துன்பப்படுவர்”என்று கூறிவிட்டுக் கஜேந்திரனை அழைத்துச் சென்றார். கோவிலடியில் பலர் நின்ற போதும் அதைத் தடுக்க யாரும் முன் வரவில்லை” என்றது குமரன் எலி.

“அவன் கூறிய சொற்களின் தன்மையை உணர்ந்தவர்கள் எப்படித் தடுப்பார்கள்” என்றது லட்சுமி எலி.

**128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றுஆகாது ஆகி விடும்.**

“கஜேந்திரன் தீயவனல்ல. யாராவது மதுவை வாங்கிக் கொடுத்து இதைச் செய்யென்றால் செய்வான். நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்கும் அறிவு அவனிடம் இல்லை. அவன் கோவிலில் பல தொண்டுகள் செய்துள்ளான். மடத்திற்கும் உதவிகள் செய்துள்ளான். ஆனால் உருத்திரகுமாரன் ஏவி விடப் பல தீயசெயல்களைச் செய்வதால் அவன் முன்பு செய்த நல்ல செயல்களின் பயன்களும் இல்லாமற் போய்விடுகிறது. எனக்குக் காவல்துறை அதிகாரியைத் தெரியும். அவரோடு கதைத்திருக்கலாம். கதைத்தால் அவனுக்கு மெய்தூர்ந்து விடும். மீண்டும் மீண்டும் உருத்திரகுமாரனிடம் வாங்கிக் குடித்து விட்டுத் தகாத செயல்களைச் செய்வான். தீய சொற்களின் தாக்கம் என்ன என்பதை அவன் உணர வேண்டும்” என்று பற்குணம் கூறினான் என்றது” குமரன் எலி.

“பற்குணம் சொன்னது சரி. தீயசொற்கள் எப்போதும் தீமையையே தரும் என்பதைக் கற்றவர்கள் கூட உணர்கிறார்களில்லை” என்றது லட்சுமி எலி.

**129. தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு**

“கஜேந்திரன் காவல்துறை அதிகாரியால் கைது செய்யப்பட்டான் என்பதை அறிந்த உருத்திரகுமாரன் கோவிலடிக்குப் பரபரப்புடன் வந்தான். காவல்துறை அதிகாரிக்கு அவன் மீது நல்ல அபிப்பிராயம் இல்லை. தற்செயலாகக் கஜேந்திரன் ஏவிவிட்டுத் தான் கலகஞ் செய்ததாகக் கூறினால் பெரும் பிரச்சினைகள் வருமெனப் பயந்தபடி பற்குணத்திற்குச் சொன்னான், “கஜேந்திரன் கூலிக்காரன். வேலைக்குச் செல்லாவிட்டால் அடுப்புக்குள் பூனை படுத்துவிடும்..” என்றும் சொல்லும் போது பற்கணம் சொன்னான், “எதையும் செய்யுமுன் அதனால் என்னென்ன பயன் வரும் என்று ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். ஒரு பெரிய நல்ல மனிதரைப் பற்றி பொது இடத்தில் நின்று வாய்க்கு வந்தபடி ஏசலாம். கோபமிருந்தால் அடிக்கலாம். அது குற்றமில்லை. பெரியவர்கள் தீயால் சுட்ட புண் மாறிவிடும். ஆனால் பேசக்கூடாத பேச்சுக்களால் இதயத்தில் பட்ட வலி ஒரு போதும் மாறாது என்று கூறியிருக்கின்றனர். இது படித்த உனக்குத் தெரியாதா..? கஜேந்திரன் மழைக்குக் கூடப் பாடசாலையில் ஒதுங்காதவன். அவனைப் பயன்படுத்திக் கெட்ட செயல்களைச் செய்விக்க உனக்கு எப்படி மனம் வந்தது. இதைத் தானா நீ கற்ற கல்வி சொல்கிறது” என்று கேட்டான். உருத்திரகுமாரன் எதுவும் பேசவில்லை” என்றது குமரன் எலி.

“அவர் எப்படிப் பேசுவார். அவரால் தானே ஊர் கெட்டுச் சீரழிகிறது” என்றது லட்சுமி எலி.

**130. கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து**

“உனக்கு எதைச் சொன்னாலும் ஏறாது. கற்றவன் கல்லாதவர்களின் அறிவை விருத்தி செய்தல் வேண்டும். அவர்கள் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்துதல் வேண்டும். ஆனால் நீ கல்லாதவர்களைப் பயன்படுத்தி உன்னை வளர்க்கப்பார்க்கிறாய். அது நடவாது என்று கற்ற உனக்கு ஏன் புரியவில்லை. மனதில் உண்டாகும் கோபதாபங்களை, கெட்ட உணர்ச்சிகளை அடக்கிக் கல்வியறிவில் மேம்பட்டவனாக விளங்கும் ஒழுக்கமுள்ளவனைத் தருமதேவதை தேடிச் சென்று அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாம். ஏனென்றால் ஒழுக்கமுள்ள அவன் தரும தேவதை கொடுப்பதையெல்லாம் பாகுபாடின்றிப் பகிர்ந்து கொடுப்பானாம். அப்படி வாழ்கின்ற பரஞ்சோதி, கதிரேசன், நமசிவாயகத்தைப் போன்றவர்களைப் பார்த்து நீ கோபப்படுகிறாய், பொறாமைப்படுகிறாய். ஆற்றாமையால் அவர்களைக் கெடுக்கக் குறுக்கு வழிகளை நாடுகிறாய். இதனால் உனக்குத் தான் துன்பங்கள் வரும் என்பதை ஏன் உணர்கிறாயில்லை?” என்று பற்குணம் கேட்ட போது உருத்திரகுமாரன் எதுவும் பேசாமல் சென்று கொண்டிருந்தான்” என்றது குமரன் எலி.

“எப்படி அவன் பேசுவான். பற்குணம் கேட்ட கேள்விகளுக்கு அவனால் பதில் கூற முடியுமா? பல்வேறு விதமான கேடுகள் வந்தும் அவன் திருந்துவதாக இல்லை” என்றது லட்சுமி எலி.

**ஒழுக்கம் உடைமை– 14**

**131. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

“கோவிலடியில் மார்க்கண்டனைப் பற்றித் தான் ஒரே கதை. ஊருக்குள் தான் சுவாமி என்று சொல்லிக் கொண்டு மார்க்கண்டன் வீடு வீடாகச் செல்வது வழக்கம் தானே. ஒரு வீட்டில் யாருமில்லையாம். ஒரு பெண் மட்டும் தானாம் இருந்தவள். அவள் திடீரென்று கத்திச் சத்தம் போட அயல் வீட்டுக்காரர் வந்திட்டினையாம். அவள் மார்க்கண்டன் தனது கையைப் பிடித்தான் என்று கூற ஊர்ச்சனம் மார்க்கண்டனை அடித்து விட்டுக் கோவிலடியில் கொண்டு வந்து நமசிவாயகத்திடம் ஒப்படைத்திருக்கு. நமசிவாயகத்திற்குச் சரியான கோபம்,“குடும்ப உறவில் ஆசைப்படும் நீ ஏன் துறவறம் பூண்டாய். உனது மனைவியோடு வாழ்ந்திருக்கலாம் தானே” என்று கூற மார்க்கண்டன் தான் அப்பெண்ணின் கையைப் பிடிக்கவில்லை என்று சத்தியம் செய்தான். அதை நமசிவாயகம் நம்பவில்லை,“நீ பிடித்தாயோ இல்லையோ என்பது வாதமல்ல. நீ மக்களிடம் அடி வாங்கியிருக்கிறாய். ஒழக்கம் தான் ஒரு மனிதனுக்கு மேன்மை, புகழ் என்பவற்றைத் தருவது. அதனால் மனிதர்கள் ஒழுக்கத்தை உயிரிலும் மேலானதாகக் கருதுதல் வேண்டும். கால் காசுக்குப் போன மானம் கோடிகொடுத்தாலும் வராது என்பார்கள். அதனால் இனிமேல் நீ ஊருக்குள்ச் செல்லாதே. நான் நீ சொல்வதை நம்பினாலும் ஊர் நம்பாது. அதனால் அவதானமாக இரு என்று கூறினார்” என்றது குமரன் எலி.

“உவர் முன்பும் பெண்களுடன் சேட்டைவிட்டவரென்று மக்கள் பேசினவர்கள். இவர் அகப்பட்டதால் பொய்ச் சத்தியம் பண்ணியிருப்பர்” என்றது லட்சுமி எலி.

**132. பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்**

**தேரினும் அஃதே துணை.**

“நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நான் கூறியவற்றை நீங்கள் நம்பவில்லை” என்று மார்க்கண்டன் கூறும் போது நமசிவாயகம் சொன்னார்,“நான் என்ன அறக்கடவுளா? நான் நம்பினால் ஊரவர்கள் நம்புவார்களா? அறங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால், ஒழுக்கத்தை விட மேம்பட்டது எதுவுமில்லை என்று கூறுவது தெரியவரும். அதனால் தான் பெரியவர்கள் ஒழுக்கத்தைத் தமது உயிராகக் கருதி காத்து வருகின்றனர். ஒழுக்கம் தான் மனிதனை முன்னேற்றுவது, மதிக்கச் செய்வது, நம்பச் செய்வது. அதை விட்டு விட்டு வாய்ச் சொல்லையும் சத்தியத்தையும் யாரும் நம்பமாட்டார்கள். குறிப்பாக நான் நம்பமாட்டேன்” என்று நமசிவாயகம் கூறிய போது மார்க்கண்டன் விம்மி விம்மி அழுதான். “மார்க்கண்டு நீ அழுவதால் பயனில்லை. இனிமேல் இப்படியான ஒழுக்கக் கேடுகள் வராமல் பார். இனி இப்படி ஏதாவது குற்றங்கண்டால் உன்னை மடத்திற்கு வரவிடமாட்டோம்” என்று நமசிவாயகம் கூறினார்” என்றது குமரன் எலி.

“அவர் எதற்கெடுத்தாலும் அழுவார், மன்னிப்புக் கேட்பார், சத்தியம் பண்ணுவார்” என்றது லட்சுமி எலி.

133. **ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்.**

“மார்க்கண்டு, ஒவ்வொரு வரும் தம் குடும்பத்திற்காக எப்பாடுபட்டாவது ஒழுக்கத்தைக் காப்பாற்ற வேண்டும். ஒருவனது வாழ்க்கையைக் கொண்டு தான் அவனது குடும்ப ஒழுக்கம் கவனிக்கப்படுகிறது. நீ ஒழுக்கம் தவறி வாழ்ந்தால் உனது குல ஒழுக்கம் அதுவென்று ஊரவர் கருதுவர். அதனால் உனது பிள்ளைகளின் வாழ்வு சீரழிந்து விடும். ஒழுக்கமுள்ளவன் தான் உயர்ந்த குடியில் பிறந்தவன் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். அதனால் மிகமிகக் கவனமாக வாழ். ஒரு முறை ஒழுக்கம் தவறினால் பின் அதுவே நிரந்தர ஒழுக்கமாகி விடும்” என்று நமசிவாயகம் கூறியபோது,“நான் இனிமேல் ஒழுக்கம் தவறி நடக்கமாட்டேன். இது சத்தியம் என்று மார்க்கண்டன் கூறும் போது நமசிவாயகம் கோபத்துடன் கூறினார், ‘‘ஒழுக்கமுள்ளவன் சத்தியம் பண்ணான். அவனது வாழ்வு பூரணமானது, புனிதமானது. இழிந்தவர்கள் தான் எதற்கெடுத்தாலும் சத்தியம் செய்வர்” என்று நமசிவாயகம் கூற மார்க்கண்டன் திகைத்துப் போனான்” என்றது குமரன் எலி.

“உருத்திரகுமாரும் அடிக்கடி சத்தியம் செய்பவர். ஆனால் ஊரவர் நம்புவதில்லை” என்றது லட்சுமி எலி.

134. **மறுப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.**

“கஜேந்திரனைத் தேடி உருத்திரகுமாரன் மடத்திற்கு வந்தான். அப்போது கஜேந்திரன் சமையற்காரன் சுப்பிரமணியத்துடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்தான், “நீ உனக்கு விரும்பியவர்களுக்கு மிகவும் சுவையாகச் சமைப்பாய். உனக்கு வேண்டாதவர்களின் சோற்றை அடிப்பிடிக்க வைப்பாய். நேற்று உருத்திரகுமாரன் வாத்தியார் தாயின் நினைவாக கொடுத்த உணவை மனிதன் உண்பானே? இப்படி ஏன் செய்கிறாய்” என்று கஜேந்திரன் கேட்கச் சுப்பிரமணியம் சொன்னான், “நேற்றுச் சாப்பிட்ட எவரும் குறை சொல்லவில்லை” என்று சொல்லும் போது கஜேந்திரன் அவனைத் தள்ளினான். அருகில் இருந்த நமசிவாயகத்திற்குக் கடுமையான கோபம் வந்தது. அந்த வேளையில் தான் உருத்திரகுமாரன் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் நமசிவாயகத்தின் கோபம் உருத்திரகுமாரன் மீது திருந்தியது, “திட்டமிட்டுச் செய்து விட்டு வேடிக்கை பார்க்க வருகிறாயா..? நீயெல்லாம் ஒரு மனிதனா..? நேற்றுச் சோறு அடிப்பிடிக்கவில்லை. அப்படிப்பிடித்திருந்தாலும் நேற்றே

சொல்லியிருத்தல் வேண்டும். மனித நடத்தைக்கு அப்பாற்பட்ட செயல்களைத் தைரியமாகச் செய்கிறாய். கற்றவன் கற்றதை மறந்தால் தேடிக் கற்கலாம். பிராமணன் வேதத்தை மறந்தால் மீண்டும் கற்கலாம். ஆனால் ஒழுக்கமில்லாமல் வாழ்ந்தால் எவற்றாலும் அதைச் சரி செய்ய முடியாது. நீ கற்றதை மறக்கவில்லை. வேண்டுமென்றே திட்டமிட்டுத் தீயதைச் செய்கிறாய். அது உன்னைப் பாதிக்கும்" என்று சொன்னார். உருத்திரகுமாரன் எதுவும் பேசவில்லை" என்றது குமரன் எலி.

"உருத்திரகுமாரனால் ஊருக்குப் பெரும் துன்பம்" என்றது லட்சுமி எலி.

**135. அழுக்காறு உடையார்கண் ஆக்கம்போன்று இல்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு.**

"பொறாமை கொண்டவனின் செல்வம் நிலைக்காது. அது போல ஒழுக்கமில்லாதவனின் உயர்வும் நிலைக்காது. இல்லை உயர்வு கிடைக்காது. நீ ஆசிரியராக முப்பது வருடங்கள் கடமையாற்றுகிறாய். உன்னுடன் கற்ற சிவநேசன் அதிபராகிச் சிறந்த சேவை செய்ததால் கல்விப் பணியாளராக உயர்வு பெற்றுள்ளார். இன்னும் பல உயர்வுகள் அவருக்குக் கிடைக்கும். ஏனென்றால் அவர் ஒழுக்க சீலர். கடமையை ஒழுங்காகச் செய்பவர். அதனால் மேலதிகாரிகளின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர். நீ ஒழுக்கமில்லாது வாழ்வால் உனது மேலதிகாரிகள் உன்னை வெறுக்கின்றனர். இது தெரிந்தும் மாறுகிறாயில்லையே" என்று பற்குணம் சொன்னான்" என்றது குமரன் எலி.

"அதற்கு உருத்திரகுமாரன் எதுவும் சொல்லவில்லையா..? என்று கேட்டது லட்சுமி எலி.

"ஏதாவது சொன்னால் கூடியிருந்தவர்கள் பலவற்றைச் சொல்வார்கள்" என்று கஜேந்திரனுக்குக் கூறிக்கொண்டு சென்றான் உருத்திரகுமாரன்" என்றது குமரன் எலி.

**136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**
**ஏதம் படுபாக்கு அறிந்து.**

"இன்றைக்குக் காலைப் பூசைக்கு பற்குணமும் நவராசாவும் வந்தவை. பற்குணம் நல்ல அழகன். பட்டதாரி. ஒழுக்கமிக்கவன். அவனது நண்பன் நவராசா. அவனும் பட்டதாரி. ஒழுக்கமுள்ளவன். காலைப் பூசைக்குத் தினமும் இருவரும் வருவார்கள். மேற்சட்டையைக் கழற்றி விட்டே அவர்கள் இருவரும் சுவாமியை வணங்குவார்கள். வரதனின் மனைவி சில நாட்களாகக் காலைப் பூசைக்கு அலங்காரம் செய்து வருவாள். வரதன் விநோதினியைத் திருமணம் செய்து மூன்று ஆண்டுகள் கழிந்தும் பிள்ளைகள் இல்லை. வரதன் கணனிப் பிரிவில் வேலை செய்பவன். கணனியில் புதுபுதுக் கண்டுபிடிப்புக்களை கண்டுபிடிக்க விரும்புபவன். அதனால் இரவு பகலாகக் கணனியோடு இருப்பானாம். இது விநோதினிக்குப் பிடிப்பதில்லை. எனினும் வெளியே காட்டிக் கொள்வதில்லை. அன்று கோவிலுக்கு வந்த விநோதினி 'பற்குணம்' என்று அழைத்தாள். அதை எதிர்பாராத பற்குணம் கேளாதது போலச் சென்றுவிட்டான். பின் நவராசாவுக்குச் சொன்னான். வரதன் எனது இனத்தவன். அதனால் அவனது வீட்டுக்குச் சென்றால் விநோதினி தேவையில்லாத கதைகளைக் கதைப்பாள். மோகம் ததும்பச் சிரிப்பாள். காமக்கதைகளைக் கதைப்பாள். அதனால் வீட்டுக்குச் செல்வதை விட்டு விட்டேன். இப்போ கோவிலுக்கு வருகிறாள். பெரும் பிரச்சினையாக இருக்கு. ஒழுக்கம் தவறுவதால் பல குற்றங்கள் ஏற்படும் என்று தெரிந்தும் இவ்வாறு நடக்கிறாள். நான் மனவலிமையுள்ளவன், ஒழுக்கத்தை உயிராக நினைப்பவன் என்றுமே தவறு செய்யமாட்டேன் என்று தெரிந்தும் தொல்லை கொடுக்கிறாள் என்று கவலைப்பட்டான் பற்குணம்" என்றது குமரன் எலி.

"சிலரின் இயல்பை மாற்ற முடியாது" என்றது லட்சுமி எலி.

**137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**

எய்துவர் எய்தாப் பழி.

“ஒரு கன்னிப் பெண் விரும்புவது இயல்பு. ஆனால் திருமணமான பெண் அந்நிய ஆடவனை ஏறிட்டு கூடப் பார்க்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்லியுள்ளனர். படித்த அவளுக்கு இவைகளெல்லாம் புரியாதா..? ஒழுக்கம் உயிரை விட மேலானது. ஒழுக்கத்தின் மூலம் தான் ஒருவர் மேன்மை அடைய முடியும். ஒழுக்கம் தவறினால் பழி பாவம் குற்றம் என்பவை ஏற்படுத்தும். என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அத்துடன் மனக்குழப்பமல்லவா உண்டாகிறது. நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்த நான் இப்போ அவற்றை இழந்து துன்பப்படுகின்றேன். இவளிடமிருந்து தப்ப வேண்டுமானால் இவளைக் காணாதிருத்தல் வேண்டும். எனத மூத்த சகோதரி சாரதா அயலூரில் இருக்கிறாள். அங்கு சென்று சில காலம் வாழ விரும்புகிறேன்” என்று மிகுந்த கவலையோடு நவராசாவுக்கச் சொன்னான்” என்றது குமரன் எலி.

“சில பெண்களின் இயல்பு அது. தனபாலசிங்கத்தின் மகள் திருமகள். இன்னும் திருமணமாகவில்லை. பட்டதாரி. நல்ல வேலை செய்கிறாள். தகப்பன் மிகவும் நல்லவர். அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். அவர் இறந்து விட்டார். இப்போ திருமகளின் விட்டில் பல ஆண்கள் கூடியிருப்பதாகக் கதைக்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

138. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

“காலையில் பற்குணத்தைத் தேடிக் கோவிலுக்கு வந்த நமசிவாயகம் நவராசாவைக் கேட்டான். “தினமும் காலையில் பூசைக்கு வரும் பற்குணம் இன்று ஏன் வரவில்லை? நீ தனியே வந்திருக்கிறாய். அவன் எங்கே?” என்று கேட்க நவராசா தடுமாறினான். ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்ட அவன்,“சகோதரியின் வீட்டுக்குச் செல்வதாகச் சொன்னவன். சென்றிருக்கலாம்” என்றான். காலைப் பூசை முடிந்து சனங்களெல்லாம் சென்று விட்டனர். நவராசா சென்று நமசிவாயகம் தேடியதாகச் சொன்னதும் பற்குணம் கோவிலடிக்கு வந்து நமசிவாயகத்தைச் சந்தித்துச் சொன்னான்,“நேற்று மாலை சகோதரியின் வீட்டுக்குச் சென்றேன். நீங்கள் தேடியதாக நவராசா சொன்னான்” என்று கூறும் போது நமசிவாயகம் சொன்னார்,“நல்லொழுக்கம் இன்பமான வாழ்விற்கு விதை என்று சொல்வார்கள். தீயொழுக்கம் என்றும் துன்பத்தையே தரும். பரஞ்சோதியை உனக்குத் தெரியும் தானே. பெரிய கோடீஸ்வரர். மிகவும் நல்ல மனிதர். அவர் தனது ஒரே மகளான தர்மினியை உனக்குத் திருமணம் செய்து தரவிரும்புகிறார். உனக்கு விருப்பமானால் சொல்லு நான் உனது பெற்றோரைக் கேட்கிறேன். உனது தந்தை பாவம். இன்னும் எவ்வளவு நாட்களுக்குக் கூலி வேலை செய்யப்போகிறார்” என்றார். அதற்குப் பற்குணம் அப்பாவையும், அம்மாவையும் கேளுங்கோ” என்று கூறினான்” என்று சொன்னது குமரன் எலி.

“நவராசாவும் பற்குணமும் அருமையான பிள்ளைகள் என்று எல்லோரும் கதைப்பதை நான் கேட்டிருக்கிறேன்” என்றது லட்சுமி எலி.

139. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

‘‘அன்று மடத்திற்கு உணவருந்த வந்திருந்தார் பற்குணத்தின் தந்தை கந்தவனம். கந்தவனத்தைத் தனியான ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்ற நமசிவாயகம் சொன்னார், “உனது மகனை, தனது மகளுக்குத் திருமணம் செய்து வைக்க பரஞ்சோதி விரும்புகிறார். உனது மகனுக்கு விருப்பம். நீ விரும்பினால் திருமணத்தை உடனே செய்யலாம் என்று நமசிவாயகம் கூறும் போது கந்தவனம் சொன்னார், “ஐயா, நான் கனவு காணவில்லையே. ஒழுக்கத்தைப் போற்றி வாழ்பவர்கள்

பொய் சொல்லமாட்டார்கள், ஏமாற்றமாட்டார்கள், மறந்துங்கூடத் தீயசொற்களைப் பேசமாட்டார்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீங்கள் கேலி செய்யவில்லையே?" என்று கந்தவனம் பதறினான். "கந்தவனம், ஒழுக்கமாக வாழ்பவன் மேன்மையடைவான் என்பதற்கு உனது மகன் உதாரணமாவான். நான் ஏன் உன்னைக் கேலி செய்யப்போகிறேன். விருப்பத்தைச் சொல்" என்றார். அதற்குக் கந்தவனம், "ஐயா, நீங்கள் சொல்வதை என்னால் ஏற்காது விட முடியுமே? நீங்கள் தானைய்யா இவ்வூரின் குல தெய்வம். எனக்கு நல்ல விருப்பம்" என்று கந்தவனம் கண்ணீர் மல்கக் கூறினார்" என்றது குமரன் எலி.

"பரஞ்சோதி பெரும் பணக்காரன். குணவான்.பொருத்தமான மாப்பிளை" என்றது லட:சுமி எலி.

**140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

"பரஞ்சோதியின் மகளைப் பற்குணம் திருமணம் செய்யப்போகிறானாம் என்ற செய்தி காட்டுத் தீ போல ஊரெங்கும் பரவியது. இதையறிந்த உருத்திரகுமாரனின் மனம் புழுவாகத் துடித்தது. கந்தவனம் ஊரில் கூலி வேலை செய்பவர். அவருக்கு இப்படியொரு வாழ்வா. எனது மகன் பொறியியலாளன். நான் பேசிச் செல்லும் திருமணங்கள் குழம்புகின்றன என்று கஜேந்திரனுக்குக் கூறியபடி நமசிவாயகத்திடம் வந்தான் உருத்திரகுமாரன். "பற்குணத்திற்கு நீங்கள் திருமணத்தை ஒழுங்கு செய்ததாக அறிந்தேன். எனது மகனுக்கு நல்லதோர் இடம் பாருங்கள்" என்று கூறும் போது நமசிவாயகம் சொன்னார்,"ஊர் மக்களோடு கலகலப்பாகப் பேசி இன்பமாக வாழும் முறையைக் கற்காதவர்கள், பல சிறந்த நூல்களைக் கற்றுப் பெரும் பதவிகளில் இருந்தாலும் யாரும் மதிக்க மாட்டார்கள். கந்தவனமும் பற்குணமும் ஒழுக்க சீலர்கள். மறந்துங்கூட சுடு சொற்களைப் பேசாதவர்கள். அதனால் பரஞ்சோதி என்னைத் தேடி வந்தது. நான் ஓர் இணைப்பாளரே தவிரத் தரகர் அல்ல. பரஞ்சோதியைப் போல யாராவது தேடி வந்தால் சொல்கிறேன்" என்று நமசிவாயகம் சொல்ல மிக்க துயரத்தோடு அதைக் கேட்டுக்கொண்டு நின்றார் உருத்திரகுமாரன்" என்றது குமரன் எலி.

"உவரை யார் தேடி வரப் போயினை" என்றது லட்சுமி எலி.

**பிறன்இல் விழையாமை– 15**

**141. பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல்.**

"காலையில் இரண்டு தரம் உன்னைத் தேடி வரதன் வந்தவர்" என்று கூறிச் சிரித்தான் நவராசா. "நேற்று நான் அலுவலகத்தால் வரும் போது வரதனை வழியில் சந்தித்தனான். அவனது மனைவி விநோதினி தனது சிநேகிதியின் மகளின் பிறந்த நாளுக்குப் போகப்போகிறாளாம். தான் அலுவலக விடயமாக அயலூருக்குச் செல்ல இருப்பதால் என்னை அவளை அழைத்துச் செல்லட்டாம். பாவம் வரதன். அவனை அவள் மயக்கி வைத்திருக்கிறாள். அவள் சொல்வதெல்லாவற்றையும் இவன் நம்புகிறான். அவளின் போக்கு முற்றாகப் பிழை. கண்ட நேரங்களில் சிரிப்பதும், இரட்டை அர்த்தத்தில் கதைப்பதையும் கேட்க முடியவில்லை. பிறருக்கு உரியவளாகிய மனைவியை விரும்பி அவளோடு உறவு கொள்ளும் கீழ்த்தரமான அறியாமை, ஒழுக்கமாக வாழ்பவரிடம் இருக்காது என்பதை உணர்கிறாள் இல்லை. அவளைக் கண்டால் வயிற்றைப் புரட்டுகிறது" என்று பற்குணம் மிகுந்த கவலையோடு நவராசாவுக்குக் கூறியதைக் கேட்கக் கவலையாக இருந்தது" என்றது குமரன் எலி.

"ஒழுக்கமில்லாதவர்களானால் அறத்தின் பொருளை உணராது கூடிக்குலாவுவர். பற்குணம் கடைசிவரையும் ஒழுக்கம் தவறமாட்டான்" என்றது லட்சுமி எலி.

**142. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.**

“பிறன் மனைவியை விரும்பி, அவனது வீட்டு வாசலிலே நிற்பவன், அனைத்து பாவங்களையும் செய்கின்றவனை விட மிகக் கொடிய பாவியாவான்’’ என்று அறநூல்கள் கூறுகின்றன. மார்க்கண்டன் அயலூரில் வசிக்கும் தாமோதரனின் மனைவி மேல் ஆசைப்பட்டுத்தான் அவளது கையைப் பிடிக்க அவள் கத்த ஊரவர்கள் வந்து அடித்துள்ளனர். இது ஊர்முழுக்கத் தெரியும். இப்போ ஊர்ப் பெண்கள் இவனைக் கண்டதும் மறைந்து விடுகின்றனர். தனது மனைவியோடு கூடிச் சந்தோசமாக வாழ்வதை விட்டு விட்டு ஏன் அவன் பிற பெண்கள் மீது மோகங்கொண்டு அலைகிறானோ தெரியவில்லை” என்று பற்குணம் நவராசாவுக்குச் சொல்ல, நவராசா “வா கேட்டுப்பார்ப்போம்” என்று கூற எனக்குச் சிரிப்பு வந்தது. இருவரும் நகைச்சுவையாகப் பேசுவார்கள். அவர்களின் பேச்சைக் கேட்கலாம்” என்றது குமரன் எலி.

“வேடிக்கை தான்” என்றது லட்சுமி எலி.

**143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்துஒழுகு வார்.**

“நவராசா, வரதன் எனது இனத்தவன் மட்டுமல்ல எனது நண்பனும் கூட. இது உனக்குத் தெரியும். அவன் என்னை முழுமையாக நம்பியதால் தான் தனது மனைவியை அவள் செல்லவிருக்கும் நிகழ்வுக்கு என்னை அழைத்துச் செல்லச் சொன்னான். அவளை அழைத்துச் செல்ல முடியுமா..? கோவிலடியிலேயே கண்மூடித்தனமாகக் கதைப்பவள். வாகனத்தில் தனிமையாகச் செல்லும் போது எப்படிப் பழகுவாள் என்பதை நினைக்க உடல் எல்லாம் பற்றி எரிகிறது. தன்னை நம்புகின்றவனின் மனைவியை விரும்பித் தவறு செய்து வாழ்பவன் உயிரோடு இருந்தாலும் இறந்தவனே யாவான். வரதன் நல்லவன். என்னை முழுமையாக நம்பியவன். அதனால் தான் காலையில் என்னைத் தேடித் திரிந்திருக்கிறான். எனது நண்பர்கள் பலரிடம் விசாரித்திருக்கிறான். அவர்கள் போன்பண்ணிச் சொன்னார்கள். அதனால் தான் நான் மறைந்திருக்கிறேன்” என்று பற்குணம் நவராசாவுக்குக் கூறியதை நான் கேட்டேன்” என்றது குமரன் எலி.

“சில பெண்கள் தமது கணவன்மார்களைத் தமது கைக்குள் வைத்துக் கொண்டு தமது காரியம் பார்க்கிறார்கள். கோவிலுக்குக் கும்பிட வரும் பெண்களின் கதை பெரும்பாலும் இதுவாகத் தான் இருக்கிறது” என்றது லட்சுமி எலி.

“கோவிலுக்கு வந்து பாவத்தைத் தேடுகிறார்கள்” என்றது குமரன் எலி.

**144. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.**

“எவ்வளவு பெரிய உத்தியோகத்தில் இருந்தாலென்ன, பெரும் கோடீஸ்வரராக இருந்தாலும், எவ்வளவு பெருமை மிக்கவராக இருந்தாலும் அவர் இன்னொருவனுடைய மனைவியின் மீது இச்சைப்பட்டு அவளிடம் சென்றால் தனது பெருமைகளையெல்லாம் இழந்து அற்ப மனிதராகி விடுவார். வேநாயகம் என்றொரு உயர் அதிகாரி இருந்தார். அவரைக் கண்டால் ஊழியர்கள் நடுங்குவார்கள். அவரது அலுவலகத்தில் வேலை செய்த ஒரு பெண்ணின் மீது இச்சை கொண்டார். அதனால் அவள் விரும்பினாளோ தெரியவில்லை. தனது சுயநலத்திற்காக அவரைப் பயன்படுத்தி வந்தாள். அவளின் மேல் இருந்த மோகத்தினால் செய்யக் கூடாத வேலை ஒன்றைச் செய்து விட்டார். அது அவரது வேலைக்கே ஆபத்தாகவந்தது. குடும்பத்தில் கலகம் உண்டானது. இனத்தவர்களிடையே பிரச்சினைகள் உருவானது. தனது மனைவியென்றால் கணவனுக்குத் துன்பம் வரவிடமாட்டாள். இவள்

பிரச்சினை வந்ததும் இடமாற்றம் கேட்டுச் சென்று விட்டாள். இப்போ வேதநாயகம் வேலையின்றி வீட்டில் இருக்கிறார். தனது மனைவி இருக்க இன்னொருவனின் மனைவி மேல் ஆசைப்பட்டால் இப்படியான துன்பங்கள் பலவும் வரும் என்பதை ஆண்கள் உணர வேண்டும்" என்று பற்குணம் நவராசாவுக்குச் சொன்னதை நான் கேட்டேன்" என்றது குமரன் எலி.

"தீமை செய்கிறோம் என்று சிறிதும் சிந்திக்காமல் இன்னொருவனின் மனைவி மீது மோகங் கொண்டால் பல்வேறு அவமானங்களை அடைய நேரும் என்பதைப் பகுத்தறிவுள்ள மனிதர்கள் நம்புவதில்லை" என்றது லட்சுமி எலி.

**145. எளிதுஎன இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி.**

"வேதநாயகத்தை அப்பெண் விரும்பவில்லை. வேதநாயகம் தன்னைக் கண்டதும் பரவசப்படுவதையும், கதைக்க விரும்புவதையும் நல்ல முறையில் பயன்படுத்தி விட்டாள். இதையறியாத வேதநாயகம் நல்ல அழகியான அவளை, அவளின் நடத்தைகளிலிருந்து எளிதாக அடையலாமென்று எண்ணி மோசம் போய்விட்டார். அதனால் தீராத துன்பத்தையும் பழியையும் பெற்றது தான் மிச்சம். அது போலத் தான் விநோதினியும் நடக்க விரும்புகிறாளோ தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் இன்னொருவனது மனைவி மீது ஆசைப்படுவது கேவலமானது" என்று பற்குணம் நவராசாவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான்" என்றது குமரன் எலி.

"சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தெரியாதவன் என்று தான் மனிதர்கள் சொல்வார்கள்" என்றது லட்சுமி எலி.

**146. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்**
**இகவாவாம் இல்இறப்பான் கண்.**

"இன்னொருவனின் மனைவியை விரும்பினால் பகை, பாவம், அச்சம், பழி என்பன விரும்புபவனைத் தேடி வரும். ஊரில் வேதநாயகத்தின் தொடர்பு பற்றிப் பலரும் பல்வேறு விதமாகக் கதைக்க அவளின் கணவன் வாளுடன் வந்து வேதநாயகத்தை வெட்டுவதற்காகத் துரத்தினான். அப்போது அங்கிருந்த சிலர் அவனைப் பிடித்ததால் வேதநாயகம் தப்பி விட்டான். அவன் உன்னைக் கொல்லாமல் விடமாட்டன் என்று சபதமிட்டதால் இப்போது வேதநாயகம் வீட்டை விட்டு வெளியே வர அச்சப்படுகிறான். மிகவும் மோசமான ஆசையால் வேதநாயகத்திற்கு நீங்காத பழி ஏற்பட்டுள்ளது. இப்போ பிறன் மனைவி மீது ஆசைப்படுபவர் பாவிகள் என்று மக்கள் கதைப்பதால் வேதநாயகம் மனமுடைந்துள்ளான். பயம் காரணமாக அவனது மனம் குழம்பிவிட்டது. படித்தவனுக்கு இவையெல்லாம் தெரிந்திருத்தல் வேண்டும். தெரிந்தும் மோக மிகுதியால் செய்யக்கூடாதவற்றை செய்த வேதநாயகத்திற்கு நேர்ந்தவற்றை ஏனையோர் புரிந்து கொள்ள வேண்டும்" என்று பற்குணம் நவராசாவுக்குச் சொல்லிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன்" என்றது குமரன் எலி.

"யாருக்கு என்ன அவலம் நேர்ந்தாலும் அந்த நேரத்தில் மட்டும் தான் மனிதர்கள் புனிதர்கள் போலப் பேசுவார்கள் பின் மறந்து செய்யக்கூடாதவற்றையெல்லாம் செய்வார்கள்" என்றது லட்சுமி எலி.

**147. அறன்இயலான் இல்வாழ்வான் என்பான் பிறன்இயலாள்**
**பெண்மை நயவா தவன்.**

"கதிரேசன், நமசிவாயகம், தனிக்காசலம் போன்ற மனிதர்களைப் பார்த்தே நான் எனது வாழ்வை நடத்தத் திட்டமிட்டேன். அவர்கள் ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபட்டதில்லை. குறிப்பாகப் பெண்களோடு அவர்கள் கண்ணியமாகவே பழகி வந்துள்ளனர். திருமணமான பெண்களை

அவர்கள் தாயாகவே கருதி வாழ்கின்றனர். அவர்களைப் பார்த்து ஏன் இவ்வூர் மக்கள் அவர்களைப் போல வாழக்கூடாது" என்று நவராசாவைக் கேட்டான் பற்குணம்" என்றது குமரன் எலி.

"மனிதன் நல்லவற்றைப் பின்பற்றுவது குறைவு" என்றது லட்சுமி எலி.

**148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு**

"நீ பிறன் மனைவியை மனத்தால் கூட நினைப்பது பாவம் என்று எண்ணும் நீ பெருமைக்குரியவன். ஆண்மை மிக்கவன். அது தான் அறம். இச்சிறுவயதில் உணர்வுகளைத் தனது போக்கில் செல்ல விடாது அடக்கி வைத்திருக்கும் உன்னை நண்பனாக அடைய நான் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்" என்று நவராசா சொல்ல ஆத்திரத்துடன் குறுக்கிட்டான் பற்குணம்,"என்னைப் போலவே நீயும் இருப்பாய் என்று நினைத்தே உன்னோடு பழகி வருகிறேன். வரதன் கேட்டால் நீ விநோதினியை அழைத்துச் செல்வாய் போலிருக்கிறது.." பற்குணம் பேசிக்கொண்டிருக்கும் போது நவராசா சொன்னான்,"என்னைப் பற்றி அறியாமையா நீ என்னுடன் நட்பு வைத்திருக்கிறாய்?" என்று நவராசா கேட்ட பின்பு தான் பற்குணம் தனது தவறை உணர்ந்தான்" என்று குமரன் எலி சொன்னது.

"அவர்கள் இருவரும் உயிர் நண்பர்கள். எதுவும் பேசுவார்கள். ஆனால் கோபிக்க மாட்டார்கள்" என்றது லட்சுமி எலி.

**150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று.**

"கஜேந்திரன் கெட்டவன், கள்ளன், குடிகாரன் என்றெல்லாம் சொல்கிறார்களே தவிரப் பெண்ணாசை கொண்டவன் என்று யாரும் சொல்வதில்லை. அவன் பெண்களைக் கண்டால் வயதிற்கேற்றபடி பழகுவான். வயது முதிர்ந்தவர்களை தெய்வமே என்பான். இளம் பெண்களை அம்மா என்பான். சிறுமிகளைக் கண்டால் பாப்பா என்பான். கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் பிறன் மனைவியின் தோளைத் தழுவாதவரே நன்மைக்குரியவராவர் என்றும், ஒருவன் அறமல்லாத செயல்களைச் செய்தாலும் செய்யலாம். ஆனால் பிறன் மனைவியை விரும்பும் குற்றத்தைச் செய்யாமல் இருந்தால் அது நன்று என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அவன் சேரக்கூடாதவர்களுடன் சேர்ந்து அவர்களின் தூண்டுதலால் சில தவறுகளைச் செய்கிறானே தவிர உண்மையில் அவன் நல்லவன். ஒவ்வொரு தீயவர்களும் அவனைத் தமது தேவைக்காகப் பயன்படுத்துகின்றனர். அன்று குடித்து விட்டு அயலூரிலுள்ள ஒரு பெண்ணோடு பிரச்சினைப்பட்ட மார்க்கண்டனை வாயில் வந்தபடி பேசியதை நான் கேட்டேன். இனிமேலாவது இப்படி நடவாதே. அது பாவம். திருந்தி உனது மனைவியோடு சேர்ந்து வாழ். மற்றப் பெண்களுக்கும் தொல்லை கொடுக்காதே" என்று பேசியவன் என்று நவராசா பற்குணத்திற்குக் கூறுவதைக் கேட்டேன்" என்றது குமரன் எலி.

பெரு மூச்சு விட்டது லட்சுமி எலி.

**பொறை உடைமை– 16**

**151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

"காலையில் மடத்திற்கு முன்னால் குடித்து விட்டுப் புலம்பிக் கொண்டிருந்த கஜேந்திரன் பற்குணத்தையும் நவராசாவையும் கண்டவுடன் சொன்னான், "பரஞ்சோதி பெருங் கோடீஸ்வரன். அவரது

பெண்ணைத் திருமணம் செய்யப் பலர் போட்டி போடுகின்றனர். பொறியியலாளர்கள், வைத்தியர்கள், பெரும் பெரும் வர்த்தகர்கள் பெண் கேட்டும் கொடாதவர் ஏன் பற்குணத்திற்குக் கொடுக்கிறார்? அன்றன்றைக்கே சாப்பாட்டுக்குத் திண்டாடும் குடும்பம். இதில் ஏதோ மர்மம் இருக்கு..” என்று அவன் சொல்லும் போது நவராசா ஒரு தடியை எடுத்துக் கொண்டு வந்து கஜேந்திரனைத் தாக்குவதற்குத் தயாரானான். அதைக் கண்ட பற்குணம் நவராசாவின் கையில் இருந்த தடியைப் பறித்து வீசி விட்டு, “அவனைப் போல நீயும் புத்தி பேதலித்தவனாகி விட்டாய். இவனுக்கு அடிக்க அவன் கோபத்துடன் பல்வேறு விதமான செயல்களைச் செய்வான். அதனால் எமக்குத் தான் துன்பம். இவன் உருத்திரகுமாரனின் கையாள். அவனுக்காகப் பேசுகிறான். விட்டு விடு. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தீமை செய்தவரையும் மன்னிப்பது தான் பெருமையானது. வா போவோம்” என்று அமைதியாகச் சொன்னான் பற்குணம்” என்றது குமரன் எலி.

“எதுவும் செய்யாவிட்டாலும் உருத்திரகுமாரன் கஜேந்திரனை ஏவி விடுவான். நவராசா அடித்தால் நவராசாவின் பரம்பரையை விமர்சிப்பான். அது தெரிந்து தான் பற்குணம் அமைதியாகச் சென்றவன்” என்றது லட்சுமி எலி.

**152. பொறுத்தல் இறப்பினை என்னும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

“நவராசா எனக்கு அடிப்பாரோ..? என் கையென்ன புளியங்காய் ஆயுதோ. வீட்டுக்கு வீடு கூலி வேலை செய்து பிழைக்கும் பிச்சைக்காரர்களுக்கு ரோசம் வந்திட்டுது. ரோசம் பட்டவர் அடித்திருக்கலாம் தானே. அடிக்கத் துணிவு இல்லாதவர் பொல் எடுக்கிறார். எனக்கு அடிச்சிருந்தால் தம்பி பழகி இருப்பர். பரஞ்சோதி வீட்டிலை கலியாணம் செய்தால் காசு பணம் தான் சேரும். மானம் மரியாதை சேருமே? நியாய விலையில் விற்கும் பரஞ்சோதி எப்படிக் கோடீஸ்வரனாக முடியும்? ஊரில் நல்லவர்கள் என்று பெயரெடுத்த சிலர் பரஞ்சோதியைத் தூக்கிப் பிடிக்கினர். அவை தூக்கிப் பிடித்தால் நாமும் ஏற்க வேணுமோ? கலியாணம் முடியட்டும். அதன் பிறகு தான் ஏன் திருமணம் செய்தார்கள் என்ற விபரம் தெரிய வரும்” என்று கஜேந்திரன் ஏசிய போது நவராசா மீண்டும் அவனைத் தாக்க முயற்சித்தான். ஆனால் பற்குணம் விடவில்லை. “நவராசா, எம்மைக் கோபப்படுத்துவதற்காகச் சிலர் எல்லையைத் தாண்டியும் தீமைகளைச் செய்வார்கள் அவற்றை மன்னிப்பதை விட மறப்பது தான் நல்லது. நீ விரைவாக வா” என்று அமைதியாகச் சொன்ன பற்குணம் நவராசாவையும் அழைத்துக் கொண்டு அமைதியாகச் சென்றான்” என்றது குமரன் எலி.

“மானத்தைப் பேணுவோர் அப்படித் தான் செய்வார்கள்” என்றது லட்சுமி எலி.

**153. இன்மையுள் இன்மை விருந்தஒரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

“நீ எதைச் சொன்னாலும் எனது ஆத்திரம் அடங்க மறுக்கிறது. தீயசொற்களைப் பேசும் அவனது வாயைக் கிழிக்க வேண்டும்” என்று ஆவேசப்பட்ட நவராசாவுக்கு பற்குணம் அமைதியாகச் சொன்னான், “ஒரு வறுமையிலும் வறுமை உணவு கேட்டு வந்தவர்களுக்கு உணவு கொடாமை.

தீயவர்களுக்கு அளவுக்கதிகமாகக் கொடுத்துத் தீயசெயல்களைச் செய்விப்பான். அது போல ஒருவனது வல்லமையுள் எல்லாம் சிறந்த வல்லமை அறிவில்லாதவர்கள் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்வது. உருத்திரகுமாரனுக்கு அறிவு இல்லையா என்று கேட்பாய். கல்வியின் மூலம் அறிவைப் பெறலாம் தான். ஆனால் தாம் பெறும் அறிவின் மூலம் செய்யக் கூடிய தீமைகளைப் பிறருக்குச் செய்வதையே சில கற்றவர்கள் செய்து வருகிறார்கள். அதற்கு அறக்கடவுள் தண்டனை கொடுப்பார் நீ வா” என்று நவராசாவைப் பற்குணம் கூட்டிச் சென்றான்” என்றது குமரன் எலி.

“கடவுள் எத்தனை வகையான தண்டனைகளை உருத்திரகுமாரனுக்குக் கொடுத்திருப்பார். இருப்பினும் அவன் உணர்கிறானா..?” என்று கேட்டது லட்சுமி எலி.

**154. நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை**
**போற்றி ஒழுகப் படும்.**

“மறுநாட்காலை கதிரேசனும் பரஞ்சோதியும் பற்குணத்தைத் தேடிக் கோவிலடிக்கு வந்தனர். பரஞ்சோதி சொன்னார்,“மாப்பிளை, எனது மகளில் எந்தக் குறையும் இல்லை. எம் மீது பொறாமைப்பட்ட சிலர் என்னையும் எனது குடும்பத்தினரையும் இகழ்வாகப் பேசி வருகின்றனர். அவையெல்லாம் பொய். வர்த்தகம் என்பது சிவன் படியளப்பதைப் போன்றது. யாருக்கும் பாதிப்பு ஏற்படா வண்ணம் செய்தல் வேண்டும். என்னிடம் இருக்கும் பணத்திற்கு வைத்தியரையோ பொறியியலாளரையோ ஏன் செய்ய முடியாது என்று கேட்கின்றனர். எனக்குப் பின்பு எனது தொழிலை தர்மமான முறையில் செய்யக் கூடிய ஒருவனையே எனக்கு மாப்பிளையாகத் தேடினேன். ஊர்ப் பெரியவர்கள் உன்னைச் சொன்னார்கள்” என்று பரஞ்சோதி சொல்லும் போது பற்குணம் சொன்னான், ‘‘நான் ஊர்ப்பெரியவர்களை மதித்து நடப்பவன். ஊர்ப்பெரியவர்களின் சொல்லைத் தட்டவும் மாட்டேன். அதனால் தான் ஒப்புக் கொண்டேன். இனிஎன் உயிர்போனாலும் மாறமாட்டேன்” என்று கூறும் போது கதிரேசன் சொன்னார்,“பொறுமை உள்ளவனின் மனஉறுதி ஒரு போதும் தளர்வடையாது. நீங்கள் பொறுமைசாலி. வர்த்தகன் பொறுமையுள்ளவனாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் வர்த்தகம் சிறக்கும்” என்று பொறுமையாகக் கதிரேசன் கூறினார்” என்றது குமரன் எலி.

“பொறுமை கடலை விடப் பெரியது” என்று நமசிவாயகம் அடிக்கடி கூறுவார்” என்றது லட்சுமி எலி.

**155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து**

“நவராசா கஜேந்திரனுக்கு அடிக்கப் போனதைத் தடுத்ததைப் பற்றி நமசிவாயகம் பெருமையாகச் சொன்னார்,“நவராசா மிகவும் நல்லவன். ஒழுக்கக்கேடான நடவடிக்கையில் ஈடுபடாதவன். பாரபட்சம் காட்டாது உதவிகள் செய்பவன். இருந்த போதும் கோபக்காரன். தன்னைவிடச் சுற்றத்தவர்களை அவன் மேலாக மதிப்பதால் தான் தனது சுற்றத்தவர்களுக்குத் துன்பம் வந்தால் பொறுக்க மாட்டான். ஆனால் பற்குணம் அப்படியானவனல்ல. தன்னை யாராவது ஏசினால், “உனக்கு என் மீது கோபம் வந்தால் ஏசுவதை விட்டு விட்டு எனக்கு அடி’’ என்பான். அதனால் தான்

உருத்திரகுமாரன் கஜேந்திரனை ஏவி விட்டது தெரிந்தும் அதைப் பொறுமையுடன் ஏற்று மன்னித்தவன். அவனது இத்தகைய குணங்களை விரும்பித்தான் பரஞ்சோதி தனது மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பினார். மனிதனுக்குப் பொறுமை அவசியம். வர்த்தகனுக்குப் பொறுமை அத்தியாவசியம் என்று பரஞ்சோதி சொல்வார். அவருக்கேற்ற மாப்பிளை" என்று நமசிவாயகம் கூறிய போது கதிரேசன் சொன்னார், "தமக்குத் தீமை செய்தவரைத் தண்டிப்போரை உலகம் மதிக்காது. அத்தீமைகளைப் பொறுத்தவரைப் போற்றும். அன்று நவராசா கஜேந்திரனைத் தாக்கியிருந்தால் குடிகாரனுக்குப் படித்த நவராசா அடித்திருக்கக் கூடாது என்று தான் சொல்லியிருக்கும்" என்று கதிரேசன் கூறினார்" என்றது குமரன் எலி.

"இந்த மனிதர்கள் விசித்திரமானவர்கள். யார் எதைச் செய்வார் என்று நம்ப முடியாது" என்றது லட்சுமி எலி.

### 156. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
### பொன்றும் துணையும் புகழ்.

"கனகரத்தினத்தின் மனைவி கௌசல்யா சரியான வாய்க்காரி. ஊர்க்கதைகளைக் கதைப்பதில் கை தேர்ந்தவள். அவளும் வேறு சில பெண்களும் கோவிலுக்கு வந்தால் கும்பிட வந்தவர்கள் எழுந்து வேறு இடத்திற்குச் சென்று விடுவார்கள். இன்று காலை கோவிலுக்கு வந்த கௌசல்யா பற்குணத்தைக் கண்டதும் கேட்டாள், "நேற்று கோவிலடியில் உனக்கும் கஜேந்திரனுக்கும் ஏதோ பிரச்சினையாமே? அவள் பரஞ்சோதியின் பெண்ணைப் பற்றித் தப்பும் தவறுமாகச் சொல்லிக் கொண்டு திரிகிறானாம். நீ அவனுக்கு அடித்திருக்க வேண்டும். ஒரு பெண்ணை இல்லை உனக்கு மனைவியாக வருகின்றவளைப் பற்றித் தவறாகச் சொன்னதை எப்படிப் பொறுத்தாய்?" என்று கேட்கப் பற்குணம் சொன்னான், "தீங்கு செய்தவரைத் தண்டிப்பவருக்கு அன்று ஒரு நாள் மட்டும் தான் இன்பம். தண்டிக்காமல் பொறுத்துக் கொள்பவருக்கு வாழ்நாள் முழுவதும் துன்பம்" என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். யார் எதையும் கதைக்கட்டும். உண்மையென்றால் அதைப் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். பொய் என்றால் பேசாமல் இருத்தல் வேண்டும். கோபங்கொண்டால் பகையும் பழியும் தான் மிஞ்சும். அத்துடன் குடிகாரர், அறிவில்லாதவர்கள், பிறரைக் குறைகாண்பவர்கள், பொறாமை உள்ளவர்களைக் கண்டால் விலகி விட வேண்டும். அதனால் தான் துஷ்டரைக் கண்டால் தூர விலகு"என்று பெரியவர்கள் கூறியுள்ளனர்" என்று பற்குணம் சொன்ன போது கௌசல்யாவின் முகம் கறுக்கக் கண்டேன்" என்றது குமரன் எலி.

"நல்ல பதில். எதைச் சொன்னாலும் கௌசல்யா போன்றவை திருந்த மாட்டினை" என்றது லட்சுமி எலி.

### 157. திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
### அறன்அல்ல செய்யாமை நன்று

"கௌசல்யா அக்கா, நிறைவான மனிதன் என்று இவ்வுலகில் யாரும் இல்லை. ஒவ்வொருவரிலும் ஏராளமான குறைகள் இருக்கும். அவற்றையெல்லாம் விசாரிக்கச் சென்றால் உறவு

கொள்வதற்கு யாரும் இல்லாத நிலையுண்டாகும். பிறர் எமக்குத் தாங்க முடியாத தீமைகளைச் செய்தாலும், நாம் அவர்களுக்குத் தீமை செய்யக் கூடாது என்று பெரியவர்கள் கூறியிருக்கின்றனர். ஒருவர் இன்னொருவருக்குக் கெடுதல் செய்ய முடியாது. அவர் தனக்குத் தானே கெடுதல் செய்கிறார் என்றும் பெரியவர்கள் கூறியுள்ளனர். அதை நம்புபவன் நான். ஊரில் பாருங்கள் நன்மை செய்யும் எவராவது துன்பப்படுகிறர்களா..? அதே நேரம் தீமை செய்பவர்கள் யாராவது மகிழ்வுடன் இருக்கிறார்களா? தீமை செய்யும் போது மகிழ்வாக இருக்கும். பின் அத்தீமை பயன் கொடுக்கும் போது தாங்க முடியா துன்பங்கள் ஏற்படும். இது கடவுளின் அருள். அதனால் எனக்குத் தீமை செய்பவர்களை நான் தண்டிப்பதில்லை. நேற்று இரவு கஜேந்திரன் குடித்து விட்டு யாரையோ திட்டிக் கொண்டு வீதியால் வரும் போது விபத்துக்குள்ளானாம். நான் காலையில் சென்று பார்த்தேன்" என்று பற்குணம் கூற கௌசல்யா மணி அடிக்குது பூசை தொடங்கப் போகுது" என்று கூறிச் சென்றாள் என்றது குமரன் எலி.

"உங்கை கனபெண்பிளைகள் கும்பிடவே வாறவை. ஊர்க்கதை கதைக்கவெல்லோ" என்றது லட்சுமி எலி.

### 158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
### தகுதியான் வென்று விடல்.

"அப்போது அங்கு வந்த நவராசா சொன்னான்,"கௌசல்யா அக்கா என்னவாம். கஜேந்திரனைப் பற்றி விசாரித்திருப்பாவே. இப்போ கோவிலுள் அதைப் பற்றித் தான் ஆராய்ச்சி நடக்கும்" என்று சிரித்தான். அதற்குப் பற்குணம் சொன்னான்,"நீ திருந்தவே மாட்டாயா..? நீ நல்லவன், ஒழுக்கமுள்ளவன். தேவையில்லாத கதைகளைக் கதைக்கலாமா..? செருக்கு மிகுதியால் பெரும் தீமைகளைச் செய்தவருக்குக் கூட நாம் பொறுமையாக இருந்து தீமைகள் செய்யாது நன்மைகளைச் செய்து அவர்களை வெல்ல வேண்டுமே தவிர அவர்களுக்குத் துன்பஞ் செய்யக் கூடாதென்று பெரியவர்கள் கூறியுள்ளனர். பட்டதாரியான உனக்கு இவை தெரியாதா..?" என்று பற்குணம் சொல்ல நவராசா சொன்னான், "நீ புத்தபெருமான். நான் சாதாரண மனிதன்" என்று அதற்குப் பற்குணம் சொன்னான், "சாதாரண மனிதனான சித்தாத்தன் தான் தனது பொறிகளை அடக்கிப் புத்த பெருமானானவர்"

"உன்னோடு கதைக்க முடியாது" என்று நவராசா சொன்னான்" என்றது குமரன் எலி.

"நவராசா நல்லவன். ஆனால் பொறுமையில்லை" என்றது லட்சுமி எலி.

### 159. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
### இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

"அப்போது அங்கே நமசிவாயகம் வந்தார். நமசிவாயகமும் நவராசாவைப் போன்றவர். எதையும் ஆராயாது கோபப்படுவார். பின்பு தவறை உணர்வார். அதனால் கதிரேசன் சொல்வார்,"நமசிவாயகம், கோபப்பட்ட பின் ஆராயாதே. ஆராய்ந்த பின் கோபப்படு. உனது கோபம் என்னையே வெறுக்க வைக்கிறது" என்பார். அவரைக் கண்ட நவராசா சொன்னான்,"ஐயா, பற்குணம் எது நடைபெற்றாலும்

கோபிக்கிறானில்லை. அன்று கஜேந்திரன் இவனை வாயில் வந்தபடியெல்லாம் ஏசினான். இன்று காலை கௌசல்யா எதை எதையோவெல்லாம் சொன்னாள். இவர் தத்துவம் பேசுகிறார். மனிதனென்றால் கோபப்பட வேண்டும். மகிழ வேண்டும். வேடிக்கையாகக் கதைக்க வேண்டும்.இவன் தத்துவம் பேசுகிறான்"அதற்கு நமசிவாயகம் சொன்னார்,"பற்குணம் பொறுமைமிக்கவன். ஆராய்ந்து அறிந்த பின் முடிவு எடுப்பவன். நான் ஆராயாதும், பொறுமையின்றியும் முடிவெடுப்பதால் பல பிரச்சினைகளுக்குட்பட்டேன். அவன் சிறுவயதிலேயே பக்குவப்பட்டு விட்டான். எல்லை மீறிப் பிறர் பேசும் தீயசொற்களைப் பொறுத்துக் கொள்பவர் துறவிகளை விட மேம்பட்ட புனிதர்கள். அவன் செய்வது சரி. நீயும் அவனைப் போல மாறு" என்று கூறிய போது நவராசாவின் முகத்தில் அசடு வழிந்தது" என்றது குமரன் எலி.

"நமசிவாயகம் ஆராயாமல் கோபப்படுபவர் தான். பின் வருத்தப்படுவார்" என்றது லட்சுமி எலி.

**160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்.**

"நமசிவாயகமும் சில நேரங்களில் தேவையில்லாத காரியங்களைச் செய்வதாகப் பற்குணம் கதிரேசனுக்குக் கூறிக் குறைப்பட்டான். பாடசாலை மண்டபத்தைத் தான் கட்டித் தருவதாகப் பரஞ்சோதி வலிய வந்து சொன்னவர். அதன்படி கட்டுமான வேலைகள் தொடங்கிவிட்டன. தலைமைப் பொறியியலாளர் ஆறு மாத காலத்திற்கு விடுமுறை எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டிற்குக் குடும்பத்துடன் சென்று விட்டார். அதற்காக நமசிவாயகம் பரஞ்சோதியைச் சந்தித்து வேறு பொறியியலாளரை ஏற்பாடு செய்து கட்டிட வேலையைச் செய்யச் சொன்னாராம். மரம் விழுந்து சேதமடைந்த பாடசாலை மண்டபத்தை அரசபொறியியலாளர் இன்னும் வந்து பார்க்கவில்லை. இவை பார்த்துத் திருத்த எப்படியும் இரண்டு வருடங்களாவது செல்லும். ஆனால் பரஞ்சோதி கட்டும் கட்டிட வேலைகள் அரைவாசிக்கு மேல் முடிந்து விட்டது. பொறியியலாளரின் தந்தைக்கு இரத்தப் புற்று நோய். தப்பமாட்டார் என்று தெரிந்தும் அவர் பாசமிகுதியால் தமிழ் நாட்டிற்குச் செல்ல இவர் தேவையில்லாத கதைகளைக் கதைப்பதால் பரஞ்சோதி மனம் வருந்துகிறார்" என்று பற்குணம் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டேன்" என்றது குமரன் எலி.

"அதற்குக் கதிரேசன் என்ன சொன்னவர்" என்று கேட்டது லட்சுமி எலி.

"பிறர் சொல்லும் கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் உணவுண்ணாமல் நோன்பிருப்பவரை விட உயர்ந்தவர் என்று சொல்லிக் கொண்டு தேவையில்லாத விடயங்களில் நமசிவாயகம் தலையிடுகிறார். தான் துறவி என்கிறார். பற்றற்றவர் என்கிறார். ஆனால் செய்யும் செயல்கள் அதை மீறுகின்றன" என்று கதிரேசன் சொன்னார்" என்றது குமரன் எலி.

**அழுக்காறாமை– 17**

**161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு**

“இப்போ உருத்திரகுமாரன் நமசிவாயகத்தை அடிக்கடி சந்தித்துக் கதைக்கிறான். இவ்வூர்ச் சனங்கள் பரஞ்சோதியின் வர்த்தக நிலையத்தில் தான் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர். அதை விட யாரும் கேட்காமலே பாடசாலையில் இடப்பற்றாக்குறை இருப்பதை அறிந்து பரஞ்சோதி தனது செலவில் மண்டபம் கட்டிக் கொண்டிருக்கிறார். அதனால் மக்கள் அவரைப் புகழ்கின்றனர். அது உருத்திரகுமாரனுக்குப் பிடிக்காததால் பொறியியலாளர் தமிழ் நாட்டிற்குச் சென்றதைக் குறையாக உருத்திரகுமாரன் சொல்ல அதை நம்பி நமசிவாயகம் பரஞ்சோதியைச் சந்தித்துக் கதைக்கிறார். இது தேவையில்லாத விடயம். பொறாமை காரணமாக உருத்திரகுமாரன் ஏவி விட இவர் அதையறியாது கதைத்திருக்கிறார்” என்று பற்குணம் சொல்லக் கதிரேசன் சொன்னார், “உருத்திரகுமாரன் தன்னைப் பெரியவனாக நினைக்கிறான். அத்துடன் தன்னை விட உயர்ந்தவர்கள் யாரும் இல்லையென்றும் நினைக்கிறான். இது பொறாமையின் உச்ச நிலை. ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாது இருப்பதை ஒழுக்க நெறியாகக் கொள்ளல் வேண்டும். அப்படியில்லாதவர்களைத் திருத்தவே முடியாது. பரஞ்சோதி நல்லவர். பொறாமை இல்லாதவர். அவர் புரிந்து கொள்வார்” என்று கதிரேசன் கூறியபோதும் பற்குணம் சமாதானமடையவில்லை” என்றது குமரன் எலி.

“தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பார்ப்பவர்கள் இவர்கள். இவர்கள் திருந்தவே மாட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**162. விழுப்பேற்றின் அ∴துஒப்பது இல்லை யார்மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

“பற்குணம் நான் இவ்வளவு கூறியும் உனது மனம் சமாதானமடையவில்லை” என்று கதிரேசன் கூறும் போது பற்குணம் இடைமறித்துச் சொன்னான், “எனக்கு யாவும் புரியும். புரிந்து கொள்ள வேண்டியவர் பரஞ்சோதி. அதனால் அவருடன் கதையுங்கள் என்று சொல்லத் தான் நான் வந்தேன்” என்றான்.

“பரஞ்சோதி, உனக்கு நமசிவாயகம் சொன்னதை ஒரு தகவலாகச் சொல்லியிருப்பாரே தவிரக் குறையாக நினைத்திருக்க மாட்டார். அவர் பெருஞ் செல்வந்தர். ஒழுக்க சீலர், பணிவானவர், உலகின் போக்கை அறிந்தவர். அத்துடன் மற்றவர்களின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படாதவர். அது தான் அவரில் உள்ள சிறப்பாகும். பரஞ்சோதியைப் போல வர்த்தகம் செய்ய முடியாது. அத்துடன் அவரைப் போல யாரும் தருமமும் செய்ய முடியாது. அப்படியிருக்க அவர் யார் மீதும் பொறாமைப்படமாட்டார். யாரையும் மதிக்காமலும் விடமாட்டார். நான் உனது மன ஆறுதலுக்காக இன்று அவரைச் சந்திக்கிறேன்” என்று கதிரேசன் கூறப்பற்குணத்தின் முகம் மலர்ந்ததை நான் கண்டேன்” என்றது குமரன் எலி.

“இங்கே உள்ளவை தாமும் செய்யாயினை. செய்பவர்களையும் செய்ய விடாயினை” என்றது லட்சுமி எலி.

**163. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன் ஆக்கம்**
**பேணாது அழுக்கறுப் பான்.**

“அன்று மாலை பரஞ்சோதி கோவிலுக்கு வந்து கதிரேசனைச் சந்தித்தார். கதிரேசனுடன் பற்குணமும் கோவிலில் நின்றான். பரஞ்சோதியைக் கண்டதும் கதிரேசன் சொன்னார்,“பாடசாலை வேலைகளைப் பொறியியலாளர் வந்த பின்பு செய்வது தான் நல்லது..” அவர் சொல்லும் போது பரஞ்சோதி சொன்னார்,“அவர்களது நிறுவனத்தில் ஐந்து பொறியியலாளர்கள் உள்ளனர். இன்னொரு பொறியியலாளர் வந்து வேலையைத் தொடங்கி விட்டார். நீங்கள் ஒரு முறை வந்து கட்டிட வேலையைப் பாருங்கள் என்று சொல்லவே வந்தேன்” என்று கூறிவிட்டுப் பரஞ்சோதி கோவிலுள்ச் சென்றார்.

“மகனே பார்த்தாயா பரஞ்சோதியின் பெருந்தன்மையை. அவர் எதிர்காலத்தை உணர்ந்தவர். அதனால் திட்டமிட்டே செயல்களைச் செய்வார். இது புரியாதவர்கள் தான் அவரின் மீது பொறாமைப்பட்டு கண்டபடி கதைக்கின்றனர். பரஞ்சோதி பிறருக்கு ஏற்படும் மேன்மையைக் கண்டு பொறாமைப்படுபவன் தன்னைத் தானே அழித்துக் கொள்பவன் என்றும், தான் செய்யும் அறச்செயல்கள் இம்மைக்கும் மறுமைக்கும் உதவும் என்றும் நம்புபவன் பிறரின் செயல்களைக் கண்டு பொறாமைப்பட மாட்டான். அந்த வகையானவர் தான் பரஞ்சோதி” என்று கதிரேசன் கூற,“நான் தான் தவறாக நினைத்து விட்டேன்” என்று பற்குணம் கூறினான்” என்றது குமரன் எலி.

“நிறை குடமும் சில சமயம் தளம்பும்” என்றது லட்சுமி எலி.

**164. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்**
**ஏதம் படுபாக்கு அறிந்து.**

“சுவாமியை வணங்கி விட்டு வந்த பரஞ்சோதி கதிரேசனுக்குச் சொன்னார்,“தர்மப்படி வாழ்பவனைக் கெடுக்க யாராலும் முடியாது. அது எனது அனுபவம். பட்டணத்தில் நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. ஒவ்வொரு வரும் தாம் நினைத்தவை தான் தர்மம் என்று வர்த்தகம் செய்கின்றனர். விலையைக் கூட்டியும், கலப்படம் செய்தும் பொருட்களை விற்று விட்டுக் கோவிலுக்குக் கட்டிடம் கட்டுகின்றனர். சுவாமிக்கு தங்க நகைகள் போடுகின்றனர்.இருந்தும் என் மீது பொறாமைப்படுகின்றனர். நான் வியாபாரத்தை விஸ்தரித்தால் கோபங்கொள்கின்றனர். நான் அப்படியல்ல எனது இயல்புக்கேற்றபடி தொழிலைச் செய்வேன். பொறாமைப்படமாட்டேன். கோவிலுக்குத் தொண்டுகள் செய்வது குறைவு. பாடசாலை மண்டபத்தால் இருநூறு மாணவர்கள் வருடா வருடம் பயனடைவர். மடத்திற்குக் கொடுத்தால் பலர் பசியாறுவர். எல்லாம் இறைவனின் சித்தப்படி நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளவன் நான். பொறாமைப்படுவதால் கேடு வரும் என்று நம்புபவன் நான். யார் என்னைக் கேவலமாகக் கதைத்தாலும் அதை நான் கவனத்தில் எடுப்பதில்லை. அதனால் நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்றவர்” என்றது குமரன் எலி.

“கோவிலில் பதவிக்கு அடிபடுவார்கள். அப்பதவியால் எவ்வளவு பணம் களவெடுக்கலாம் என்று நினைப்பார்கள். கோவிலுக்கு வாங்கிக் கொடுக்கும் பொருட்களில் தமது பெயர்களை எழுதுவார்கள். இதெல்லாம் இறைவனுக்குத் தெரியாதென்று நினைக்கிறார்கள் போலும்” என்றது லட்சுமி எலி.

**165. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்**

**வழுக்கியும் கேடுஈன் பது.**

“உண்மை தான் ஐயா, பொறாமைப்பட்டால் பல தீயகுணங்கள் வந்து மனதில் குடியேறும். அவற்றைச் செயற்படுத்தும் போது பணச் செலவும் அவமானமும் துன்பங்களும் வந்து சேர்ந்து நிம்மதியைக் குலைக்கும். இதனால் தான் இருதய நோய்கள் உண்டாகின்றன. பகைவர்கள் ஒருவனுக்குத் தீங்கு செய்யத் தவறினாலும் தவறுமே தவிரப் பொறாமை கொண்டவனின் நெஞ்சு ஓயாது சிந்தித்துச் சிந்தித்து அவனைக் கொல்லும் என்று எனக்குத் தெரியும் என்று கதிரேசன் சொன்னார்” என்றது குமரன் எலி.

“நல்ல நண்பர்களைப் போலப் பலர் இருக்கிறார்கள். ஆனால் ஒருவனது முன்னேற்றம் பலருக்குப் பொறுப்பதில்லை. கோவிலடியில் நின்று பார்த்தால் தெரியும்” என்றது லட்சுமி எலி.

**166. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.**

“இந்த மனிதரின் குணம் நேரத்திற்கு ஏற்றவாறு மாறிவிடுகிறது. கொடுப்பதால் பல சிறப்புக்கள் வரும் என்று சொல்கிறார்கள். அதை நம்பிக் கொடுத்தால் கலப்பட வியாபாரஞ் செய்தால் இன்னும் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். எனது வீட்டில் சமையல் வேலை செய்யும் பெண்ணிற்குத் திருமணம் பேசப்பட்ட போது மாப்பிளைப் பகுதி ஐந்து பவுண் நகை தரும்படி கேட்டுள்ளனர். அந்தப் பெண்ணின் கணவன் போர் நடைபெற்ற போது கண்ணி வெடியில் சிக்கி ஊனமுற்றவன். அதனால் நான் முன்நின்று நகையும் பணமும் கொடுத்துத் திருமணம் செய்து வைக்க முயன்றேன். அப்போது சமைக்கும் பெண்ணின் சகோதரி வந்து தமக்கைக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று சொன்னாள். அவளும் எனது வீட்டில் கூலி வேலை செய்பவள். இதற்குக் காரணம் பொறாமை தானே. நான் ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்தால் புண்ணியம் கிடைக்கும். அதைத் தடுப்பவர்கள் உணவும் உடையும் இன்றித் தவிப்பார்கள் என்று கூறிய பின்பும்,“அவள் கூடாதவள். உங்கள் வீட்டில் உள்ள பொருட்களைத் தினமும் திருடுகிறாள்” என்று சொன்னாள். தானம் கொடுக்கவோ, புண்ணியம் செய்யவோ சிலர் விடுகிறார்கள் இல்லை” என்று கூறியதைக் கேட்டேன்” என்றது குமரன் எலி.

“உதவிகளை ஒருவர் செய்யும் போது அதைத் தனக்கும் செய்தாலென்ன என்ற எண்ணமே கொடுப்பவர்களைத் தடுப்பவர்களின் மனதில் உள்ளது” என்றது லட்சுமி எலி.

**167. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்.**

“கதிரேசு, பொறாமை கொள்ளவே கூடாது. எனது நண்பன் நாகநாதன். அவன் பெரும் வர்த்தகன். ஆனால் சிறு சிறு வர்த்தகர்கள் வியாபாரம் செய்வது அவனுக்குப் பிடிப்பதில்லை. நாகநாதனது மைத்துணன் சிவராசா. சிவராசா சிறிதாக ஒரு வியாபாரம் தொடங்கிப் படிப்படியாக முன்னேறியவன். இருப்பினும் நாகநாதனது பணத்தில் நூறில் ஒரு பங்கு கூட இல்லாதவன். ஆனால் அவனது முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப்படுவான். “ஐந்து வருடங்களுக்கு முன் பெட்டிக்

கடையாக ஆரம்பித்தவன் இன்று பாரஊர்த்திகள் இரண்டு வாங்கி விட்டான். இன்னும் ஐந்து வருடங்களில் எம்மை மிஞ்சி விடுவான்" என்பான்.

"அவன் உனது மைத்துனன் தானே. அவன் வளர்ந்தால் உனக்குப் பெருமை" என்று நான் சொன்னால் கேட்கமாட்டான். இருந்தாலும் நான் அவனுக்குப் புத்திமதிகள் கூறுவேன். "நாகராசா பொறாமை உடையவனைக் காணும் திருமகள் அவனைத் தன் தமக்கையான மூதேவிக்குக் காட்டி விட்டு அகன்று விடுவாள் என்று பெரியவர்கள் கூறுவதைக் கேட்டுள்ளேன். ஆதலால் பொறாமைப்பட்டாயேயானால் உன்னை விட்டுத் திருமகள் சென்று விடுவாள்" என்றேன். அவன் கேட்கவில்லை. மாரி காலத்தில் ஒரு நாள் இடிஇடித்த போது அவனது வர்த்தக நிலையம் மின்னலால் தாக்கப்பட்டு எரிந்து நாசமானது. அதன் பின் தான் அவன் என்னிடம் வந்து தனது தவறை உணர்ந்து அழுதான்" என்று பரஞ்சோதி கதிரேசனுக்குக் கூறினவர்" என்றது குமரன் எலி.

"மனிதர்கள் எல்லோரும் கோவிலில் பூசை செய்வதும், விரதம் அனுட்டிப்பதும், கட்டிடம் கட்டுவதும் தான் புண்ணியமென நினைக்கின்றனர். ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று நினைப்பதில்லை" என்றது லட்சுமி எலி.

**168. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.**

"கோவிலுக்கு வந்த நாகநாதன் பரஞ்சோதியைக் கண்டதும் அவரின் அருகே வந்து சொன்னான்,"பரம், நீ சொல்லும் எவற்றையும் நான் கேட்பதில்லை. ஒழுக்கமாகவும் வாழ்ந்ததில்லை. எனது மச்சான் மீது பொறாமை கொண்டேன். ஆனால் அவன் எனது வளர்ச்சியை விரும்பினான். எனது வர்த்தக நிலையம் எரிந்த பின்பு உதவி செய்தது அவன் தான். அவனால் தான் நான் இன்று மனிதனாக வாழ்கிறேன். பொறாமை ஒரு பாவி. அது தன்னை விரும்பி மற்றவர்களைக் கெடுக்க விரும்புபவரின் செல்வத்தை அழிப்பதோடு அவனைத் தீயவழியிலும் செல்ல வைக்கும். அதனால் மனக்குழப்பம் உண்டாகிப் பல நோய்களும் உண்டாகும் என்றாய். அது உண்மை. இப்போ எனது செல்வம் அழிந்து விட்டது. சிவராசாவைக் கெடுக்கப் பல தீய செயல்களைச் செய்தேன். அதனால் நான் தான் துன்பப்படுகிறேன். சிவராசா முன்னேறி விட்டான்" என்று மனம் வருந்தி நாகநாதன் பரஞ்சோதிக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்" என்றது குமரன் எலி.

"பகுத்தறிவும் கல்வியறிவும் மனிதர்களுக்குத் துன்பங்கள் வருவதை உணரச் செய்வதில்லை. வந்த பின்பு தான் துன்பப்படுவர்" என்றது லட்சுமி எலி.

**170.அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃது இல்லார்**

**பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.**

"பொறாமைப் படாமல் வாழ்ந்த நீயும் சிவராசாவும் நாளுக்கு நாள் மேன்மையடைந்து கொண்டே இருக்கிறீர்கள். நான் பொறாமைப்பட்டு மேன்மையடையவில்லை. பொறாமை கொள்ளாது எனது மைத்துனனோடு மகிழ்ச்சியாக வாழ்ந்திருப்பேனே யானால் மேன்மையடைந்திருப்பன். மாறாக

பொறாமை இல்லாத சிவராசா மீது பொறாமைப்பட்டு அவனைக் கெடுக்க நினைத்து நான் தான் கெட்டேன். பொறாமைப்பட்டவன் மேன்மையடைந்ததில்லை. பொறாமைப்படாதவன் சிறுமையடைந்ததும் இல்லை" என்று நாகநாதன் கூறும் போது அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது" என்றது குமரன் எலி.

"ஒருவன் எதை விதைக்கிறானோ அதைத் தானே அறுவடை செய்யலாம்" என்றது லட்சுமி எலி.

**வெ.ஃகாமை– 18**

**171. நடுவுஇன்றி நன்பொருள் வெ.ஃகின் குடிபொன்றிக்**

**குற்றமும் ஆங்கே தரும்.**

"கோவிலடியைக் கதிரேசனும் பற்குணமும் நவராசாவும் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருக்கும் போது திருநாவுக்கரசு வந்து சொன்னார்,"நான் முப்பது வருடங்களுக்கு முன்பு ஊரை விட்டுச் சென்று விட்டேன். இப்போ பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் மனித மனங்கள் மாறவில்லை. மேலை நாடுகளில் விஞ்ஞானத்தோடு சேர்ந்து மனிதர்களும் மாறுவதால் தான் அவர்கள் மகிழ்வுடன் வாழ்கின்றனர். உருத்திரகுமாரன் பெரும் பணக்காரன். இருந்தும் எனது காணிக்குக் கள்ள உறுதி முடித்து விட்டான். நான் நேர்மையானவன். பிறரின் பொருளில் ஆசைப்படாதவன் என்று தெரிந்து நேற்று மாலை அவன் வந்து,"தெரியாமல் செய்து விட்டேன். நடுவு நிலைமை இல்லாமல் பிறரது பொருளை அடைய நினைத்தால், குடும்பங் கெடும். அழிவு தரும் பல குற்றங்கள் சூழ்ந்து வரும் என்பார்கள். நான் அப்படி நடந்ததால் பல துன்பங்களுக்காளானோர் இப்போ என்னை வேலையை விட்டு நீக்கப் போகிறார்கள். அடுத்த வருடம் ஓய்வு பெறவுள்ளேன். வேலையிலிருந்து நீக்கப்பட்டால் ஓய்வூதியமும் கிடைக்காது. அதனால் என்னை மன்னித்து வழக்கைத் திரும்பப் பெறுங்கள். நட்ட ஈடு தருகிறேன்" என்றான். அதனால் வழக்கைத் திரும்பப் பெற்று விட்டேன்" என்று கூற நவராசா,"தீயவர்களுக்கு உதவினால் தீமைகளைத் தான் தொடர்ந்து செய்வார்கள்" என்று கூறியதை திருநாவுக்கரசு ஒப்புக் கொள்ளவில்லை" என்றது குமரன் எலி.

"இதிலையெண்டாலும் அகப்பட்டுப் பாடம் படிப்பர் என்று பார்த்தால் தப்பிவிட்டான்" என்றது லட்சுமி எலி.

**172. படுபயன் வெ.ஃகிப் பழிப்படுவ செய்யார்**

**நடுவுஅன்மை நாணு பவர்**

"நவம், நடுவு நிலைமை இல்லாத செயல்களைச் செய்வதில் வெட்கப்படாதவர்கள், பிறரின் பொருளை விரும்புவதால் பழியைத் தேடிக் கொள்வார்கள். உருத்திரகுமாரன் அப்படிப்பட்டவன். நடுநிலைமை இல்லாத செயல்களைக் கண்டு வெட்கப்படுவோர், பிறரின் பொருளை விரும்பமாட்டார்கள். அவனுக்குக் கடவுள் கொடுத்த தண்டனைகள் அதிகம். ஆனால் அவன் அதை உணர்கிறானில்லை. நான் ஒழுக்கத்துடன் வாழ்ந்த ஒருவரின் மகன் என்பது உங்களுக்குத் தெரியும். எனது தந்தையைப்

போலவே நானும் வாழ்கிறேன். தீயவர்களுக்கான தண்டனையை அறக்கடவுளே வழங்கட்டும். நான் வழங்க விரும்பவில்லை. எனது காணியின் பெறுமதியான இருபத்தைந்து இலட்சத்தைத் தந்துள்ளான். அதை நான் பாடசாலைக்கும், மடத்திற்கும், கோவிலுக்கும் கொடுக்க விரும்புகிறேன்" என்று திருநாவுக்கரசு சொல்லக் கதிரேசன் சொன்னார், "தீயவர்கள் தண்டனைகளைப் பெற்றாலும் திருந்தமாட்டார்கள். ஆனால் உங்களது செயலால் உருத்திரகுமாரனின் மனம் மாற வேண்டும். இல்லாவிட்டால் அவன் கற்ற கல்வியால் பயன் இல்லை என்றார்" என்றது குமரன் எலி.

"தண்டனைகள் பல கிடைத்தும் திருந்தாத உருத்திரகுமாரனின் மனம் மாறாது" என்றது லட்சுமி எலி.

**173. சிற்றின்பம் வெ.்.கிஅ றன்அல்ல செய்யாரே**

**மற்றின்பம் வேண்டு பவர்.**

"உருத்திரகுமாரன் திருந்த மாட்டான். பலர் இவனது தீயசெயல்களுக்காக மறைந்திருந்தும், நேரடியாகவும் தாக்கிய போது திருந்தாதவன் திருநாவுக்கரசு ஐயாவின் உபதேசத்துக்காகத் திருந்தப் போகிறானா?" என்று நவராசா கேட்க, திருநாவுக்கரசு சொன்னார், "அவன் தான தர்மங்கள் செய்ததில்லை, சிரித்துப்பேசுவதில்லை, மற்றவர்களை மதித்ததில்லை அதனால் அப்படி வாழ்கின்றான். தானதர்மங்கள் செய்ய வேண்டும், சிரித்துப் பேச வேண்டும், மற்றவர்களை மதிக்க வேண்டும். அப்படி வாழ்ந்தால் எவ்வளவு இன்பங்கள் வரும் என்று அவனுக்குத் தெரியாது. அதனால் தான் அப்படி வாழ்கிறான். நவம் உன்னைப் பற்றி நான் அறிந்து கொண்டேன். அறநெறிப்படி வாழ்ந்து அதனால் வரும் இன்பத்தை விரும்பும் நீ, அறமல்லாத செயல்களைச் செய்வியா..? செய்யமாட்டாய். அது போல அறமல்லாத செயல்களைச் செய்து அதனால் வரும் துன்பங்களை இன்பம் எனக் கருதுபவன் அறச்செயல்களைச் செய்யமாட்டான். அவனுக்கு அறநெறியில் வாழும் நாம் ஏன் துன்பத்தைக் கொடுப்பான். அவன் வேலை இழந்தால் பல பாதிப்புக்கள் வரும். என்னால் அதைத் தாங்க முடியாது" என்றார் திருநாவுக்கரசு. நவராசா பின் எதுவும் பேசவில்லை" என்றது குமரன் எலி.

"நவராசா ஆத்திரப்படும். பின் அமைதியாகிவிடும். அது அவனது இயல்பு. இயல்பை மாற்ற முடியாது" என்றது லட்சுமி எலி.

**174. இலம்என்று வெ.்.குதல் செய்யார் புலம்வென்ற**

**புன்மைஇல் காட்சி யவர்.**

"புலன்களை அடக்கும் ஆற்றல் உடையவர்கள் தாம் வறுமையாக இருந்தாலும் கூடத் தமது வறுமையை எண்ணி ஒரு போதும் பிறரின் பொருளைக் கவரமாட்டார்கள். கோடீஸ்வரனாக இருந்தாலும் பொருளாசையால் அவதிப்படும் புலன்களை அடக்காது அவற்றின் போக்கிற்கேற்ப வாழ்ந்து பலர் பெருந்துன்பங்களை அடைகின்றனர். தம் பொருளிலேயே அவாக்கொள்ளாத பலர் இருக்கிறார்கள்" என்று கூறி விட்டுத் திருநாவுக்கரசு கதிரேசனைப் பார்த்தார். "படிக்காவிட்டாலும் மனதளவில் உள்ள அறிவு தீயசெயல்களைச் செய்ய விடாது. துரைராசாவுக்குப் பிள்ளைகள் இல்லை. தொழில் செய்யக்

கூடியவரும் இல்லை. எண்பது வயது. அவரும் அவரது மனைவியும் நடராசாவினுடைய தென்னந்தோப்பில் வசிக்கிறார்கள். அங்கு கூலி வேலை செய்து தான் இருவரும் வாழ்கிறார்கள். நீங்கள் இருவரும் எந்த வேலையும் செய்ய வேண்டாம். ஐம்பது வருடங்களாகச் செய்தது போதும். ஆறுதலாக இருங்கள்" என்று நடராசா சொன்னால் துரைராசா கேட்பதில்லை. பழுத்து விழும் தேங்காய்களைப் பொறுக்கிப் போடுதல், ஓலைகளைக் கிடுகாகப் பின்னல் போன்ற வேலைகளைச் செய்கிறார்கள் என்று நடராசா குறைப்படுவான். தர்மத்தின் மீது நம்பிக்கை உள்ளவர்கள் வறுமை வந்த போதும் பிறரின் பொருளை விரும்பமாட்டார்கள்" என்று கூறினார். நான் ஒரு முறை துரைராசாவைப் பார்க்க வேண்டும்" என்றது குமரன் எலி.

"இப்போ வாழ்கின்றவர்கள் துரைராசா வாழத் தெரியாதவன் என்பார்கள்" என்றது லட்சுமி எலி.

**175. அஃகி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்**

**வெஃகி வெறிய செயின்.**

"இன்றைக்கு நான் நடராசாவின் தென்னந்தோப்புக்குச் சென்று துரைராசாவையும் அவரது மனைவி காமாட்சியையும் பார்த்தேன். துரைராசா முதியவரென்றாலும் உற்சாகமாக வேலை செய்கிறார். அங்கு சபேசன் என்றொரு வாலிபன் வேலை செய்கிறான். அவன் வேலை செய்யாவிட்டாலும் துரைராசா ஏசுவாராம். நான் போகும் போது துரைராசா சபேசனை ஏசிக்கொண்டிருந்தார்,"சபேசா, வாங்கும் கூலிக்கு வேலை செய். வேலை செய்யாது வாங்கும் கூலி தங்கமாட்டாது. நீ மூன்று வருடங்களாக வேலை செய்தும் கையில் காசில்லாமல் துன்பப்படுகிறாய். அதற்குக் காரணம் தீயவழியில் நீ உழைப்பதைச் செலவு செய்தமையே. தீயவழியில் நடவாதே, தீயவர்களுடன் சேராதே" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது சபேசன் சொன்னான்,"உனது சொந்தக்காரன் தான் உருத்திரகுமாரன். அவனுக்கு ஏன் நீ புத்திமதி சொல்லித் திருத்தவில்லை"

"நான் சொன்னேன். ஒரு முறை சொன்னால் கேட்கக் கூடியவனுக்குத் தான் சொல்ல முடியும். பிறர் பொருளை அடைய எண்ணி, தீயசெயல்களில் ஈடுபடுபவர்கள், எவ்வளவு தான் கற்றாலும் அதனால் பயனடைய மாட்டார்கள். உருத்திரகுமாரனை மதிப்பவர் யார்? சொல்லு பார்ப்பம். தீயவர்களைப் பற்றிப் பேசி வாழ்நாளைப் போக்காது நல்லவர்களைப் பற்றிப் பேசி அவர்களைப் போல வாழப்பார்" என்று கூறினார்" என்றது குமரன் எலி.

"அவன் சின்னப் பொடியன். எதையும் ஆராயாமல் தான் கதைப்பான்" என்றது லட்சுமி எலி.

**176. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள் வெஃகிப்**

**பொல்லாத சூழக் கெடும்.**

"சபேசா, நீ செய்வது எதுவும் எனக்குத் தெரியாது என்று எண்ணாதே. நீ நேற்று இருபத்தைந்து தேங்காய்களை உரித்துக் கொண்டு போய் பொன்னம்பலத்தின் கடைக்குக் கொடுத்துள்ளாய். எனக்கு நம்பிக்கையான ஒருவர் சொன்னார்" என்று துரைராசா சொல்ல சபேசன் திகைத்துப் போனான், "அப்பு, தெரியாமல் செய்திட்டன். முதலாளிக்குச் சொல்லாதைங்கோ"

கெஞ்சினான் சபேசன், "மகனே, மனிதர்கள் அருளுடையவர்களாக வாழவேண்டும். அப்படி அருள் உள்ளவர்களாக வாழ்ந்தால் வாழ்பவன் ஒழுக்கமுள்ளவனாக வாழ்வான். உனது தந்தை எனது நண்பர். அவர் ஒழுக்கமுள்ளவர். அவர் உன்னைக் கற்பிக்க எவ்வளவு முயற்சியெடுத்தார். அதை நீ அலட்சியம் செய்தமையால் தான் இப்படி வாழ்கிறாய். ஒரு நல்ல மனிதனின் பிள்ளை நீ பிறரின் பொருளைக் களவெடுத்தால் அழிந்து போவாய். சிறு களவுகள் பின் பெருங்களவாக மாறும். அதனால் பெருந் துன்பங்கள் பலவும் வரும். மகனே, இனிமேல் இப்படி நடவாதே. உனக்குக் கஷ்டமென்றால் மேலதிகமாக வேலை செய். நான் நடராசாவுக்குச் சொல்லி உனது வேதனத்தை அதிகரிக்கும் படி கூறுகிறேன்"என்று சொன்னார். அவர் கற்காவிட்டாலும் கற்றவரை விட அறிவுள்ளவராக இருக்கிறார்" என்றது குமரன் எலி.

"இந்த ஊரில் கற்றவர்களை விட அறிவுள்ளவராகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருப்பவர்கள் கற்காதவர்கள்" என்றது லட்சுமி எலி.

**177. வேண்டற்க வெ்.கிஆம் ஆக்கம் விளைவயின்**

**மாண்டற்கு அரிதுஆம் பயன்**

"மகனே, உழைத்து முன்னேறு. முயற்சியுடையவன் வானத்தையும் வில்லாக வளைப்பான். முயற்சி செய்யும் போது தோல்விகள் தொடர்ந்து வரும். தோல்விகளை எண்ணிக் கவலைப்பட்டால் முன்னேறவே முடியாது. எமது ஊரில் பெரும் பணக்காரனுள் ஒருவர் கதிரேசன். அவர் ஒரு கூலிக்காரனின் மகன் என்று இப்போதும் சொல்வார். பிறப்பு முக்கியமில்லை. பிறந்த பின் செய்யும் செயல்களே முக்கியத்துவம் வாய்ந்தவை. உருத்திரகுமாரனின் தந்தை பணக்காரன். தந்தையின் பணம் அவனைப் பணக்காரனாக்கியது. நாளை நீயும் பணக்காரனாகலாம். பணக்காரனான பின் ஒழுக்கமாக வாழ்பவன் தான் உண்மையான பணக்காரன். பிறரின் பொருளைக் களவெடுத்துப் பணக்காரனானாலும் அது பெரும் துன்பத்தைத் தான் தரும். தருமமான முறையில் பணத்தைத் தேடாவிட்டால் அப்பணம் தேடியவனுக்குத் துன்பத்தைத் தான் கொடுக்கும். நீ பிறரின் பொருளை விரும்பக் கூடாது. அதனால் வரும் ஆக்கம் துன்பங்களையே தரும். ஊரில் உள்ளவர்களைப் பார்த்து அதைத் தெரிந்து கொள். கதிரேசன் பணக்காரன். அவரது பணத்தேடல் பற்றி யாராவது குறை சொல்கிறார்களா..? உருத்திரகுமாரனது பணத்தேடல் பற்றி ஆயிரமாயிரம் குறைகள் சொல்வார்கள். பழியில்லாத பணம் தான் ஆக்கத்திற்கு உதவும்" என்று துரைராசா சபேசனுக்குக் கூறினார்" என்றது குமரன் எலி.

"சபேசன் ஆவது பேச்சைக் கேட்டால் உருப்படுவான்" என்றது லட்சுமி எலி.

**178. அ்.காமை செல்வத்திற்கு யாதெனின் வெ்.காமை**

**வேண்டும் பிறன்கைப் பொருள்.**

"ஒருவன் தனது செல்வம் குறையாது பெருக வேண்டுமென்று நினைத்தால், அவன் தர்மமில்லாத வழிகளில் பிறரின் செல்வத்தைக் கவர நினைக்கக் கூடாது. உருத்திரகுமாரன் பிறரின் சொத்தில் ஆசைப்பட்டதால் அவனது மதிப்பு மரியாதை மட்டுமல்ல அவனது தொழிலையும் இழக்க நேரிட்டது. திருநாவுக்கரசு தன்னால் அவனுக்குத் துன்பம் நேரக்கூடாதென்பதற்காக அவனை மன்னித்தார். இல்லாவிட்டால் அவன் சிறைக்குச் சென்றிருப்பான். அவனைப் போலப் பிறரின்

பொருட்களில் நீ ஆசைப்பட்டால் சிறை செல்ல நேரிடும். இந்த தென்னந்தோட்ட முதலாளியாக உள்ள நடராசா துரைசிங்கத்திடம் மிகமிக நேர்மையாக தொழில் பார்த்தமையால் இந்தத் தோட்டத்தை அவனுக்கு எழுதிக் கொடுத்தார். மிகவும் நேர்மையாகக் கடமை செய்தமையால் பிள்ளைகள் இல்லாத துரைசிங்கம் தனது சொத்துக்களை நடராசாவுக்குக் கொடுத்தார். நடராசா துரைசிங்கத்தையும் அவரது மனைவியையும் தனது பெற்றோரைப் போலப் பராமரித்தான். நேர்மையும், ஒழுக்கமும், பிறர் சொத்தை விரும்பாமையும் தான் நடராசாவைப் பணக்காரனாக்கியது" என்று துரைராசா சபேசனுக்குச் சொன்னார்" என்றது குமரன் எலி.

"நல்லவன் வாழ்வான்" என்று பெரியவர்கள் சொல்வதில் அர்த்தமுள்ளது" என்றது லட்சுமி எலி.

**179. அறன் அறிந்து வெ.்.கா அறிவுடையார்ச் சேரும்**

**திறன் அறிந்து ஆங்கே திரு.**

"சபேசா பிறரின் பொருளை விரும்பாதிருக்கும் அறவானைத் திருமகள் தானே தேடி வந்து அவர்களுடன் இருந்து அருள்வாள் என்பார்கள். இவ்வூரில் வாழும் அறவான்களான கதிரேசன், பரஞ்சோதி, நடராசா, தனிகாசலம் என்பவர்களைப் பார். அவர்கள் எதற்கென்றாலும் கவலைப்பட்டவர்களா..? துன்பப்பட்டவர்களா? இல்லைக் கஷ்டப்பட்டவர்களா? அது போல உருத்திரகுமாரன், மார்க்கண்டு போன்றவர்களைப் பார். அவர்கள் எப்போதென்றாலும் மகிழ்வாக இருந்தார்களா..? உலகில் வாழ்வோரைப் பார்த்துத் தான் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல் வேண்டும். நீ இத் தோப்பில் பல நாட்களாகத் திருடி வருகிறாய். தயவு செய்து அதை விட்டு விடு. அது உனது எதிர்காலத்தை வளப்படுத்தும்" என்று துரைராசா கூறியதை அமைதியாக இருந்து சபேசன் கேட்டுக்கொண்டிருந்தான். உண்மையிலேயே துரைராசா நல்லவர் தான்" என்றது குமரன் எலி.

"தள்ளாத வயதிலும் உழைத்துச் சாப்பிட விரும்பும் அவர் நல்லவர் மட்டுமல்ல அறம் அறிந்தவர்" என்றது லட்சுமி எலி.

**180. இறல்ஈனும் எண்ணாது வெ.்.கின் விறல்ஈனும்**

**வேண்டாமை என்னும் செருக்கு.**

"சபேசா, பிறரின் பொருளை விரும்பினால் அது அழிவைத் தரும். இந்தத் தோப்பின் சொந்தக்காரனான துரைசிங்கத்திற்குப் பிள்ளை இல்லாத குறையைத் தீர்த்து ஒழுக்கமாக வாழ்ந்தமையால் நடராசாவுக்கு இத்தோப்பை எழுதிக் கொடுத்தார். அத்துடன் எனது பிற்கால வாழ்வுக்காகப் பத்து இலட்சம் ரூபா எனது பெயரில் வைப்பிலிட்டுள்ளார். இது ஒழுக்கமாக வாழ்ந்தமைக்காகத் திருமகளால் தரப்பட்ட பரிசு. எனக்கு சிறிய ஒரு வசதியான வீடு உண்டு. மூன்று வேளையும் வயிறார உண்ண உணவும் உண்டு. சுத்தமான உடைகள் உண்டு. இவ்வளவும் போதும். ஆசைப்பட ஆசைப்படப் பிறரின் சொத்தின் மீது மிகுந்த ஆசை உண்டாகும். எனக்குப் பிள்ளைகள் இல்லை. நீ என்னுடன் விரும்பினால் இரு. இந்த வீடு நடராசாவினது. என்னுடன் இருந்தால் உனது சீவிய காலம் முழுக்க இங்கே இருக்கலாம். என்னிடம் பெரிதாகப் பணமில்லை. இருப்பதை நான்

உனக்குத் தருகிறேன். என்னோடு இருப்பாயா..?” என்று துரைராசா கேட்டார். அதைக் கேட்டு சபேசன் திகைத்துப் போனான். “அப்பு, இது வரை யாரும் எனக்கு நல்லவற்றைச் சொன்னதில்லை. சொல்லியிருந்தால் இப்படி வாழ்ந்திருக்கமாட்டேன். உருத்திரகுமாரன், மார்க்கண்டு, கஜேந்திரன் போன்றோர் என்னைத் திருடச் சொன்னார்கள். அதனால் எனது வாழ்க்கை இப்படியாகி விட்டது. இனிமேல் நான் திருடமாட்டேன்” என்று கண்களால் கண்ணீர் வடியச் சபேசன் கூறினான்” என்றது குமரன் எலி.

“தீயவர்கள் தீயசெயல்களைச் செய்து கொண்டு அறியாப் பருவத்தினரையும் கெடுக்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**புறங்கூறாமை– 19**

**181. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்**

**புறங்கூறான் என்றல் இனிது.**

“தாத்தா உருத்திரகுமாரன் ஆசிரியர் தான் எனது வகுப்பாசிரியர். அவர் தனியார் கல்விக் கூடங்களில் பகல் இரண்டு மணியிலிருந்து இரவு பத்து மணிவரை கற்பித்து விட்டுப் பாடசாலைக்கு வந்து புத்தகத்தில் ஏதாவது ஒரு பக்கத்தைப் பார்த்து எழுதும் படி கூறி விட்டு நித்திரையாகி விடுவார். அது எமக்குக் கொண்டாட்டம். பாடம் முடிவடையும் நேரம் வந்ததும் மணியடிக்க நாம் அவரைத் தட்டி எழுப்பி விடுவோம்.அவர் எழுந்து சென்று அடுத்த வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு வேலை கொடுத்து விட்டுப்படுத்து விடுவார். ஓர் ஒழுக்கமான ஆசிரியர் இருந்திருந்தால் எமது நிலை மாறியிருக்கும். பின் பாடசாலைப் படிப்பு முடிந்ததும் மாணவர்கள் சிலரை அழைத்து வந்து தனது கமத்தில் வேலை வாங்குவார். ஆனால் சம்பளம் தரமாட்டார். மிகவும் கேவலமான ஆசிரியர் அவர். அவரோடு கதைக்க அதிபருக்குப் பயம். அதிபருக்கு அதிபர் தரம் இல்லாததால் எல்லா ஆசிரியர்களையும் சமாளித்தே பாடசாலையை நடத்தினார்” என்று சபேசன் கூறும் போது துரைராசா சொன்னார்,“மகனே, ஒருவன் அறநெறிப்படியோ இல்லை அறச்செயல்களைச் செய்யாமலோ வாழலாம். ஆனால் ஒருவரைப் பற்றிப் புறங்கூறாது வாழ்வது சிறப்பானது. புறங்கூறிப் பழகாதே” என்று சொல்லச் சபேசன் அதை ஏற்றுக்கொண்டான்” என்றது குமரன் எலி.

“கோவில் பூசை நேரத்தில் ஒவ்வொருவரும் அடுத்தவர்களைப் பற்றிப் பேசத் தானே வருகிறார்கள். கண்கள் தீபத்தைப் பார்க்கும். கைகள் தலைக்கு மேலே இருக்கும். ஆனால் வாய் அடுத்தவர்களைப் பற்றிக் கதைக்கும்” என்றது லட்சுமி எலி.

**182. அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீதே**

**புறன் அழீஇப் பொய்த்து நகை.**

உருத்திரகுமாரன் ஆசிரியர் தோப்புக்கு வந்து சபேசனைச் சந்தித்துச் சொன்னார், ‘‘வீட்டில் கொஞ்சம் வேலையிருக்கு நாளைக்கு வா. இப்போது ஏன் நீ வீட்டுப் பக்கம் வருவதில்லை’’ என்று கேட்க சபேசன் சொன்னான், “தோப்பில் வேலை அதிகம். நீங்கள் என்னைக் கற்பித்த ஆசான்.

உங்களை மறக்க முடியுமே..? உங்கள் மனைவி மிகவும் நல்லவர். சாப்பாடு வேண்டியளவு தருவார். அதனால் உங்கள் இருவரையும் நான் மறக்கமாட்டேன்" என்று கூறினான். உருத்திரகுமாரன் சென்றதும் துரைராசாவுக்குச் சொன்னான், "இவருக்கு வீட்டில் வேலையில்லை. நான் பத்து நாட்களாகத் தேங்காயைத் திருடிக் கொண்டு சென்று கொடுக்கவில்லை. ஐம்பது ரூபா பெறுமதியான தேங்காய்க்குப் பத்துப் பதினைந்து ரூபா தருவார். நான் திருடுவதால் எனக்குப் பயனில்லை என்று நீங்கள் புத்திமதி கூறிய பின் உணர்ந்து கொண்டேன். உங்களைப் போல் ஒருவர் முன்பே தடுத்திருந்தால் நான் திருடனாகியிரேன்" என்றான். அதற்கு துரைராசா சொன்னார்,"சபேசா, முன்பு நடந்த தீயசெயல்களை மறந்து விடு. ஒருவன் இல்லாத போது பழித்துப் பேசி, அவன் இருக்கும் போது புகழ்ந்து பேசுவது என்பது மிகமிகத் தீயசெயல். எதையும் முகத்திற்கு நேரே கூறப்பழகு. இல்லாவிட்டால் பேசாமல் இரு" என்று துரைராசா கூறினார்" என்றது குமரன் எலி.

"தர்மம், அறம், ஒழுக்கம் என்றெல்லாம் கூறும் மனிதர்கள் ஒரு போதும் புறங்கூறாது இருந்ததில்லை. இது உங்களுக்குத் தெரியாதா? கோவில் மரநிழலில் இருந்து எல்லோரும் உதைத் தானே பேசுகிறார்கள்" என்றது லட்சுமி எலி.

**183. புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்**

**அறம்கூறும் ஆக்கம் தரும்.**

"அன்று வெள்ளிக் கிழமை. துரைராசா ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஆசார சீலராகக் கோவிலுக்கு வருவார். இது வரை காலமும் புதினம் பார்க்கக் கோவிலுக்கு வந்த சபேசன் அன்று துரைராசாவின் வேண்டுதலுக்கிணங்க ஆசார சீலனாக வந்திருந்தான். அதைக் கண்ட உருத்திரகுமாரன் அவனை அழைத்துச் சென்று, "சபேசா பதினைந்து நாட்களாக நீ தேங்காய் கொண்டு வந்து தரவில்லை. ஏன்?" என்று கேட்டான். "எனக்குத் திருட விருப்பமில்லை. துரைராசாத் தாத்தா எனக்குப் புத்திமதி கூறியதால் நான் திருந்தி வாழ விரும்புகிறேன்" என்றான். அதற்கு உருத்திரகுமாரன் சொன்னான், "மடையா, புத்தியுள்ளவனால் தான் அகப்படாமல் திருடிப் பணம் சேர்க்க முடியும். அவர் ஒழுக்கம் என்று சொல்லிச் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் இருந்து உன்னையும் கெடுக்கிறார். அவர் நீ நினைப்பது போல ஒழுக்கமானவர் அல்ல. அவரும் தேங்காய்களைத் திருடி விற்றவர் தான். வேண்டுமானால் நீ அவரோடு சேர்ந்து தொழிலைச் செய்" என்று கூறச் சபேசன் சொன்னான், "வாத்தியார், ஒருவர் இல்லாதபோது அவரைப் பற்றிப் பழித்துக் கூறிப்பொய்யாக வாழ்வதை விட வறுமைப்பட்டு இறப்பது தான் அறம் என்று தாத்தா கூறுவார். இது ஆசிரியரான உங்களுக்குத் தெரியாதா என்று கேட்டவன்" என்றது குமரன் எலி.

"எதைக் கேட்டாலும் பலருக்குப் புரியாது. ஆசிரியர்கள் என்று சொல்கிறவை ஒழுக்கத்தைக் கற்பித்தத் தாமும் பின்பற்றி வாழ்ந்தால் இன்றைக்குச் சமூகத்திலை இவ்வளவு சீர்கேடுகள் நடக்குமே?" என்றது லட்சுமி எலி.

**184. கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க**

**முன்இன்று பின்நோக்காச் சொல்.**

“தத்துவங்கள், உபதேசங்கள் எல்லாம் கேட்பதற்கு நன்றாக இருக்கும். ஆனால் வாழ்க்கைக்கு உதவாது. வாழ்வதற்கு ஆதாரமானவற்றைப் பணத்தால் மட்டுமே தேட முடியும். பணம் எப்படியும் தேடலாம். நல்லா இருந்த உன்னைக் கெடுத்தது அந்தத் துரைராசாக் கிழவன். அவன் வாழ்க்கையில் எதைக் கண்டவன். முன்பு நேர்மையீனமாக வாழ்ந்து துன்பப்பட்டவன். அவன் பலரிடம் வாங்கிய கடன்களை இதுவரை கொடுத்ததில்லை. கேட்கப்போனால் பொல்லெடுப்பான். முன்பு கள்ளுச் சீவுபவனிடம் வாடிக்கையாகக் குடித்து விட்டுக் குடித்த காசையே கொடாதவன். இப்ப உனக்குப் புத்திமதி சொல்கிறான்” என்று உருத்திரகுமாரன் கூறியபோது சபேசன் சொன்னான், “வாத்தியார், நீங்கள் சொன்ன எவற்றையும் நான் கேள்விப்படவில்லை. தாத்தா அப்படி வாழ்ந்திருக்கமாட்டார். அப்படித் தான் வாழ்ந்தாலும் இப்போ திருந்தி விட்டார் தானே. எமது மதத்தில் பெரும் தீயசெயலில் ஈடுபட்டவர்கள் தானே முனிவர்களாகவும், ரிஷிகளாகவும், சமய ஞானிகளாகவும் இருந்திருக்கிறார்கள். சமூகத்திற்கு முன்மாதிரியாக வாழவேண்டிய நீங்கள், ஒருவனுக்கு முன்னால் நின்று இரக்கமற்ற தீயசொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால் அவனில்லாத இடத்தில் அவனைப் பற்றி நல்லவற்றைக் கூடச் சொல்லக் கூடாதென்று தாத்தா கூறுவார். ஏனென்றால் கேட்பவர்கள் அதைத் தவறாகப் புரிந்து கொண்டால் பின் விளைவுகள் பலவும் வரும்” என்று சபேசன் கூறியதைக் கேட்டேன்” என்றது குமரன் எலி.

“எந்தத்தத்துவமும் அவனுக்கு ஏறாது. தீயவை தான் ஏறும்” என்றது லட்சுமி எலி.

**185. அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்**

**புன்மையால் காணப் படும்.**

“சபேசா, அவசரப்படாமல் இருந்து யோசித்துப்பார். பொருளை விரைவாகத் தேடவேண்டும்...” என்று உருத்திரகுமாரன் சொன்ன போது சபேசன் இடைமறித்துச் சொன்னான்,“வாத்தியார், ஒவ்வொருவரையும் இவ்வூர் மக்கள் கணித்து வைத்துள்ளனர். யார் அறவான், யார் தர்மவான், யார் கெட்டவன், யார் திருத்த முடியாதவன் என்று அவன் பேசும் வார்த்தைகளில் இருந்து கண்டு பிடித்துக் கணித்துள்ளனர். அது சரியான கணிப்பு. துரைராசாவைப் பற்றி உங்களைத் தவிர வேறு யாரும் தரக்குறைவாகச் சொன்னதில்லை. நீங்கள் கூறிய ஆலோசனைப்படி திருடி வந்தேன். அப்போது எந்நேரமும் மனம் அச்சம் முறும், யாராவது கண்டு விடுவார்களோ என்று பயப்படும். இப்போ துரைராசாவின் புத்திமதிக்கும் பின் மகிழ்வாகவும், நிம்மதியாகவும் இருக்கிறேன். இனிமேல் தீய வாழ்வு வேண்டாம். நீங்கள் நல்ல மனிதராக இருந்தால் மற்றவர்களைப் பற்றிப் புறங் கூறமாட்டீர்கள். தவறு செய்வது இயல்பு. அதைத் தவறு என்று உணர்வது புத்திசாலித்தனமானது. உங்களைப் பற்றி நான் முன்பு ஆராயவில்லை. தாத்தா நேர்மையாக வாழ்பவர். அவரைப் பற்றிக் குறை கூறும் நீங்கள் இழிவானவர் என்பதை உங்களது வாய்ச் சொற்கள் காட்டி நிற்கின்றன” என்று சபேசன் கூறும் போது துரைராசா அங்கே வர உருத்திரகுமாரன் கதைப்பதை நிறுத்தினான்” என்றது குமரன் எலி.

“ஊரவரை அவன் நிம்மதியாக வாழவிடான். தானும் நிம்மதியாக வாழமாட்டான்” என்றது லட்சுமி எலி.

**186. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்**

**திறன்தெரிந்து கூறப் படும்**

“அப்போது அங்கு வந்த சிவலிங்கம் சொன்னான், “வாத்தியார் நான் உங்களிடம் படித்தனான். அதனால் உங்களை ஊரவர் மதியாவிட்டாலும் நான் மதிக்கிறனான். பழனியின் எருத்து மாடுகளை யாரோ களவாகப் பிடித்துச் சென்று விட்டனர். நீங்கள் பழனிக்கு என்னை விசாரித்துப் பார்க்கச் சொன்னீர்களாம். அவன் என்னென்றால் தன்ரை மாட்டுக் களவில் எனக்கும் தொடர்பிருக்கென்று கூறுகிறான். நான் களவெடுப்பவனுமல்ல, களவுக்கு உடந்தையானவனும் அல்ல. சபேசனிடம் தேங்காயைக் களவெடுத்து விற்க ஆளில்லாமல் உருத்திரகுமாரனிடம் கொடுக்கிறாய். அவன் உனக்கு அஞ்சைப்பத்தைத் தந்து விட்டு ஐம்பது அறுபது ரூபாவுக்கு விற்கிறான். இதில் உனக்கென்ன லாபம் என்று கேட்டதுக்காகப் பழனியிடம் இப்படியா சொல்வது?” என்று கேட்டான். அதற்குத் துரைராசா சொன்னார்,“ஒருவன் மற்றவர்களைப் பற்றிப் புறம் கூறினால் அவன் உண்மையாகச் செய்தவற்றைச் சிலர் ஆராய்ந்து கூறுவர். அது கடுமையாக இருக்கும்” என்றார். அப்போது சிவலிங்கம் சொன்னான்,“நீங்கள் உத்தமரா...? திருநாவுக்கரசின் காணிக்குக் கள்ள உறுதி எழுதினீர்கள். அதனால் வேலையும் பறிபோனது” என்று சிவலிங்கம் சொன்ன போது உருத்திரகுமாரன் அதைக்கேளாதவன் போலச் சென்றான்” என்றது குமரன் எலி.

“அவன் முன்பே கேட்டிருந்தால் இப்படியான செயல்கள் நடந்திராது” என்றது லட்சுமி எலி.

**187. பகச்சொல்லி கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**

**நட்புஆடல் தேற்றா தவர்**

“பழனி நல்லவன். அவனது தோட்ட வேலைகளை நான் தான் செய்வது. என்னில் விசுவாசமுள்ளவன். இருந்தும் என்னை நம்பாது கேட்டுவிட்டான். அது தான் கவலையாக இருக்கு. முன் பின் நான் களவெடுத்திருந்தால் கேட்டது பிழையில்லை. நான் கள்ளுக் குடிப்பவன். அதனால் குடிகாரர்களுடன் சேர்ந்து செய்திருப்பன் என்றானாம். என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை” என்று சிவலிங்கம் கண்கலங்கிய போது துரைராசா சொன்னார்,“மகனே கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். அவன் உன்னைப் பழிவாங்குவதற்காக இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லியிருப்பான். அதைப் பழனி நம்பிவிட்டது. மகிழ்ச்சியாகப் பேசி நட்புக்கொள்ளும் தன்மையை அறியாதவர்கள் புறம்பேசி உற்ற நண்பர்களையும் பிரிந்து விடுவார்கள். ஆகையால் கவலைப்படாமல் ஆறுதலாக ஆராய்ந்து நீ குற்றமற்றவன் என்பதை நிரூபி” என்று துரைராசா சொன்னார்” என்றது குமரன் எலி.

“மனிதர்கள் தமது நலனுக்காக எதையும் செய்யத்தயாராக இருப்பார்கள். அகப்பட்டால் காலிலும் விழுவார்கள்” என்றது லட்சுமி எலி.

**188. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்**

**என்னைகொல் ஏதிலார் மாட்டு**

“உருத்திரகுமாரனது மனைவியின் குடும்பத்தினர் பரம்பரைச் சைவம். மாமிசம் உண்பதில்லை. மதுபான வகைகளைக் குடிப்பதில்லை. ஆனால் உருத்திரகுமாரன் மாமிசம் உண்பான். மதுபான வகைகளைக் குடிப்பான். அது மனைவி பிள்ளைகளுக்குத் தெரியாது. அவனது தென்னந்தோப்பில் ஒரு வீடு உள்ளது. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தென்னந்தோப்பில் வேலை செய்வதில்லை. அவ்விரு நாட்களும் பாடசாலைக்கும் விடுமுறை. இரண்டு நாட்களும் நான் தான் மாமிசம் வாங்கி வந்து கொடுப்பேன். மதுபானம் வாங்கி வந்து கொடுப்பேன். இப்படியெல்லாம் பல்வேறு வகையான உதவிகளை மிகமிக இரகசியமாகச் செய்யும் என்னையே புறங்கூறிப் பிரித்தவன், பழக்கமில்லாதவர்களிடத்தில் எப்படி நடப்பான்?” என்று சிவலிங்கம் கூறும் போது துரைராசா சொன்னார்,“தீயவனுக்கு நல்லவரும் கெட்டவர்களும் ஒரே மாதிரியானவர்கள். அது போலப் புறங்கூறுபவர்களுக்கு நண்பர், அயலவர், உற்றார் உறவினர் என்றபேதம் கிடையாது. ஆதலால் இனிக் கவனமாக அவனுடன் பழகு” என்று சொல்லச் சிவலிங்கம் சொன்னான்,“அவன் கொடிய நச்சுப் பாம்பை விடக் கொடியவன். நச்சுப் பாம்பு தன்னுடன் அன்பாகப் பழகுபவர்களைத் தீண்டாதாம்” என்று சிவலிங்கம் சொல்லியும் உருத்திரகுமாரன் அதைக் கவனிக்கவில்லை” என்றது குமரன் எலி.

“நச்சுப்பாம்பிற்குப் பல்லில் விஷம். மனிதருக்கு உடல் முழுவதும் விஷம்” என்றது லட்சுமி எலி.

**189. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்**

**புன்சொல் உரைப்பான் பொறை.**

“எத்தனை வகையான கொடியவர்களினதும் பாரத்தைச் சுமப்பது தனது கடன் என்று நினைத்துப் பூமாதேவி சுமக்கிறாள். உருத்திரகுமாரன் மனிதனே இல்லை. அவனை எவற்றுடனும் ஒப்பிட முடியாது ஏனென்றால் கொடிய மிருகங்களைக் கூட நம்பலாம். இவனை நம்ப முடியாது. தருணம் பார்த்து ஏமாற்றுவதில் வல்லவன் அவன். ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பழித்துப் பேசக்கூடாது என்ற இங்கிதமில்லாதவனை வெறுத்து ஒதுக்கினாலும் நாலைந்து தினங்களில் திரும்பி வந்து ஒட்டிக் கொள்வான்” என்று சிவலிங்கம் கூறினான்” என்றது குமரன் எலி.

“ரோசமில்லாதவன் ராசாவிலும் பெரியவன் என்பார்கள்” என்றது லட்சுமி எலி.

**190. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்**

**தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு**

“மகனே, ஒருவன் பிறரின் மீது குற்றம் சுமத்துமுன் தன்மீது ஏதாவது குற்றமிருக்கா என்று ஆராய்ந்து தானேயானால் பிறரின் மீது குற்றம் சொல்லமாட்டான். கதிரேசன் எப்பொழுதாவது யாரையும் குறை கூறியதில்லை. நீ சென்றவாரம் உனது மனைவி வைத்த கறியில் உப்புக் கூடிவிட்டதென்று உனது மனைவிக்கு அடித்தாய். கதிரேசனானால் உப்புச் சிறிது கூடிவிட்டது. கொஞ்சம் தேங்காய்ப்பால் விட்டுச் சூடாக்கு என்பார். தனிக்காசலமானால், “இன்று உனக்கு என்ன நேர்ந்தது? உப்புச் சிறிது கூடச் சேர்த்து விட்டாய். எனக்கு பிறைசர் இருக்கு. உப்பு அதிகம் பாவிக்கக் கூடாது என்பது தெரியும்

தானே” என்பார். குற்றங் காண்பது எல்லோருக்கும் இலகுவான ஒரு செயல். நிறைவைச் சிலரால் தான் கண்டு கொள்ள முடியும் எனவே குற்றத்தைக் கண்டு பிடிக்காது தான் திருந்தி வாழப்பழகுதல் வேண்டும்” என்று துரைராசா சொன்னார்” என்றது குமரன் எலி.

“நீங்கள் சொல்வது போல வாழ்பவர் யார்?” என்றது லட்சுமி எலி.